கல்கி

KALKI 11.2.96 ரூ. 3.00



வை.கோ.
சிறப்புப்
பேட்டி!

பணம் குவிக்கும் பதவியா IAS?



"வரி சேமிப்புகள்,
கவர்ச்சியான இலாபம்,
இன்சுரன்ஸ் காப்பு,
அனைத்தும்
ஒரே திட்டத்திலா?"

யூலிப்

யூனிட் லிங்க்ட்
இன்சுரன்ஸ் ப்ளான்

ஆமாம்! யூலிப் (யூனிட் இணைந்த இன்சுரன்ஸ் திட்டம்) யூடிஐ-யின், ஒன்றைவிட அதிக நிதி அனுகூலங்களை மனதில் வைத்துள்ள ஒரு திட்டம் இது இதனால் கிடைக்கும் நன்மைகளைப் பாருங்கள்.

- **வரி விலக்கு:** உங்கள் முதலீடுகள், வருமான வரி சட்டத்தின் பிரிவு 88-ன் கீழ் வரி விலக்கைப் பெறுகின்றன. உங்கள் கணவன்/மனைவி அல்லது குழந்தைகள் பெயரில் செய்யப்படும் முதலீட்டிற்கும் வரி விலக்கு உண்டு.
- **வருடாந்திர டிவிடெண்ட் மற்றும் முதிர்வு போனஸ்:** வருடாந்திர டிவிடெண்ட் திட்டத்தில் மறு முதலீடு செய்யப்படுகிறது 10 வருடத்திற்கு 5% மற்றும் 15 வருட திட்டத்திற்கு 7.5% தொகை முதிர்வு போனஸாக கிடைக்கிறது. 1994-95 ஆண்டின் வருடாந்திர டிவிடெண்ட் 16.5% ஆக இருந்தது.
- **ஆயுள் இன்சுரன்ஸ் காப்பு:** மருத்துவ பரிசோதனை இல்லாமல் உங்கள் இலக்க தொகைக்கு ஈடான ஆயுள் காப்பு.
- **இலவச விபத்துக் காப்பு:** உங்கள் இலக்குத்தொகை எத்தனையாக இருப்பினும் ரூ. 30,000-கு விபத்துக் காப்பு.

இலட்சியத்தொகை ரூ. 6,000 முதல் ரூ. 60,000 வரை கொண்ட 10 வருட அல்லது 15 வருட திட்டத்தையோ நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

மேற்கொண்டு விபரங்களுக்கு அருகாமையில் உள்ள யூடிஐ கிளை அலுவலகம், முக்கிய பிரதிநிதி அல்லது ஏஜென்டை அணுகவும்.

மியூச்சுவல் பண்ட் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யப்படும் எல்லா முதலீடுகளும் மார்க்கெட் ரிஸ்க்கிற்கு உட்படுபவையாகும். NAV-ஏற்றத்தாழ்வுகள் ஷேர் மார்க்கெட்டில் நிலவும் காரணங்களுக்கேற்ப மேலேயோ கீழேயோ போகலாம். கடந்த கால சாதனை வருங்கால நிலைக்கான அறிகுறி அல்ல. யூனிட் லிங்க்ட் இன்சுரன்ஸ் ப்ளான் என்பது திட்டத்தின் பெயர் மட்டுமே தவிர திட்டத்தின் தரத்தையோ வருங்கால வளர்ச்சி அல்லது லாபத்தையோ குறிப்பிடவில்லை. திட்டத்தின் குறிக்கோள்களை அடையும் உத்தரவாதத்தையும் அளிக்கவில்லை. முதலீடு செய்வதற்கு முன் ஆஃபர் டாகுமென்டை கவனமாக படிக்கவும்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் மேலான எதிர்காலத்திற்கு

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101

கிளை அலுவலகங்கள்: • **கோயம்புத்தூர்**, போன்: 214973 • **சென்னை**, போன்: 517101, 517190 • **மதுரை**, போன்: 38186 • **திருச்சி**, போன்: 27060

SISTA SAATCHI & SAATCHI-0180 C/95 M



பில் கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதி ஆவதற்கு முன்னால், அர்க்கன்சாஸ் மாநில ஆளுநராக இருந்தார். அவர் மனைவி ஹிலாரி கிளின்டன், ரோஸ் லா கம்பெனி என்ற சட்ட நிறுவனத்தில் வழக்கறிஞராகத் தொழில் செய்து கொண்டிருந்தார்.

அப்போது அர்க்கன்சாஸில் வீட்டு மனைகள் விற்பனை சம்பந்தமாக 'ஒயிட் வாட்டர்' என்ற திட்டம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. (ஹிலாரி கிளின்டனின் அலுவலகத்தில் பாகஸ்தராக உள்ள ஒருவரும், இந்த ஒயிட்வாட்டர் வீட்டு மனை விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறார்.)

இந்தத் திட்டத்துக்கு நிதி முதலீடு செய்த மாடிசன் காரண்டி அண்ட் லோன் பாங்க், இப்போது திவாலாகிவிட்டது. மக்களின் வரிப்பணம் சுமார் 60 மில்லியன் டாலர்கள் போன இடம் தெரியவில்லை!

இந்த 'ஒயிட்வாட்டர்' ஊழல் சம்பந்தமான வழக்கு விசாரணை, பிப்ரவரி மாதம் 29-ஆம் தேதிக்குள் முடிந்தாக வேண்டும். ஃபெடரல் கிராண்ட் ஜூரி எனப்படும் 23 உறுப்பினர்கள் கொண்ட மக்கள் சபைதான் இதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு விசாரணைக் குழு.

விசாரணை சமயத்தில், அதற்குத் தேவையான பல ஆவணங்கள் குழுவுக்குத் தரப்படாமல், கிளின்டன் அரசாங்கம் போக்குக் காட்டியது. (ராஜீவ் கொலை வழக்கில் ஜெயின் கமிஷன் படுகிற அவஸ்தைதான்!)

ஒரு பெண்ணிடம் முறைகேடாக நடந்து கொண்டதாக கிளின்டன் பேரில் வழக்கு. இந்தத் தலைவலி போதாதென்று புதிதாக ஒரு திருகுவலி இப்போது கிளம்பியிருக்கிறது அமெரிக்க ஜனாதிபதிக்கு.....

இந்தச் சமயத்தில் சென்ற ஆகஸ்ட் மாதம், வழக்குக்குச் சம்பந்தமான சில டாகுமென்டுகள், குறிப்பாகச் சட்ட கம்பெனி கொடுத்த பில்கள், வெள்ளை மாளிகையின் நூலகத்தில் மேசை மீது 'தற்செயலாக'க் காணப்பட்டன. மிஸ் கரோலின் ஹ்யூபர் என்கிற உதவியாளர், இவை என்ன என்றே தெரியாமல் ஒரு சின்னப் பெட்டியில் போட்டு தம்முடைய அறைக்குக் கொண்டு போய் விட்டார். ஜனவரி 4 ஆம் தேதி வரை அவற்றைப் பிரித்துப் பார்க்கக்கூட இல்லையாம்! ஆனால் பிரித்துப் பார்த்த போதுதான் இப்படி விசாரணையில் ஒரு புயலைக் கிளப்பி விடக்கூடிய சமாசாரம் இருக்கிறது என்று புரிந்ததாம். இது தற்செயலாக நடந்ததா, அல்லது வெள்ளை மாளிகையிலிருந்து பலபேரை மிஸஸ் கிளின்டன் வேலையை விட்டு வீட்டுக்கு அனுப்பியதன் பின்விளைவா என்பது விவாதத்துக்குரிய விஷயம்!

தேசத்தின் முதல் பெண்மணியை விசாரணைக்கு அழைக்கக் கூடிய நிலையை இது உருவாக்கியது. இப்போது இந்த விசாரணைக் குழு, கிளின்டன் ஆளுநராக இருந்த போது நடைபெற்ற நிதி விவகாரங்கள் பூராவையும் அலசோ அலசு என்று அலசி வருகிறது!

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு கிளின்டன் நின்றால் வெற்றி பெற முடியுமா என்பது கேள்விக் குறியாகிவிட்டது, இப்போது!

— எஸ்.வி.என்.



• துரைராஜ் ஸ்தபதி

லண்டனுக்குப் போன முருகன்!

“சிற்பக் கல்லூரில படிச்சு முடிச்சு ரெண்டு வருஷம் கூட ஆகல்லே. நாலடி உயரத்துல ஒரு முருகன் சிலை பண்ண வேண்டி வந்துச்சு. ஒரு எம்.எல்.ஏ.யோட ஆர்டருங்க. கண்ட துவாரம் (சிற்பத்தின் கழுத்துப் பகுதியில் உள்ள துளை) போடும் போது, கைநழுவி செதுக்கிட்டிருந்த உளி உள்ளே விழுந்து மாட்டிக்கிச்சு. என்னென்னமோ செஞ்சு பார்த்தேன். கம்பியைப் போட்டுத் திருப்பித் திருப்பி, முழங்கை பூரா வெட்டி வெட்டிப் புண்ணாயிடுச்சு. அப்படியே உட்டுட்டா, கொஞ்ச நாள்லயே சிற்பம் ரெண்டா உடைஞ்சிடும்டான்னாரு வாத்தியாரு. நாலு மாசமா கஷ்டப்பட்டு உழைச்சதெல்லாம் வேஸ்ட் ஆயிடுமேன்னு மனசு கெடந்து தவிச்சுது. மனசை திடப்படுத்திக்கிட்டு, அந்தக் கடவுள் மேலயே பாரத்தைப் போட்டு, நீதான் காப்பாத்த வேணும்னு, கை அறுபடறதையும் லட்சியம் பண்ணாம, கம்பியை ஒரு நெக்காப் போட்டுச் சொழட்டினேன். உளி அதுல மாட்டிக்கிட்டு வெளியே வந்துருச்சு. எந்தச் சூழ்நிலையிலயும் மனசத் திடமா வச்சுக்கணும், நம்பிக்கையைக் கைவிட்டிரப்படாதுங்கறது லட்சியமாப் போச்சு இப்ப!” என்கிறார் துரைராஜ் ஸ்தபதி.

நான்கு வருடங்கள் மகாபலிபுரம் சிற்பப் பயிற்சி பள்ளியில் பயிற்சி முடித்த பிறகு, மகாபலிபுரம் சாலையில் ‘மாயன் ஹாண்டி கிராஃப்ட்ஸ்’ நடத்தி வருகிறார் துரைராஜ். கிடைத்துள்ள பாராட்டுக்கள் பல. ஏஷியா பாஸிஃபிக் மியூசியம் பதக்கம் கொடுத்துக் கௌரவித்திருக்கிறது. அயர்லாந்து, பிக்சர் போஸ்ட் கார்டில் இவரது சிற்பத்தைப் படமாக வெளியிட்டிருக்கிறது. சமீபத்தில் உபாசனா விருது!


“விருதுகள்ல எனக்கு ஒண்ணும் பெரிய அட்ராக்ஷன் இல்லேங்க!” என்கிறார் துரைராஜ். ராஜீவ் காந்தி மெமோரியலுக்கு, மாதக் கணக்கில் இவரிடம் ஐடியா கேட்டு விவாதம்

நடத்தினார்களாம். "லண்டன் ஆர்ச்பே ரோடு முருகன் கோயிலுக்கு நான்தான் ஆட்கள் அனுப்பினேன். விக்கிரகமும் செஞ்சு அனுப்பி னேன்!"

திருவக்கரை, திண்டிவனம் ஆகிய இடங் களிலிருந்து கற்களைக் கொண்டு வருகிறார். கருங்கல்லில் உளிபடும் போது உலோகச் சத்தம், நெருப்புப் பொறியோடு தெறிக்கிறது. சுமார் 100 பேர் இவரிடம் வேலை செய்கிறார்கள். தீப்பொறி பறக்கும் பட்டறையில் உளிகள் வெந்து, பின் குளிர்ந்து, கூராக்கப்பட்டுக் கொண்டிருந்தன ஒரு புறம். மறுபுறம் பிரம் மாண்டமான தவளைகள் (கல்லில்தான்!) தயா ராகிக் கொண்டிருந்தன. எல்லாம் ஜெர்மன் ஆர்டர்.

மார்புக்கூட்டு எலும்புகள் தெரிய, உபவாச புத்தர் ஜப்பான் நாட்டுக்காகத் தயாராகிக் கொண்டிருந்தார். சிற்பசாஸ்திரம் சமஸ்கிருதத் தில் இருப்பதால் சமஸ்கிருதம் எழுதவும் படிக் கவும் தெரியும் துரைராஜுக்கு.

பரம்பரை பரம்பரையாக இந்த சிற்பத் தொழிலைக் கற்றுக் கொண்டு செய்வதே மரபு. "ஆனால் நாங்கள் பரம்பரையா ஸ்தபதி இல்லை...." என்கிறார் துரைராஜ். ஆனால் சிலைகளைப் பார்க்கும் போது நமக்கு எந்த வித்தியாசமும் தெரியவில்லை.



"உழவன் கணக்குப் பார்த்தா உழக்குக் கூட மிஞ்சாதுன்றது நம்மோட திருட்டுத் தொழி லுக்கும் பொருந்தும்."

"எப்படி சொல்றே?"

"ஆட்டோ செலவு, போலீஸ் மாமூல் செலவு போக ஒரு திருட்டில் எவ்வளவு நின்னுடப் போவுது?!"

— மயிலாடுதுறை ஆர். ஜெயந்தி

"இவரோட 'ஃபினிஷ்' வேற எங்கியும் கிடைக்காது!" - சொன்னவர் இங்கே சிற்பங்கள் வாங்க வந்திருந்த திருமதி இளையராஜா. இரண்டு கல்மண்டபங்களையும் ஒரு விநாயகர் சிலையையும் வாங்கிப் போனார்.

— சாருகேசி

படம் : ஸ்ரீஹரி

'சுருக் நறுக்' – 14 முடிவுகள்

இளமைப் பருவம் என்பது....

● வேகம், தாகம், மோகம் என்னும் மூன்று குதிரைகள் பூட்டிய ரதம். 'விவேகம்' என்னும் சாரதி செலுத்த, வாழ்க்கைப் போரில் வெற்றி காணலாம்!

— ஆர். ராஜாராம், சென்னை - 28.

● எதிர்காலக் கட்டடத்தின் அஸ்தி வாரம்... எண்ணக் கலவையைப் பொறுத்து, கட்டட உறுதி!

— ஆர். ஸ்ரீநிவாசன், திருச்சி - 6.

● வாழ்வின் வெறுமையான காலகட்டங் களில் நினைத்து, சுகமாக அசை போடத் தகுந்த சுவையான பப்பிள்கம்.

— உத்தமராஜு, கோவை - 26.

● புலன்களின் பொற்காலம்!

— எல். சண்முகசுந்தரி, இராமநாதபுரம்.

● ஒருவர் வாழ்வின் முக்கியத் இருப் பத்தை நிர்ணயம் செய்யும் ப்ரொபேஷனரி பீரியட்!

— அ. சுகுமார், காட்டுக்கானூர்.

● வாழ்க்கை ரயிலில் கொஞ்ச நேரம் மட்டுமே கிடைக்கு ஜன்னலோர இருக்கை.

— ஜோதி, மதுரை - 20.

● ரசனை உள்ளத்தோடு இறைவன் மனிதனுக்குப் போட்ட மேக்கப்!

— ஜி. இந்திரா, சென்னை - 40.

● இளமைப் பருவம் ஒரு பீங்கான் கோப்பை. சிலருக்கு, பூங்கொத்து வைக்கும் கிண்ணமாகவும், சிலருக்கு ஆஷ்-ட்ரேயாகவும் அமைவது.

— என். உஷாதேவி, மதுரை - 9.

(மேற்கண்ட சொல்லோவியங்கள் ரூ. 50/- பரிசு பெறுகின்றன.)


‘காதல் தேசம்’ கே.வி. ஆனந்த்

காதல் தேசத்தில் பிஸியாக இருந்தார் கே.வி. ஆனந்த். ஒளிப்பதிவாளராக அறிமுகமான முதல் படத்திலேயே (மலையாளம்- மோகன்லாலின் தேன்மாவின் கொம்பத்) தேசிய விருது வாங்கி பரபரப்பாகப் பேசப்பட்டவர். மலையாளத்தில் அறிமுகமானாலும் பரிசுத்த சென்னைத் தமிழர். ஒரு தமிழ்ப்படம் பண்ண ஏன் இத்தனை இடைவெளி?

"நான் என்ன செய்வேன்? முதல் படத்தில் என் ஒளிப்பதிவு சிலாகித்துப் பேசப்பட்டதால் பிரியதர்ஷன், அவரது அடுத்த படத்துக்கும் (மின்னாரம்) என்னையே செய்யச் சொல்லி விட்டார். அது முடிவதற்குள் தெலுங்கில் கூப்பிட்டு விட்டார்கள். அங்கே இரண்டு படம். தற்போது 'காதல் தேசம்'. இது கூட வேறொருத்தர் செய்திருக்க வேண்டியதுதான். தற்செயலாக எனக்கு வந்தது."

இந்த ராசி ஆனந்துக்கு முதல் படத்திலேயே தொடங்கி விட்டது. பிரியதர்ஷன முதலில் பி.சி.ஸ்ரீராமைத்தான் 'தேன்மாவின் கொம்பத்து'க்குக் கூப்பிட்டிருக்கிறார். பி.சி. அப்போது பயங்கர பிஸி. (திருடா திருடா!) ஆகவே சந்தோஷ் சிவனை அணுக, அவரோ, 'பர்ஸாத்' இந்தி படத்தில் கமிட் ஆகி இருந்தார். என்ன செய்வது என்று பி.சி. ஸ்ரீராமிடமே ஐடியா கேட்க, "வேண்டுமானால் ஆனந்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லியிருக்கிறார் ஸ்ரீராம். ஆனந்த் அப்போது ஸ்ரீராமின் சிஷ்யர். ("கோபுர வாசலிலே"வில் ஆறாவது அஸிஸ்டெண்டாகச் சேர்ந்து திருடா திருடாவில் முதல் அஸிஸ்டெண்டாக இருந்தேன்!") யோசிக்காமல் ஓகே சொன்னதன் விளைவு, ஒரு தேசிய விருது ஒளிப்பதிவாளரை அறிமுகப் படுத்த முடிந்திருக்கிறது பிரியதர்ஷனால்.






• தூ : அக்கா, அக்கா!


"**அ**வரை நினைத்தால் எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. படம் தொடங்கிய இரண்டாவது நாளிலிருந்து எப்படி லைட் பண்ணுகிறேன், ஏன் பண்ணுகிறேன் என்று கூடக் கேட்கவில்லை. ஷூட்டிங் முடிய, முடிய ரஷ் போட்டுக்கூடப் பார்க்கவில்லை. என்மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கை இன்னும் வியப்பாக இருக்கிறது!" என்கிறார் பிரியதர்ஷன் பற்றி.

அதுசரி. அதென்ன இரண்டாம்

நாளிலிருந்து?

''முதல்நாள் ஒரு சம்பவம். கிராமத்து வீட்டில் நடக்கிற காட்சி. நான் லைட்டிங் முடித்துவிட்டுத் தயாராக இருந்தேன். வந்து பார்த்த ப்ரியதர்ஷன் மிரண்டு விட்டார். ஏனெனில் நான் ஆர்டிஸ்டுக்கு back light ஏதும் வைத்திருக்கவில்லை! 'என்ன ஆனந்த்? back light வைக்க லியா?' என்றார் வியந்து.





'வேண்டாம் சார். இப்படியே இருக் கட்டும். நன்றாக வரும்' என்று சொன்னேன்.

'அவர் சமாதானமாக வில்லை. பார்! நான் பி.ஸி.யைத் தான் பணியாற்றக் கூப்பிட்டேன் முதலில். அவரால் முடியாமல் போக உங்களைப் போட்டதற் குக் காரணம், ஸ்ரீராமின் ஸ்டை லில் ஐம்பது சதமாவது உங்களி டம் இருக்கும் என்பதால் தான்' என்றார்...

அவர் கவலை அவருக்கு. நான் உறுதியாகச் சொன் னேன். விட்டுப் பாருங்கள். நன்றாகத் தான் வரும். நான் கேரண்ட்டி.."


"அப்புறம் அவர் பேசவில்லை- படம் முடிகிறவரை குறுக்கிடவே இல்லை!"

தன்னளவில் தனித்துவத்துக்காக மெனக்கெட்டுக் கொண்டிருந்தாலும் ஸ்ரீராம் ஒளிப்பதிவு பாணியில் மாறாக் காதல் ஆனந்துக்கு.

"அவரது ஒளிப்பதிவை இன்னவகை என்று இனம் பிரிக்கவே முடியாது. ஒவ்வொரு படத்திலும் தம் ஸ்டைலை மாற்றிக் கொண்டே இருப்பார். 'நாயகன்' ஒரு மாதிரி. 'மௌன ராகம்' ஒரு மாதிரி. 'திருடா திருடா' முற்றிலும் வேறு மாதிரி. 'தேவர் மகன்' இவற்றுக்கெல்லாம் சம்பந்தமே இல்லாத ஒரு புதுமாதிரி. 'மீரா'வோ, fantasy lighting ல் சில சிகரங்களைத் தொட்டது. சமீபத்தில் குருதிப் புனல் பாருங்கள். பழைய படங்களில் ஒன்று கூட ஞாபகமே வராத வேறொரு ஜாதி அது. அவரை அப் படியே பின்பற்றுவது கஷ்டம். ஆனால் அடிப்படையான விஷயங்களை அவர்தான் எனக்குக் கற்றுக் கொடுத்தார். குருதிப்புனலுக்குப் பிறகு அவர் டைரக்ஷனில் மிக ஆர்வமாக இருக்கிறார் என்று அறிகிறேன்."

உங்களுக்கு டைரக்ஷன் ஆசை...?

"சரிதான். இப்போ என்ன அவசரம்? மேலும் ஸ்கிரிப்ட்



லண்டன் பாதாள ரயில் நிலையங்களில் பார்வையற்றவர்களுக்கு உதவ ஒரு திட்டம் அமுல் படுத்தப்போகிறார்கள். இதன்படி ''இன்ஃப்ரா ரெட்'' எனப்படும் ஒளிக்கதிர் பார்வையற்றவருக்கு வழி காட்டுவதுடன், ஒலி அலைகளாகவும் மாறி, ரயில்களின் போக்கு வரத்து, பிளாட்ஃபாரம் எண் போன்ற தகவல்களையும் அவர்கள் செவிகளுக்குக் கேட்கச் செய்கிறது. இதற்கென விசேஷ மூக்குக் கண்ணாடி அணிதல் வேண்டும்.

ஆதாரம் : 'ஸன்'

- சேலம் சக்திக்கொடி

என்பது ஒரு படத்துக்கு அதி முக்கிய சமாசாரம். அதற்கு நிறைய மெனக்கெட வேண்டும். இன்று என்ன பண்ணுகிறார்கள் தெரியுமா? செட்டுக்குப் போய்விட்டு என்ன செய்யலாம் என்று யோசிக்கிறார்கள். டைரக்டர், நிறைய படிக்க வேண்டும். நாவல்கள், சிறுகதைகள், அட்லீஸ்ட் வாரப்பத்திரிகைகளாவது. அதை யாரும் இப்போது செய்வது கிடையாது. இதற்கென்று நேரம் ஒதுக்குவது அநாவசியம் என்று நினைக்கத் தொடங்கிவிட்டார்கள்! ரெடிமேடாக இரண்டு வரியில் யாராவது கதை சொன்னால் சந்தோஷமாகக் கேட்டுக் கொள்கிறார்கள். வேலை நெருக்கடியால் முன்போல் இப்போது என்னால் நிறைய படிக்க முடிகிறதில்லை. ஆகவே டைரக்ஷன் ஆசை சமீபத்தில் இல்லை."

காதல் தேசம்- உங்களுக்கு முதல் தமிழ்ப்படம். எப்படி இருக்கிறது அனுபவம்?

"ஓகே! முக்கோணக் காதல் கதைதான். முழுமையான பொழுது போக்குப் படம். ஆனால் இயக்குநர் கதிர், விஷயம் தெரிந்தவர். விஷுவல் மீடியத்தின் முழுப் பரிமாணம் புரிந்து கொண்டவர். அழகுணர்ச்சி அவருக்குக் கொஞ்சம் அதிகம். அது எனக்கும் வசதி அல்லவா?"

கூடுதல் அழகுக்கு 'தபு' வேறு இருக்கிறார் போலிருக்கிறது?

"பிரச்னையே அங்கேதான். தபு அழகி அல்ல. கவர்ச்சியானவர் அவர். அழகு வேறு. கவர்ச்சி வேறு. மேலும் புதிய இளம் (22வயது) ஹீரோக்களுடன் அவரைச் சேர்த்து நிற்க வைத்து எடுப்பது சிரமமான காரியமாக இருக்கிறது. அசப்பில் ஹீரோக்களுக்கு அக்கா மாதிரி இருக்கிறார். இருபத்தெட்டு, இருபத்தொன்பது வயசு இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த வித்தியாசம் தெரியாமல், அதே சமயம் அழகாகவும் காட்ட வேண்டிய நிர்பந்தம்.

"இன்னொரு விஷயம், டைரக்டர் கதிருக்கு லாங்-ஷாட், மிட்-ஷாட்களில் கதை நகர்த்தப் பிடிக்காது. உணர்ச்சி பூர்வமாக நடிக்கவைத்து, பெரும்பாலும் குளோசப்களில் கதை சொல்வது அவர் பாணி. தபுவை டைட்-குளோசப்பில் காட்டுவது கஷ்டம். ஆனால் டைரக்டர் காம்ப்ரமைஸ் பண்ணிக் கொள்ள மாட்டார். ஒரு மாதிரி சவாலாக ஓடிக் கொண்டிருக்கிறது.

" 'காதல் தேசம் ஆனந்த்' என்று குறிப்பிடும் அளவுக்குப் படம் அமையுமா?" என்றால், படம் ரிலீஸானதும் பார்த்து விட்டுச் சொல்லுங்கள்!" என்றார்.

ஏப்ரலில் ரிலீஸுக்குப் பிளான் பண்ணியிருக்கிறார்கள். ஆனால் பொதுத் தேர்தல் அமைவதைப் பொறுத்து ரிலீஸ் தள்ளிப் போகவும் வாய்ப்பிருக்கிறதாம்.(தயாரிப்பாளர் குஞ்சுமோன், ஐயா!)

பத்திரிகை போட்டோகிராபராக இருந்து சினிமாவுக்குப் போய் விட்டவர் ஆனந்த். இப்போது ஸ்டில் போட்டோ எடுக்கவெல்லாம் நேரம் இருக்கிறதோ?

"முழுக்க விட்டுவிடவில்லை. கிடைக்கிற நேரத்தில் கூப்பிடுகிறவர்களுக்குப் பண்ணிக் கொண்டுதான் இருக்கிறேன். சொல்லப் போனால் என் போட்டோகிராபியின் ஆரம்பமே கல்கியிலிருந்துதான்.

'சூப்பர் நாவல்' அட்டைப்படங்கள் தொடர்ந்து எடுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். என் புதிய ஐடியாக்களையெல்லாம் அதில்தான் பரீட்சித்துப் பார்ப்பது வழக்கம்."


ஆனந்தின் புது மனைவிக்கு சினிமாவிலெல்லாம் ஆர்வம் இல்லையாம்.

"கவிதை எழுதுகிறாள். என்மீது ஏதாவது கோபம் என்றால், நன்றாகத் திட்டி கவிதையாக எழுதி, என்னிடமே கொடுத்து விடுவாள்!"

பேட்டி : **ஔரங்கசீப்**

வண்ணப்படங்கள் : **ஸ்ரீஹரி**

சுஜாதா பக்கம்



டில்லியில் மற்றொரு திரைப்பட விழா. இது ஒரு வருடாந்திர சடங்காகி விட்டது. தலை விரித்து அடிக்கடி விரலால் தள்ளிக் கொள்ளும் அழகிய பெண்கள் மெழுகுவர்த்தி கொடுக்க, சங்கர்தயாள் சர்மா தள்ளாடி வந்து குத்து விளக்கு ஏற்ற, தென்கொரியாவிலிருந்தோ சைனாவிலிருந்தோ 'சப் டைட்டில்' போட்டு யாருக்கும் புரியாத படத்தோடு துவங்கி, இளைஞர்கள் முரட்டுக்கதர் ஜிப்பாவில் பத்து நாள் இங்கிலீஷ் பேச, சாதாரணக் குடிமகன் என்கிறவன் இதனால் இம்மியளவும் பாதிக்கப்படாமல் பேல்பூரி சாப்பிட்டுவிட்டு 'ரங்கிலா'வை எட்டாவது தடவை பார்ப்பது பழகி விட்டது.

இந்திய சினிமா எப்படி இயங்குகிறது? இன்றைய தினங்களில் ஏ.ஆர். ரகுமான் என்கிற மந்திரப் பெயர் இருந்தால் காசெட் விற்பனையில் மூன்று கோடி கிடைக்கிறதாம். உலக அழகிகள், நாகார்ஜுனா, பாபாசெகல், அலிஷா சினாய் போன்றவர் வழங்கும் போலிக் கலாசாரக் காட்சிகள். ஐரோப்பிய ஆல்ப்ஸ் மடியில் வலிப்பு நடனத்துடன் பாடல் காட்சிகள். ராப், ரேப். அறுபது செமீ உடையில் ஸ்தனதரிசனம் தரும் காஜோல், ஊர்மிளா, மனிஷா போன்ற கதாநாயகிகள். இவற்றை நம்பியே பம்பாய் ஜீவித்திருக்கிறது. தமிழ் சினிமா போன முறை வெற்றிப்படத்தின் ஃபார்முலாவை, தோல்வி தழுவும் வரை முயற்சிக்கிறது. அதில் முப்பது கார்கள் என்றால், இதில் நாற்பது கார்களை வைத்துத் துரத்தி, வெடி. அதில் டூயட் பாடும் போது பின்னணியில் இருபத்தைந்து பெண்கள் என்றால் இதில் முப்பத்தைந்து. நூறு தண்ணீர்க்குடங்களை உடைத்தார்கள் என்றால் இதில் இருநூறு. அதில் கவர்னர் கொலை என்றால் இதில் மந்திரி. பாட்டில் ஒரு வரிக்கு அவன் பாங்காக் போனால் இவன் அடுத்த வரிக்கு ஆங்காங்.

பாடல்கள், முக்காபுலா, மஸ்தானா போன்ற அகில இந்திய அபத்த வார்த்தைகளில் ஆரம்பித்து, தமிழ் வேண்டுமென்றால் 'முத்தமிட எந்த இடம் நல்ல இடம்' போன்ற ஆத்ம விசாரமான கேள்விகள் கேட்கின்றன. ப்ரெஞ்சு புரட்சியின்போது சீமாட்டிகள் 'LET THEM EAT CAKE' என்று சொன்னதுபோல், யதார்த்தத்துக்குச் சம்பந்தமில்லாத ஒரு மேக லோகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சினிமா, இன்னும் சாகாமல் இருப்பதற்குக் காரணம்: அதற்குப் போட்டியான டீவி., கற்பனை வறண்டு அவசரமாகத் தற்கொலை முயன்று கொண்டிருக்கிறது. ஒரு மாதத்திற்கு நான்கு மணி நேரத்துக்கு மேல் பார்க்க லாயக்கில்லாமல் போய், எந்த சேனலிலும் சினிமாவையே நம்பி தனி அடையாளத்தை இழந்து கொண்டிருக்கிறது. திரைத் துளி, திரைமலர், திரை இசை, திரை கானம், திரைத் தென்றல், திரையில் நகைச்சுவை, திரையில் வெள்ளரிப் பிஞ்சு... அதில் வருபவர்கள் எல்லாம் திரையிலிருந்து துரத்தப்பட்டவர்கள். முட்டாள்தனமான க்விஸ் போட்டிகள். (ஒரு குரங்கு சைக்கிள்விட்டு நடித்த படம் எது?) கைக் குழந்தைகளுக்கெல்லாம் வெட் க்ரைண்டர் பரிசு. இதில்லையென்றால் அழகிப் போட்டி:-

கேள்வி : (ஓய்வு பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரர்) மிஸ் சிந்தாதிரிப்பேட்டை ஆனால் நீங்கள் சமூகத்துக்கு என்ன செய்வீர்கள்?

அழகி : அன்னை தெரசாவைப் போல ஏழைக் குழந்தைகளைப் பராமரிப்பேன்.

ஸ்டூடியோ ஆடியன்ஸ் சைகையின் பேரில் கைதட்டவில்லையெனில் இலவச கோக்கோ கோலா கிடைக்காது. டீவியிலிருந்து தப்பிக்க ஒரு 'ஸர்வைவல் மான்யுவல்' தனிப்பட்டு எழுத உத்தேசம்.

தமிழ் சினிமா டைரக்டர்களிடம் நான் அடிக்கடி கேட்கும் ஒரு சந்தேகம் :

பாடல் காட்சிகளின் பின்னணியில் ஒரே மாதிரி ட்ரஸ் போட்டுக் கொண்டு வருகிறார்களே, அந்தப் பெண்கள் யாவர்? அவர்கள் எப்படி திடுதிப்பென்று தோன்றி தேகத்தின் மைய பாகத்தை அப்படியும் இப்படியும் அசைக்கக் கூடும்? இதற்கெல்லாம் லாஜிக் இல்லையா? மக்கள் என்ன அத்தனை முட்டாள்களா?

இப்போதெல்லாம் இந்த பெண்கள் முதல் இரவு அறைக்குள் கூட உள்ளே வந்து ஆடுகிறார்கள். கல்கி வாசகர்களிடம் ஒரு போட்டிக் கேள்வி : -

கீழ் வரும் மூன்றினுள் தமிழ் சினிமாவுக்குத் தேவையே இல்லாதது எது?

1. கதை, 2. சதை, 3. உதை.

இதற்கு இன்னும் ஒரு வாரத்திற்குள் சரியான விடையை தபால் கார்டில் எழுதி அனுப்பும் வாசகர்களில் இருவர் 'குலுக்கல்' முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, இரண்டு வருஷத்துக்கு உண்டான அயோடைஸ்டு உப்பு பரிசாகப் பெறுவார்கள்!


(மீண்டும் அடுத்த வாரம்)

உறக்கத்திற்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட ஒரு மயக்க நிலை அது. இப்பொழுதெல்லாம் தினமுமே அதிகாலை ஐந்து மணிக்கே விழிப்பு வந்து விடுகிறது. விழிப்பு என்றால் உடன் உதறி எழுந்து விட முடிவதில்லை. கண்மூடி மயங்கி, மெல்ல மெல்ல விழிக்கும் அந்த பம்பாய் புறநகரின் அதிகாலை நேரத்து ஆரவாரங்களை ரசிப்பது.

சுற்றியுள்ள ஃப்ளாட்டுகளிலிருந்து விட்டு விட்டு வரும் குக்கர் விசில் சப்தம், பால்காரன் வந்து பக்கத்து வீட்டு 'காலிங்பெல்' அழுத்தி "தூத்.." என நீட்டும் குரல், எக்ஸ்டென்ஷன் ஏரியாக்களிலிருந்து காலை ஷிப்ட் வேலைக்குப் போவோரை ஏற்றிக் கொண்டு 'சர்சர்' என ரயில்வே ஸ்டேஷன் நோக்கிச் சீறிப்பாயும் ஆட்டோக்களின் இரைச்சல், பேப்பரைத் தாழிடுக்கில் செருகி, கதவு தட்டி, இரண்டிரண்டு படிகளாய் ஸ்லிப்பர் சப்திக்க அவசரமாய் இறங்கி ஓடும் பேப்பர்கார பையனின் காலடி ஓசை... எல்லாமே தினமும் கேட்பவைதான். ஆனாலும் அலுப்புத் தட்டாமல் அவற்றை ரசிக்க முடிகிறது.

கவிதா இல்லையென்றாகி விட்ட பிறகுதான் கொஞ்சம் கவிதைத்தனத்துடன் சுற்றி நடப்பவற்றை அப்ஸர்வ் பண்ண ஆரம் பித்திருப்பதாய்ப் பட்டது. கொஞ்சம் முயற்சித்தால் கவிதைகூட எழுதிவிடலாம். தீவிர சோகமோ, சந்தோஷமோ தாக்கிய மனிதர்களுக்கு கவிதை எழுதுவது சுலபம் எனத் தோன்றுகிறது.

மாதமொன்றாய் கவிதாவின் முதலிரண்டு கடிதங்கள் வந்தன. அண்ணன் தனக்குத் தீவிரமாய் மணமகன் வேட்டையில் இறங்கி உள்ளதாயும், அடுத்து அவனின் திருமணமும் நடைபெற வேண்டியுள்ள தால், சீக்கிரம் மணமுடிக்க வற்புறுத்து வதாயும் எழுதியிருந்தாள்.



ஒரு காதல் இரு கல்யாணம்

ஏ. மகாராஜன்

தீவிரமான குழப்பம் பிடித்து உலுக்கியது. பதிலெழுத பலமுறை நினைத்து, 'எப்படி, என்ன எழுதுவது?' என்பதாய் யோசிப்பதிலேயே பொழுதைக் கரைத்துக் கொண்டிருந்த நேரத்தில்தான் இடியெனத் தாக்கும் செய்தி தாங்கி அந்த மூன்றாவது கடிதம் வந்தது.

அண்ணன், அவனுடன் வேலை பார்க்கும் நண்பன் ஒருவனுக்கு அவளைப் பேசிமுடித்து விட்டதாகவும், மறுவாரம் திருமணம் என்றும் எழுதியிருந்தாள்.

முடிவெடுக்காது, பதிலெழுதாது முட்டாள்தனமாய் நாட்களை நகர்த்தியதற்காகத் தன் மேலேயே கோபித்துக் கொண்டு, குழம்பி, சோகம் தாக்க, வேதனையின் விளிம்பில் தொங்கி, ஒரு வாரம் ஆபீஸ் செல்லாது, ஷேவ் செய்யாது அழுக்கு ஆடையுடன் சுற்ற, ஆபீஸ் நண்பன் ஒருவன் மாற்றம் கண்டு பதறிப் போனான். பரிவோடு விசாரிக்க, முழுக்க அவனிடம் ஒப்பித்து வாய்விட்டு அழுதபோது சோகத்தின் கனம் வெகுவாய்க் குறைந்து போயிருந்தது. அடுத்து வந்த நாட்களில் அவனது ஆறுதலும், அறிவுரைகளும்தான் கொஞ்சம் கொஞ்சமாய் மீண்டும் நார்மல் நிலைமைக்குக் கொண்டு வந்தன.


தங்கை உஷாவுக்கு மட்டும் நல்ல வரன் அமைந்து மணமாகியிருந்தால், ஒருவேளை மனதுக்குப் பிடித்த கவிதா எளிதாய் கிடைத்திருக்கலாம். எந்தத் தங்கையின் மூலம் கவிதாவின் அறிமுகமும் அன்பும் கிடைத்ததோ, அவள் காரணமாகவே அவற்றை இழக்கவும் வேண்டியதாயிற்று.

ஒருவேளை வெளியில் சொல்ல தைரியமில்லாது மௌனமாகவே காதலித்தது தவறோ? வயது வந்த தங்கை வீட்டிலிருக்கும் பொழுது காதலாம் காதல் என்ற எகத்தாளத்திற்கும், அவள் தனது அண்ணனின் கோபத்திற்கும் பயந்து, மௌனித்துக் கிடந்திருக்கலாம். அது கோழைத்தனமோ? தைரியமாய் காதல் வெளிப்படுத்தி அவளைக் காத்திருக்கச் சொல்லி, தங்கைக்குத் தீவிரமாய் மணமகன் தேடி, மணம்முடித்த கையோடு தானும் கவிதாவின் கரம் பற்றியிருக்க வேண்டும்.

ஆயிற்று. எல்லாம் முடிந்து போயிற்று. ஒரு காதல் வெளிக்குத் தெரியாது மௌனமாய், ரகசியமாய் அரும்பி, மலராமலே கருகி உதிர்ந்தாயிற்று. இன்று கவிதா வேறொருவனின் உடைமை. இனி அவளைப் பற்றி நினைப்பது கூடத் தவறு.

'காலிங்பெல்' ஓசை நினைவு கலைக்க, உதறி எழுந்து, கதவு திறந்தான். எதிர் ஃபிளாட் ஆன்ட்டி கையில் ஒரு கவருடன் நின்று கொண்டிருந்தார்.

"கல் ஆப்னே ஈவ்னிங் ஷிப்ட் டேட்டி கயா த்தே! தபீ யே 'ரிஜிஸ்டர்ட் போஸ்ட்' ஆயா"



ரஜினி கொடுத்த நாற்பது லட்சம்!

'நாட்டாமை' படத்தின் தெலுங்கு ரீமேக்தான் பெத்த ராயுடு. மோகன் பாபு நடிக்க 'சூப்பர்-டூப்பர் ஹிட்' ஆகி படம் ஆந்திராவையே ஒரு கலக்கு கலக்கி விட்டிருக்கிறது. இந்தப் படக் கதையின் தெலுங்கு உரிமையை இவருக்காக இவர் 'உயிர்' நண்பர் வாங்கித் தந்தார். அத்தோடு அல்ல... படப்பிடிப்பில் ஒருசமயம் மோகன்பாபு வுக்கு பணமுடை ஏற்பட்ட போது அந்த உயிர் நண்பர் ஒரே செக்காக போட்டுக் கொடுத்தத் தொகை ரூ. 40 லட்சம்! அந்த 'உயிர்' நண்பர் : ரஜினிகாந்த்!

மோகன் பாபு பற்றிய மற்றொரு செய்தி : திருப்பதியிலிருந்து 14 கிலோ மீட்டர் தொலை வில் ஸ்ரீவித்யா நிகேதன் ரெஸிடென்ஷியல் ஸ்கூல்' என்ற பள்ளிக்கூடத்தை நடத்தி வரு கிறார்! 48 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பள்ளியின் சிறப்பு, 75% மாணவர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர் பள்ளிக் கூடத்தில் சேர விண்ணப்பத்தில் ஜாதி பற்றிய விவரம் கேட்கப்படுவதில்லை.

ஆதாரம் : ஸ்கிரீன்
தகவல் : எஸ். ஆலன்

● பம்பாயில் பள்ளிக்கூடங்கள் இடநெருக்கடியால் ஷிஃப்ட் முறை யிலேயே நடைபெறுகின்றன. காலையில் 1-ம் கிளாஸுக்கும், 2-ம் கிளாஸுக்கும் மாலையில் 3-ம் கிளாஸுக்கும், 4-ம் கிளாஸுக்கும் அதே வகுப்பறையை உபயோகிக்கிறார்கள்.

— சம்பா வைத்தீஸ்வரன்

● முக்கிய பிரமுகர்கள் மேடையில் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைப்பார்கள். தீபத்தை ஏற்றும் மெழுகுவர்த்தியிலிருந்தே ஓரிரு சொட்டுகளை [உருக்கி] திரியின் மேல் விட்டு ஏற்றினால் விளக்கு, சுடர் விட்டு நன்றாக எரியும்.

— லட்சுமிசுந்தரம்

● அவரவர் பாவபுண்ணியங்களின் பலன்களை அவரவர் அனுபவித்தே தீர வேண்டுமெனில் மகான்களால் என்ன பயன் என்று ஒருவர் கேட்டார். ஆயிரம் ரூபாய்க்கான சில்லறைகளை ஒருவன் சுமந்து கொண்டு நடக்கிறான். இடையில், ஒரு வங்கியில் அதைக் கொடுத்து நோட்டாக மாற்றிக் கொள்கிறான். முன்பிருந்ததும் ஆயிரம் ரூபாய், இப்போதும் அதே தொகைதான். ஆனால் முன்பு பாரம் அவன் தோளை அழுத்தியது. இப்போது நிம்மதியாக நடக்கிறான். மகான்களும் இப்படியே துன்பங்களினால் உங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை, வருத்தத்தைக் குறைப்பார்கள்.

— ஸ்ரீசத்யசாய்பாபா
தகவல் : அ. ஷண்முகசுந்தரம்

குழப்பமாய் ஃபிரம் அட்ரஸ் பார்க்க, தங்கையின் பெயர் இருந்தது. கதவுமூடி உள்வந்து, உறை பிரித்து வாசிக்கலானான்.

"...ஒரு முக்கியமான விஷயமாய் இக் கடிதம் எழுதுகிறேன். நம் வீட்டுக்கு அடிக்கடி வருவாளே என் தோழி கவிதா... அவளின் அண்ணனும், நானும் நீண்ட நாட்களாய் உயிருக்குயிராய் காதலிக்கிறோம். அவர் எந்தவித வரதட்சணையுமின்றி என்னை மணக்கத் தயாராயுள்ளார். இத்தனை நாட்களாய் அவரது தங்கை கவிதாவின் திருமணம் நடைபெறாதிருந்ததால் வெளியே யாருக்கும் தெரியப்படுத்தாது இருந்தோம். சென்ற மாதம் அவளின் திருமணம் முடிந்து விட்டது. நீங்கள் தயவுசெய்து கோபிக்காமல் அப்பா, அம்மாவிடம் எடுத்துச் சொல்லி, எங்களின் திருமணத்தை எல்லோரின் சம்மதத்துடனும் எப்படியாவது விரைவில் நடத்தி வைக்க வேண்டுகிறேன்..."

படித்துக் கொண்டிருந்தவனுக்கு தலைசுற்றுவது போலிருக்க, சுவர் பிடித்து படுக்கைக்கு வந்து சாய்ந்தான். மயக்கமாய் கண்மூடி, விட்டு விட்டு கேட்கும் குக்கர் விசில் சப்தம், ஆட்டோ இரைச்சல், எங்கேயோ தமிழ் வீட்டிலிருந்து வரும் எம்.எஸ். சுப்புலட்சுமியின் வெங்கடேஸ்வர சுப்ரபாத இசை என வெளி ஆரவாரங்களில் மெல்ல மனசைத் திசைதிருப்ப முயன்று பரிதாபமாய் தோற்றுக் கொண்டிருந்தான்.

நடராஜ் சிட்ஸ் (தமிழ்நாடு) பிரைவேட் லிமிடெட்

நடராஜ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்,
நடராஜ் எஸ்டேட்ஸ் - (பண்ணை நிலம்).

"சாந்தி காம்ப்ளெக்ஸ்", 3வது மாடி, 26, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600 017.

வட்டி 24% P.A. பரிசு 4% + 1% பென்ஷனர்

கிளைகள் : "இதயம் காம்ப்ளெக்ஸ்", 51- தெற்கு வீதி, (மாடி), திருவாரூர் - 610 002.
2-B - செல்வம் நகர், மெடிகல் காலேஜ் சாலை, தஞ்சாவூர் - 613 007.
1-B - காமராஜர் சாலை, (மாடி), காஞ்சிபுரம் - 631 501.

Phone : 434 20 98, 484 01 50



" சிறிய தொழில் ஒன்று ஆரம்பிக்க படாத பாடுபட்டேன். வங்கிகளில் எல்லாம் முயற்சித்துப் பார்த்தேன். ஆனால் நடராஜ் சிட்ஸ் நிறுவனத்தில் சந்தாதாரராகி, சீட்டு எடுத்து தற்பொழுது தொழில் முனைவராக ஆகி உள்ளேன்".


—கீதா கிருஷ்ணாநந்தன்

நடராஜ் சிட்ஸ்
அளிக்கும்
மிகப்பெரிய பரிசு திட்டம் 1996
விரைவில் எதிர்பாருங்கள்


" சிட் பண்ட் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ரூ. 5,000, ரூ. 10,000, ரூ. 15,000, ரூ. 25,000 சீட்டு குருப்புகள் நடைமுறையில் உள்ளன. மேலும் புதிய பெரிய குருப்புகள் ஆரம்பமாக இருக்கின்றன".

சீட்டில் சேர்கிறவர்களுக்கும்
அறிமுகப்படுத்துகிறவர்களுக்கும் பரிசு பொருட்கள்
காத்திருக்கின்றன.

- ☐ உங்கள் வாராந்திர விடுமுறை நாட்களை, மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் கழிப்பதற்கு அமைதியான, அழகான சூழ்நிலை
- ☐ சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலையில் காஞ்சிபுரத்துக்கு அருகே - பஸ்ரூட்டில் தயாராகிறது. ஏமாற்றத்தை தவிர்க்க இன்றே முன்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளுங்கள்.








புதியதோர்





உலகம்



செய்வோம்

பசுமையாக, செழுமையாக, வளமையாக, முழுமையாக.

ஆம்! பாரதியின் கனவை நனவாக்குவோம்!

புதியதோர் உலகிலே, மதுரைக்கு மிக அருகிலே, பசுமையான நிலம் மற்றும் வீட்டுமனையையும் (10,000 ச.அடி) செழுமையான தேக்கு பண்ணையையும், வளமையான காய்கறி பழ தோட்டங்களையும், முழுமையான பண்ணை இல்லத்தையும் உங்களுக்கே சொந்தம் ஆக்கிடுவீர்!

உங்கள் முதலீடு	நீங்கள் பெறுவது	20 ஆண்டுகளில் மதிப்பு
ரூ.25,000/- அல்லது ரூ.250/- வீதம் 100 சுலப தவணைகள்	10,000 ச.அடி நிலம் 24 தேக்கு மரங்கள் 2 ஒட்டு மா 2 வீரிய தென்னை காய்கறி தோட்டம்	ரூ.10 லட்சம் ரூ.24 லட்சம் ரூ.50,000 ரூ.50,000
20 ஆண்டுகளில் ரூ.35 லட்சம் மதிப்பு சொத்துக்கள்		

• 10,000 ச.அடி நிலம் உடன் உங்கள் பெயரில் பதிவு செய்யப்படுகிறது • அற்புத தொழில் நுட்ப விந்தை • சிறந்த நீர்வளம், மண்வளம், பயிர் வளம் • சில ஆண்டுகளில் உங்கள் நிலம் மதுரை நகரின் மையமாகி விடும்.

ரூ.100/- வீதம் 15 மாதங்கள் செலுத்தி லட்சம் பெறும் திட்டங்களும் உள்ளன


ESWAR AGRI

Eswar Grow-Tek Ltd.
287, West Masi Street, Madurai 625 001.
Ph: 540305, 540843 Fax: 0452-540305 Tlx: 0445-478-AGRI-IN

The Agri People

PROFAD:ESWAR:167:93:TAM

தாயகம்



விதி : ஆக்ஷன் படங்களில் வலுவான கதையை எதிர்பார்ப்பது அபத்தம்.

உபவிதி : அதே போல் நடிப்பையும்.

மேலே சொன்னதை ஒப்புக் கொள்பவர்கள் மேலே படிக்கவும்.

நம்மவர்களுக்கு காஷ்மீர் மேல் திடீர் திடீரென பற்று பிறந்து விடுகிறது. நேஷனல் அவார்ட் வாங்கும் ஆசை(?) யாரை விட்டது?

ஒரு காஷ்மீர் தீவிரவாத கும்பல், ஒரு விஞ்ஞானியைக் கடத்தி விடுகிறது. அவரோடு ஒரு அறுபத்து இரண்டு பேரும் மாட்டிக் கொள்கிறார்கள்!

அவர்களையெல்லாம் நம்ம ஹீரோ ஒத்தைக்கு ஒத்தை நின்று சண்டை போட்டு மீட்டு வருகிறார். காதுக்கு மேல் ஏதாவது குறுகுறுக்கிறதா? எல்லாம் பூதான்!

அப்பப்போ காப்பாற்றுபவை வசனங்கள். மற்றபடி, பிற காவல் தெய்வங்கள் காமிரா வும், பிரும்மாண்டமும்.

செலவு H_2O பட்டபாடு. லாரி, வேன், கார் என்று ஒன்றுவிடாமல், அனைத்தையும் கவிழ்த்துப் போட்டு எரிக்கிறார்கள். எல்லாம் உடான்ஸ் என்று தோன்றினாலும், காமிராக்காரரின் சாமர்த்தியம் நம்மை முதுகு நிமிர்த்த வைக்கிறது.

வசை பாட வைக்கும் இசை.

வீணாக்கப்பட்டோர் பட்டியல் என்று ஒன்று போட்டால், முதலிடம் ரஞ்சிதாவுக்கே. வரிசையாய் அப்படியே அருண்பாண்டியன், நெப்போலியன் என்று கூறினாலும் தப்பில்லை.

தமிழ் சினிமாவுக்கே உரிய சென்டிமெண்ட் சிடுக்குகள், வெளியே கண்டாலும் சமோசாவும் விற்கிறதாவென அடிக்கடி நம்மை எட்டிப் பார்க்க வைக்கின்றன. உச்சம், கிளைமாக்ஸில் வருகிறது. ஒரே ரோமாஞ்சனம் போங்கள்!

காஷ்மீர் போன்ற ஒரு சீரியஸான விஷயத்தை வைத்துக் கொண்டு, ஆக்ஷன் பூச்சுடன் நகைச்சுவைப் படம் கொடுத்திருக்கும் டைரக்டரை என்ன சொல்லிப் புகழ்வது?

தெரியவில்லையே தேவுடா!

நிறைய துணிச்சல்; ஏராளமான ஐடியா; கொஞ்சம் பணம்!

"உங்க கணவரோட வெற்றிக்கு என்ன காரணம்னு உங்களால சொல்ல முடியுமா?"


"நிச்சயமா நான் காரணமில்லே!" என்று சிரித்தார் திருமதி தன்வந்தரி சுப்பிரமணியம். - ஸ்டெர்லிங் ஹாலிடேஸ் மற்றும் மேக்ஸ்வொர்த் நிறுவனங்களின் அதிபர் ஆர். சுப்பிரமணியத்தின் மனைவி.

"அவரோட வெற்றிக்கு முழுக்க முழுக்க அவரேதான் காரணம். அவர் ஒரு selfmade man. எனக்குக் கோடியிலே எத்தனை சைஃபர் இருக்குன்னு கூடத் தெரியாது!"

தன்வந்தரி ஒரு டாக்டர்; சருமநோய் நிபுணர். சென்ற வருடம் வரை ஸ்டான்லியில் பணிபுரிந்திருக்கிறார்.

"நைஜீரியாவுல, கைநிறையச் சம்பளம் வரும் வேலை. வசதியான வாழ்க்கை. பத்துக் கோடி ரூபாய் முதலீட்டுடன், மேலும் பத்துக் கோடி ரூபாய் வங்கியிலிருந்து வாங்கி பிஸினஸ் ஆரம்பிக்கலாம்னு சொன்னதும் அவனுக்கு ரொம்பக் கவலையாயிட்டுது. ஏன்னா அந்த ரூபா கூட அவ கடன் வாங்கினதில்லே!" என்றார் ஆர். எஸ். (அலுவலக வட்டாரங்களில் இந்த இனிஷியலால் தான் அழைக்கப்படுகிறார்)

"வி ஆர் ஆப்போஸிட் இன் மெனி திங்க்ஸ். அவர் எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமா இருப்பாரோ, அதுக்கு நேர் எதிர் நான். வெளி நாட்



• திருமதி தன்வந்தரி, மாயா



• ஆர். எஸ்.

டுல இருக்கறப்ப, விடுமுறைக்காக இங்கே வந்து போகலாம்னு நினைச்சோம். 'டைம் ஷேர்' அங்கே எல்லாம் பிரபலம். அப்போதான் இங்கேயும் ஒரு'கம்பெனி ஆரம்பிச்சிருந்தாங்க. அதுல இடம் பதிவு பண்ணி வந்துட்டு, இங்க விடுமுறையைக் கொண்டாடலாம்னு நினைச்சோம். உடனே இவர், 'புக் பண்ணுவானேன்? நாமே ஒண்ணு உருவாக்கினா போச்சு!'ன்னார். 1983ன்னு நினைவு... அவர் எதையும் சீரியஸ்லாத்தான் சொல்லுவார். நான்தான் சிரிப்பேன். ஆனா நினைச்சதைச் சாதிக்கக் காட்ட முடிஞ்சதுங் கறதுதான் அவரோட குணம்!"

இன்று உலகிலேயே நெ.1 ஹாலிடே ரிசார்ட்ஸ் என்ற அந்தஸ்தைக் கைவசப்படுத்தியிருக்கிறது ஸ்டெர்லிங். தேக்குமர வளர்ப்பில் நம்பகமான நற்பெயர். பழங்களையும், காய்கறிகளையும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிரிட்டு ஏற்றுமதி செய்யவும், நவீனமான கடைகளில் விற்பனையும் செய்யவும் மாக்ஸ்வொர்த் ஆர்சர்ட்ஸ். மாக்ஸ்வொர்த் ஹோம்ஸ் வீட்டு வசதி திட்டமும் அமோக வெற்றி. இவ்வளவும் சாத்தியமாவதற்கு ஆர்.எஸ்.ஸிடம் அன்று இருந்தவை நிறைய துணிச்சல், ஏராளமான ஐடியாக்கள், கொஞ்சம் பணம்.

சென்னை போலவே பம்பாயிலும் முன்பு டிராம்கள் ஓடிக் கொண்டிருந்தன. 24 வருடங்களுக்கு முன் ஓரம் கட்டப்பட்ட டிராமை பம்பாயில் 'லைட் ரயில் டிரான்ஸிட்' என்ற புதிய அவதாரத்தில் திரும்பவும் ரோடுகளில் விட முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. பெட்ரோல் சிக்கனத்தின் முக்கியத்துவம் உணரப்படும் நிலையில் மின்சாரத்தினால் ஓடக்கூடிய டிராம்கள் மலிவானவை, அதிகமான மக்கள் பயணம் செய்யலாம்; சந்தடி அதிகமில்லை, சுற்றுப்புற சூழலையும் கெடுக்காது என்று பல பிளஸ் பாயிண்டுகள்.

— எஸ். மகேஷ்

"ஹாலிடே ரிசார்ட்ஸ் போன்ற சுற்றுலா சார்ந்த தொழிலுக்கு நிறைய எதிர்கால வளர்ச்சி இருக்கும்னு தோணினதுனால, அதை ஆரம்பிச்சேன். நிறைய பேருக்கு வேலை கொடுக்க முடியும். நிறைய வாடிக்கையாளர்களைச் சந்தோஷப்படுத்த முடியும் இதுல..." என்கிறார் ஆர்.எஸ்.

"உங்கள் பிள்ளையும் பெண்ணும் இந்த பிஸினஸில் ஈடுபடுவார்களா?"

எதிராஜில் பி.காம். படித்து விட்டு, அயோவா பல்கலைக் கழகத்தில் எம்.பி.ஏ. தேறிய பெண் மாயாவைக் கூப்பிட்டு அறிமுகப்படுத்தினார். "இவள் இப்போதே என் கம்பெனிகளில் பயிற்சி பெறத் தொடங்கி விட்டாள். மகன் சித்தார்த் சங்கர் அங்கே எம்.பி.ஏ. படித்து வருகிறான். அவனுக்கும் இதில் ஆர்வம் இருக்கிறது" என்றார் ஆர்.எஸ்.

"இப்போது நிறைய இலவச மருத்துவ மனைகளுக்குப் போய் உதவ முடிகிறது... நான் சத்ய சாய் மருத்துவமனைக்குக் கிளம்புகிறேன், வரட்டுமா?" என்று விடைபெற்றார் திருமதி தன்வந்தரி.

இந்த மூன்று வருடங்களில் அபரிமித வளர்ச்சி கண்டிருக்கின்றன ஸ்டெர்லிங்கும், மாக்ஸ்வொர்த்தும்.

"விவசாயத் துறையும் தொழில்துறையைப் போலத்தான். இப்போது 15,000 ஏக்கர் நிலத்தில் பழங்களும், காய்கறிகளும் பயிரிடுகிறோம். பி.எஸ்ஸி. விவசாயம் படித்த ஏராளமான பட்டதாரிகளுக்கு இதனால் வேலை கிடைத்திருக்கிறது. 300 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே, சரியாகச் சாப்பிடக் கூட முடியாமல் வாழ்கிறார்கள். விவசாயம், கட்டடத் துறைகளில் மட்டுமே நிறைய பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும். 70-80 மில்லியன் மக்களுக்கு இந்தத் துறைகளில் வேலை கொடுக்கலாம். அப்போதுதான் இந்த 300 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டுக்கு மேலே உயர முடியும்; ஒழுங்காகச் சாப்பிட முடியும்."

"இவை எல்லாம் எப்படிச் சாத்தியமாகின்றன? உங்களால் இத்தனை நிறுவனங்களையும் சமாளிக்க முடிகிறதா?"

"என் அலுவலர்களுக்கு முழு அதிகாரம் கொடுத்திருக்கிறேன் - empowerment. அவர்கள் வேலையில் நான் தலையிடுவது கிடையாது. என்னுடைய வேலை எல்லாம் யோசனைகளை உருவாக்குவதும், பட்ஜெட் போடுவதும், மேற்பார்வை பார்ப்பதும்தான்!"

"உங்கள் வெற்றிக்கு என்ன காரணம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"

"மனிதர்களை முழுதுமாக நம்பு. எந்த நெகடிவ் சிந்தனைகளையும் வைத்துக் கொள்ளாதே. வெற்றியையும் தோல்வியையும் சமமாகப் பாவிக்கிற மனநிலையை வளர்த்துக் கொள் - இவைதான் என் வாழ்க்கையின் நங்கூரம் - அடித்தளம். நான் முழு முயற்சி எடுத்து என் வேலைகளைச் செய்து கொண்டு போகிறேன். மீதியை ஆண்டவன் பார்த்துக் கொள்ளுகிறான். இந்த வேதாந்தமான நினைப்பு இருந்து விட்டால், வெற்றியில் தலைகெறிக்காது; தோல்வியில் தலை துவளவும் செய்யாது. நான் இரவோடு இரவாக இத்தனை நிறுவனங்களையும் உருவாக்கி விடவில்லை. ஏழு வருடங்களாகத் திட்டம் போட்டு, அடி அடியாக எடுத்து வைத்துத்தான் முன்னேறினேன்."

"நீங்கள் நினைத்தபடி எல்லாவற்றையும் சாதித்து விட்ட நிறைவு இருக்கிறதா?"

"சரியாப் போச்சு! இப்போதுதானே நான் ஆரம்பித்திருக்கிறேன். இன்னும் எத்தனையோ வேலை பாக்கி இருக்கிறது!" என்கிறார் ஆர்.எஸ்.

சந்திப்பு : **சாருகேசி**

படங்கள் : **ஸ்ரீஹரி**

கிழக்கில் உதித்து மேற்கில் மறையும் சூரியன் நம்மிடையே உறைவதேன்?

தனது மற்ற எட்டுக் கிரஹங்களுடன் சூரியனார் கோவிலை உறைவிடமாகக் கொண்டிருக்கிறார் சூரிய பகவான். சூரியனார் கோயில் தஞ்சாவூர் ஜில்லாவில் – மயிலாடுதுறை ரயில் மார்க்கத்தில் ஆடுதுறையிலிருந்து இரண்டாவது கிலோமீட்டரில் உள்ளது. நவக்கிரஹங்களுக்கென்றே தனியாக அமைந்த இக்கோயில், கட்டிட அமைப்பிலும் வேலைப்பாடுகளிலும் ஒப்பற்று விளங்குகிறது. இங்கு முக்கிய தெய்வம் சூரிய பகவான். மற்ற எட்டுக் கிரஹங்களும் அவரைச்சுற்றி தனிக்கோயில்களுடன் அமைந்துள்ளன. வரலாற்றின் படி, வான சாஸ்திரம் மற்றும் ஜோதிடக்கலையில் வல்லவர் காலவர் என்ற மாமுனிவர். ஒருநாள் அவரை ஒரு இளம் சந்நியாசி அணுகி நீங்கள் என்றாவது உமது ஜாதகத்தை ஆராய்ந்ததுண்டா என்று வினவினார். ஆச்சரியமடைந்த காலவர் தாங்கள் யார் என்று வினவ இளம் சந்நியாசியாக வந்த காலதேவன் அவருக்குத் தமது உருவத்தைக் காட்டி மறைந்தார். பின்னர் காலவர் தமது ஜாதகத்தை ஆராய்ந்து கிரஹநிலை தமக்குப் பாதகமாக இருப்பதை அறிந்தார். இன்னல்கள் அகல அவர் நவக்கிரஹ தேவதைகளை நோக்கிக் கடும் தவமிருந்தார். தவத்தை மெச்சி நவக்கிரஹ தேவதைகள் அவருக்குக் காட்சி கொடுத்து அவரும் அவரது சந்ததியினரும் கிரஹநிலைகளால் ஏற்படும் பாதிப்பிற்கு உட்படாமலிருக்க வரம் கொடுத்தனர். இது இயற்கை நியதிகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாதலாலும், நல்லதோ கெட்டதோ பலாபலன்களை மனிதனது கர்ம வினைகளுக்கேற்ப அளிக்கும் கடமை மட்டுமே உடையவர்கள் நவக்கிரஹங்கள் ஆதலாலும் அக்கடமையிலிருந்து வழுவியதற்காக பிரம்ம தேவன் அவர்களை தேச பிரஷ்டம் செய்து பூலோகத்தில் தொழுநோயாளிகளாகக் கஷ்டப்படும்படி சாபம் கொடுத்தார். அவர்கள் திருமங்கலக்குடி அருகே உள்ள அர்க்கவனத்தை அடைந்து அங்குள்ள ஒன்பது புனித தீர்த்தங்களிலும் நீராடி சிவபெருமானை நோக்கித் தவமிருந்தார்கள். இரக்கம் கொண்ட சிவபெருமான் அவர்கள் கேட்ட வரங்களைக் கொடுத்து சாபத்திலிருந்தும் விடுதலையளித்தார். அதுமட்டுமல்லாது கர்மவினைப்பயனால் கிரஹங்கள் தரும் இன்னல்கள் இவ்விடத்தில் வழிபடுவதன் மூலம் குறையும் என்றும் விதித்தார். இங்கு நவக்கிரஹ தேவதைகள் ஆயுதங்கள் ஏதுமின்றி தத்தம் மனைவியரோடும் மகிழ்ச்சியுடன் காட்சியளிப்பது இதை ருசுவாக்குகிறது. தங்கள் விருப்பப்படியில்லாமல் இறைவனின் சித்தப்படி இங்கே நவக்கிரஹங்கள் அனுக்கிரகம் செய்து வரம் தரும் தேவதைகளாக மாறிவிட்டதைக் குறிக்கிறது. கர்ம வினைப்பயன்கள் மீற முடியாதவை ஆனாலும் தெய்வத்தைச் சரணடைந்து தெய்வ நெறிப்படி நடந்தால் அமைதியும் மகிழ்ச்சியும் கிட்டும் என்பது உணர்த்தப்படுகிறது.



இவ்வாறாக இந்த இடம் நவக்கிரஹங்களின் உறைவிடமாகி அவர்களுக்கென கோயில்கள் உருவாகியுள்ளன. தொன்மை வாய்ந்த இக்கோயிலின் மகத்துவம் மஹாபாரதக் காலத்துடன் தொடர்புடையது. இன்றும் ஆயிரக்கணக்கான மக்கள் தமது உடல் மற்றும் மன உபாதைகளிலிருந்து விடுபட இக்கோயிலுக்கு வருகை தருகிறார்கள். நமது பெருமை மிக்க பாரம்பரியத்திற்கும், கலாசாரச் சிறப்பிற்கும் சூரியனார் கோயில் மற்றொரு ஒப்பற்ற எடுத்துக்காட்டு. காலத்தினை வென்று நிற்கும் இது போன்ற நமது பாரம்பரிய பெருமைகளாலும், தனித்துவம் வாய்ந்த ஒழுக்க நெறிகளாலும், பூரிப்பும் உற்சாகமும் அடைகிறது 'ஹார்வெஸ்ட்'. இப்பெருமைகளை உலகறியச் செய்து பாதுகாப்பதில் தங்களாலியன்ற பணியினைச் செய்கிறது. படிப்போரும், ஹார்வெஸ்ட்டின் இந்த முயற்சியில் பங்கு கொண்டு இது போன்ற வரலாறுகளை எழுதியனுப்பினால் அவற்றை எந்தவித மத வேறுபாடுமின்றி வெளியிடத் தயாராக உள்ளது 'ஹார்வெஸ்ட்'.


HARVEST
BENEFIT FUND LIMITED
புதுமை எண்ணங்கள் கொண்ட நிதி

Insight 1466

பதிவு அலுவலகம் : 19, வியாசர் தெரு, (வடக்கு உஸ்மான் ரோடு அருகில்), தி. நகர், சென்னை 600 017. போன் : 8253597, 8281192. **கிளைகள் : சென்னை** : • **ஆழ்வார்பேட்டை** : போன் : 4991552, 4992231 • **ஜார்ஜ் டவுன்** : போன் : 5227891 • **அண்ணா நகர்** : ரூம் நெ. 4, முதல் மாடி, V.S.D. பிளாசா, AA1, 2வது அவென்யூ (ரவுண்ட் டானா அருகில்), • **திருவான்மியூர்** : போன் : 411264 • **கோயம்புத்தூர்** : போன் : 444089 • **பெங்களூர்** : போன் : 3310529 • **பம்பாய்** : போன் : 2656965, 2656970 • **செகந்திராபாத்** : போன் : 846669 • **புதுடெல்லி** : போன் : 6478781/82 • **நாக்பூர்** : போன் : 535149, 546790. • **புனே** : F.C. ரோடு (கைலாஷ் ஹோண்டா ஷோரூம் எதிரில்). **உறுப்பினர் சேவை மையங்கள் : சென்னை : நங்கநல்லூர்** – திரு. K. விஜயராகவன், போன் : 2343970. **குரோம்பேட்டை** – திரு. F.V. சாம்பசிவன், போன் : 402708. **புதுக்கோட்டை** – திரு. K.S. சேஷமூர்த்தி, போன் : 20440. **காரைக்குடி** – திரு. N. கேதார்நாத், போன் : 622373. **திருநெல்வேலி** – திரு. S. கண்ணன், போன் : 578078 PP. **ராணிப்பேட்டை** – திரு. R. சுப்ரமணியம், போன் : 44604, **காக்கிநாடா** – திரு. V.V. கிருஷ்ணாராவ், போன் : 71396

இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிதி நிறுவனம் ஸ்தாபிதம் 1987 எங்கள் சேவை உறுப்பினர்களுக்கு மட்டுமே

ஸ்ரீ சிவ சூரிய நாராயணப் பெருமானின் அழகிய வண்ணப்படத்தை இலவசமாகப் பெற,
ஹார்வெஸ்ட் தொடர்பு மையம், தபால் பெட்டி எண் 8595, சென்னை – 41. என்ற முகவரிக்கு எழுதுங்கள்.



உ
வசம்

ஹார்வெஸ்ட்

நிதி அந்தஸ்து

உறுதியான தொழில் உறவுகள்

பாதுகாப்பே எங்கள் வலிமை

அக்கறையுடன் சேவை

ஒவ்வொரு செயலிலும் நேர்மை

முழுமையான திட்டங்கள்

தேவைக்கேற்ப திட்டங்கள்


உறுப்பினர் சேவை மையங்கள்

வயது முதிர்ந்தோர் சங்கம்

மதிப்பை போற்றும் ஈடுபாடு

நல்லறிவுடன் நாணயம்

வாருங்கள்... முற்றிலும் வேறுபட்ட சிறந்த சேவையைப் பெறுங்கள்





1996 பிப்ரவரி 11
யுவ தை 28
மலர் : 54
இதழ் : 28

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஒரு ரூபாய் சம்பளம்; ஒன்றரை கோடி ஊழல்!


புரட்சித் தலைவி அல்லவா....? அதனால்தான் மிகவும் புரட்சிகரமாக ஒரு விளக்கம் அளித்திருக்கிறார் ஜெயலலிதா!

1.3 கோடி ரூபாய் அயல்நாட்டுப் பணத்தை ஜெயலலிதா இந்தியாவுக்குக் கொண்டு வந்ததாகத் தெரிய வந்துள்ளது. தமது செயல், சட்டமீறல் அல்ல என்று வாதாடியிருக்கிறார் அவர்.

நாட்டின் அந்நியச் செலாவணி நிலவரம் மிகவும் கவலைக்கிடமாக இருந்த காலகட்டத்தில், மத்திய அரசு விதிகளைத் தளர்த்தியது. 'யார் வேண்டுமானாலும் அயல் நாட்டுப் பணத்தை இந்தியாவுக்குள் கொண்டு வரலாம் - கணக்கோ விளக்கமோ கேட்கப்படமாட்டாது' என்று அறிவித்தது.

ஆனால், இவ்வாறு விதியைத் தளர்த்துவது மிகவும் தவறு; நாட்டின் பண்பு நெறி பாழாகிப் போகும் என்பதையும் உணர்ந்து, அதனை ஆறு மாதங்களுக்கு மட்டுமே அமுல்படுத்துவதாகவும் கூறியது மத்திய அரசு.

சட்டம் தளர்த்தப்பட்ட கால்த்தில்தான் தமது பணம் இந்தியாவுக்குள் வந்தது என்பதால், தாம் சட்ட மீறலில் ஈடுபடவில்லை என்பது முதல்வரின் வாதம். இந்த வாதமே அவர் முறைகேடாகப் பணம் சேர்த்துள்ளதற்கான ஒப்புதல் வாக்குமூலமாக



வும் அமைகிறது.

1.3 கோடி ரூபாய் அவர் கணக்கில் எப்படி வந்து சேர்ந்தது? ஒரு ரூபாய் சம்பளம் வாங்கும் முதல்வரால் இவ்வளவு பெரிய தொகையை நேர்மையாக சம்பாதித்திருக்க முடியுமா? இந்த 1.3 கோடி என்பதுதான் முழு தொகையா, அல்லது இது ஒரு சிறு பகுதிதானா? இது போல் இன்னும் எத்தனை தில்லுமுல்லு கள்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் முதல்வர் பதில் சொல்லியாக வேண்டும்.


சட்டத்தின் பாதுகாப்பில் ஜெயலலிதா ஒளிந்து கொள்ளலாம்; ஆனால் ஒரு மோசடி தொழிலதிபரைப் போல் கறுப்புப் பணத்தைக் குவித்து விளையாடுவது, தமிழக மக்களுக்கு அவர் இழைக்கும் மாபெரும் அநீதி.

சட்டத்தையும் தர்மத்தையும் நிலை நாட்டி, நல்லாட்சி தர வேண்டும் என்பதற் காகத்தான் மக்கள் அவரை ஆட்சியில் அமர்த்தினார்கள். சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு மக்களைச் சுரண்டி, ஏமாற்றி, பணம் குவிப்பதற்காக அல்ல!

திருச்சி தீர்மானங்கள்!

திருச்சியில் விடிய விடிய ஊர்வலம் நடத்திக் காட்டியிருக்கிறது தி.மு.க. போட்டி யாக, 'விடிந்த பிறகும் எங்கள் ஊர்வலம் தொடரும்' என்று முழங்கியிருக்கிறார் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா! தமிழக மக்களுக்குத்தான் விடிவுகாலமே கிடை யாதோ என்று சோர்வு உண்டாகிறது!

இரு கட்சிகளும் எண்ணிக்கை பலத்தை நிரூபிக்கும் போட்டியில், திருச்சி



நகரத்தை ஒரு கலக்கு கலக்கி, உள்ளூர் மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதற்கு மேலாக என்ன சாதித்துவிடப் போகின்றன?

'ஹிந்து' போன்ற தேசிய நாளிதழ்களில் வெளியான தி.மு.க. மாநாட்டுத் தீர்மானங்கள் முழுத் திருப்தி அளிக்கவில்லை.

மத்தியிலும் மாநிலத்திலும் நிலவும் ஊழல் ஆட்சியைக் கண்டிக்கிறது ஒரு தீர்மானம். மிகவும் சரி. ஆனால் அத்தகைய ஊழல் நிலவாத ஆட்சியைத் தர தி.மு.க என்ன செய்யும்?.... 'ஆட்சிக்கு வந்ததும் சொத்துக் கணக்கு சமர்ப்பிப்போம்' என்றோ பாரபட்சமின்றி ஊழலை விசாரிக்கத் தனி அமைப்பு (ombudsman) நிறுவுவோம் என்றோ ஒரு ஆக்கபூர்வமான அறிவிப்பும் இல்லை!

இலங்கைப் பிரச்னையில் தலையிடாத மத்திய அரசைக் கண்டிக்கிறது ஒரு தீர்மானம். ஆனால் அந்த அயல்நாட்டுப் பிரச்னை குறித்து பிரதமர் என்ன செய்யலாம் என்பதைக் குறிப்பிடவேயில்லை. இலங்கை அரசாங்கத்தைக் குறை கூறுகின்ற அந்தத் தீர்மானத்தில், அப்பிரச்னை இவ்வளவு மோசமாவதற்குக் காரணமான புலிகளைக் கண்டித்து ஒரு வார்த்தை இல்லை.

கருணாநிதி தமது பேச்சில் கூட, மாநில சுயாட்சி கோரிக்கையை மீண்டும் நினைவூட்டுகையில், 'அக்கோரிக்கை மறுக்கப்பட்டால் பல காஷ்மீர்கள் உருவாகும்' என்று பயமுறுத்துகிறார்!

இத்தகைய பேச்சு, தொண்டர்களுக்குக் கிளர்ச்சியூட்டலாம்; கண்டனத் தீர்மானங்களும் பிரும்மாண்ட ஊர்வலங்களும் வோட்டுக்களைப் பெற்றுத்தர உதவலாம். ஆனால் இந்த அணுகுமுறையினால் தமிழ் நாட்டுக்கு லாபமோ முன்னேற்றமோ இருக்காது. ஆக்கபூர்வமான அணுகுமுறை மட்டுமே அவற்றைப் பெற்றுத்தர முடியும்.

பணம் குவிக்கும்

தியானேஸ்வரன் வீட்டில் சோதனை போட்ட வருமான வரித்துறையினர் அங்கு பணச் சுரங்கமே இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அரசாங்கமும் அவரைப் பணி நீக்கம் செய்யவில்லை; அவராக முன்வந்து பதவி விலகவுமில்லை!

இன்பசாகரன் வீட்டிலும் இதே போல் சோதனை நடத்தப்பட்டு கணக்கில் வராத பணம் லட்சக்கணக்கில் அகப்பட, அவர் பணி நீக்கம் செய்யப்பட்டு, மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு விட்டார்! வழக்கு – கிணற்றில் போட்ட கல்!

அண்ணா நகரில் இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வீட்டில் ரவுடி கும்பல் நுழைந்து லட்சக்கணக்கான ரூபாய்களைத் திருடியிருக்கிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஐ.ஏ.எஸ். பணிக்குச் சிலர் வருவதே பணத்தைக் குவிப்பதற்குத்தான் என்று எண்ண வேண்டியுள்ளது!


உயர்ந்த லட்சியம் உடையவர்கள், நாட்டு நலனில் மெய்யான அக்கறையுடைய இளைஞர்கள், சேவை மனப்பான்மை இருப்பவர்கள் மட்டுமே நுழையக்கூடிய துறையென்றுதான் இந்திய ஆட்சிப் பணித்துறை கருதப்பட்டது. 'சிவில் சர்வீஸ்' என்றே அதைக் குறிப்பிடுவார்கள். 'சர்வீஸ்' என்னும்போதே ஒரு லட்சிய முத்திரை அத்துறைக்குக் குத்தப்பட்டு விடுகிறது அல்லவா!

இத்துறையில் நுழைவதற்கான பரீட்சைகளும் சோதனையும் கடுமையாக அமைக்கப்பட்டதன் நோக்கமும் அத்தகைய லட்சிய நோக்குள்ள சிலரை மட்டுமே அந்த உள் வட்டத்தில் அனுமதிக்க வேண்டும் என்பதுதான்.

வருடத்துக்கு இரண்டு லட்சம் பேர் 'சிவில் சர்வீஸ்' நுழைவுத் தேர்வு எழுதுகிறார்கள். அதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு மீண்டும் நேர்காணல் தேர்வு நடத்தப்படுகிறது. அந்த நேர்காணலில் இறுதியாகத் தேர்வாகும் இரண்டாயிரம் பேரில் பொறுக்குமணிகளான 140 – 150 பேர்தான் 'IAS' அதிகாரிகளாக அமர்த்தப்படுகிறார்கள். நேர்காணலில் சிறப்பாகப் பதிலளிக்கும் இதர பலர் (சுமார் 1.500 பேர்) allied service எனப்படும் வனத்துறை, சுங்கத்துறை போன்றவற்றில் பணிக்கு அனுப்பப்படுகிறார்கள். இவர்களுக்கு IAS முத்திரை கிடையாது.

பரீட்சையிலோ நேர்காணலிலோ ஒரு நபரின் கொள்கைப் பற்றையும் வாய்மையையும் எடைபோடுவது இயலாத காரியமாக இருக்கலாம். ஆனால் சுலபமாக சம்பாதிக்கும் (கொள்ளையடிக்கும்?) எண்ணம் இருப்பவர்கள் அதற்கென இவ்வளவு முயற்சிகளெடுத்து படித்து பரீட்சைகளெழுதி கஷ்டப்படுவார்களா என்பது சந்தேகமே.

ஆக, முறையாகத் தேர்வாகி பணியில் நுழையும்போது அதிகாரிகள் ஓரளவு அடிப்படை கொள்கைகளும் மதிப்பீடுகளும் கொண்டவர்களாகவே இருப்பார்கள் என்று நம்பலாம்.



பதவியா IAS?

பணமூட்டைகளாக பின்னர் அவர்கள் மாறுவதற்கு என்ன காரணம்?

"அரசியல் தலையீட்டினால் புரையோடிப் போன நிர்வாக அமைப்புத்தான்" என்கிறார் ஓய்வு பெற்ற ஒரு காவல்துறை உயரதிகாரி.

"எந்த மனிதனுமே முதல் முறை தவறு செய்ய மிகவும் யோசிப்பான். ஆனால் ஒரு முறை சமரசம் செய்து கொண்ட பிறகு தொடர்ந்து செய்வதற்குத் தயங்கவே மாட்டான். அரசியல் வாதிகளின் வற்புறுத்தலுக்கு இணங்காவிட்டால் 'விளைவு'களைச் சந்திக்க வேண்டிய நிலை. வந்தது வரட்டும் என்று தாக்குப்பிடிப்பவர்கள் 'மைனாரிட்டி'யாகி விடுகிறார்கள். பெரும்பான்மையினர் 'ஏன் வம்பு' என்று சமரசம் செய்து கொள்வார்கள்..." என்கிறார்.



• சந்திரலேகா



• கார்த்திகேயன்

மற்றவர்கள் தவறு செய்வதற்கு இடம் கொடுக்கும் அளவுக்கு முதலில் சமரசம் செய்து கொள்பவர்கள் தாங்களும் அதே போல் தவறு செய்பவர்களாக விரைவில் மாறி விடுகிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, வழக்கமான பயிற்சி, தேர்வு முறைகளுக்கெல்லாம் உட்படாமல், Conferred IAS என்ற பிரிவில் பணிக்கு வருவோர் இருக்கிறார்கள். பொதுப் பணித்துறை தேர்வு எழுதி மாநில அளவில் டெபுடி கலெக்டர்களாக எட்டாண்டுகள் பணியாற்றிய சிலரை, அவர்களின் சிறந்த பணி கருதி conferred IAS என்று மாநில அரசே நியமிக்கும்.

(ஞானேஸ்வரன், இன்பசாகரன் ஆகிய இருவரும் இந்த முறையில் வந்தவர்களே.)

இந்த conferred IAS பதவி என்பது அரசியல் உயர்மட்டத்தினருக்குச் செய்யப்படும் 'உதவி'களுக்காக அளிக்கப்படும் ஒரு பரிசு என்ற வருந்தத்தக்க நிலை உருவாகி விட்டது. 'பரிசு' பெற்றவர்கள் தொடர்ந்து நன்றியறிதலுடன் நடந்து கொள்வதும் அதற்காக மேலும் 'பரிசு' பெறுவதும் விஷ வட்டமாகத் தொடர்கிறது. சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் வீடுகள் பணச் சுரங்கமாக மாறுகிறது!

இத்தனைக்கும், ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஊழல் செய்து விடக்கூடாது என்பதற்காகவே ஏற்படுத்தப்பட்ட பல விதிமுறைகள் இருக்கின்றன. ஆண்டுக்கொருமுறை ஒவ்வொரு அதிகாரியும் தம் பெயரிலும் தம் குடும்பத்தார் பெயரிலும் உள்ள அசையா சொத்துக்களின் விவரத்தை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். எந்த அசையா சொத்தைப் புதிதாக வாங்கினாலும் அரசின் அனுமதி பெற்றே வாங்க வேண்டும். அசையும் சொத்துக்கள் வாங்கும் போது பதிவுபெற்ற விற்பனையாளரிடமே வாங்க வேண்டும். இருவகை சொத்துக்களை வாங்கும்போதும், அதற்கான பணம் எந்த வகையில் கிடைத்தது என்ற விவரத்தையும் தெரிவிக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் பலர் அவ்வாறு செய்வதில்லை. இதை யாரும் தட்டிக் கேட்பதுமில்லை.

ஆக, அரசாங்கத்தை மீறியோ, அரசு அறியாமலோ எந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியும் தவறு இழைத்து விட முடியாது. பாதுகாப்பு விதிகளை மீறி தவறுகள் தாராளமாகவே நடக்கின்றன என்னும் போது அவையெல்லாம் அரசின் ஆதரவிலும் ஆசிகளுடனும்தான் நடக்கின்றன என்பது தெள்ளத் தெளிவாகிறது.

பணியில் நுழையும் ஐ.ஏ.எஸ். அதிகாரியின் ஆரம்பச் சம்பளம் (படிகள் உள்பட) சுமார் ஆறாயிரம் ரூபாய். கார், தொலைபேசி வசதி (பகுதியாகவோ, முழுமையாகவோ) ஆகியவை உண்டு. பணி நிலைகளில் படிப்படியாக



• இன்பசாகரன்



• தியாகேஸ்வரன்

முன்னேற, முன்னேற சம்பள விகிதமும் உயர்கிறது (ஆறு விகிதங்கள் உள்ளன) அதிகபட்சம் பதினாறாயிரத்தைத் தொட வாய்ப்பு உண்டு.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கைக்கு இந்த சம்பளவிகிதம் குறைவாக(?) இருப்பது ஊழலுக்கு ஒரு காரணமா?

"எனக்கு முதன் முதலாகக் கிடைத்த சம்பளம் 3.50 ரூபாய். நான் பணியில் சேர்ந்து இருபது வருடங்களுக்குப் பின்னரே டி.வி., ஃப்ரிட்ஜ் வாங்க முடிந்தது" என்கிறார் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கார்த்திகேயன்.

அதைப் போன்ற பொறுத்திருந்து முன்னேறும் மனநிலை இன்று சமுதாயத்தில் இல்லை. எனினும், "அதிகாரிகளுடைய பணித் தரத்தில் குறையே சொல்ல முடியாது" என்கிறார் கார்த்திகேயன். "பயம் காரணமாகவும் சுயலாபம் கருதியும் தடுமாறிப் போகிறார்கள்" என்கிறார்.

ஐ.ஏ.எஸ். வட்டாரத்தில் பொதுவாக ஒப்புக் கொள்ளப்படும் ஒரு விஷயம், இந்தச் சீரழிவு தொடங்கியது 1970களில்தான் என்பது. அந்த காலகட்டத்தில் ஒரு முக்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரி வீட்டிலிருந்து நானூறு பட்டுப் புடைவைகள் பறிமுதல் செய்யப்பட்டன!

ராஜாஜியும் காமராஜும் முதல்வராக இருந்த காலத்தில் தாங்களே முன்னோடியாக இருந்ததோடு அதிகாரிகளையும் கண்காணித்துக் கண்டித்தனர்.

ஒரு அதிகாரியின் வீட்டு கிரகப்பிரவேசத்துக்குப் போன ராஜாஜி, மிக விலை உயர்ந்த பொருள்களை அவர் பரிசாகப் பெற்றதை கவனித்து, அவற்றையெல்லாம் அரசிடமே ஒப்படைத்துவிட வேண்டும் என்று உத்தரவு போட்டார்.

காமராஜ் காலத்தில், பொதுப் பணித்துறையில் இருவருக்கு வேலை வாங்கிக் கொடுத்து முப்பதாயிரம் 'சம்பாதித்த' ஓர் அதிகாரியை உடனடியாக ராஜினாமா கடிதம் எழுதிக் கொடுத்துவிடும்படி கூறி விட்டார் முதல்வர்!

இன்றைக்கு நிலைமை தலைகீழ் என்பது யாவரும் அறிந்ததே.

பணிக்காலத்தில் ஏற்படும் சோதனைகளை எதிர்கொள்ள ஏராளமான மனோபலம் வேண்டும். "தங்களது நேர்மை காரணமாகவே உப்புச்சப்பற்ற பதவிகளுக்கு மாற்றப்படும் போதும் அந்தப் பணியை முழு மனத்தோடு ஏற்றுக் கொள்கிற மனோதிடம் அவசியம். இது இருந்து விட்டால் ஊழல் அரசியல்வாதிகளுக்கு அடிபணிந்து போக வேண்டிய அவசியமில்லை!" என்கிறார் கார்த்திகேயன்.

"நான் வீட்டு - வசதித் துறையில் இருந்த போது, கோட்டையில் மூன்றாவது மாடியில் லஞ்சம் கொடுக்க சுற்றிக் கொண்டிருந்த தரகர்களை விரட்டியடித்தேன்" என்கிறார் சந்திரலேகா.

"கிண்டி தொழிற்பேட்டை நிலத்தை குறைந்த விலைக்கு மதிப்புப் போட்டு விற்று லாபத்தைப் பங்கிட்டுக் கொள்ள எனக்கு அழைப்பு விடுத்தார் ஓர் அமைச்சர். நான் மறுத்து, விலகிக் கொண்டேன்" என்கிறார் முன்னாள் ஐ.ஏ.எஸ்ஸான சுந்தரம்.

இப்படி ஊழலை விரட்ட முயற்சி செய்பவர்கள் அரசால் விரட்டியடிக்கப் படுவதையும் விலகி வருவதையும் பார்க்கும்போது மற்ற அதிகாரிகள் அதைரியம் அடைவது இயல்பே.

இத்தகைய சோதனைகளைச் சந்திப்பதற்கென்றே அதிகாரிகளுக்கு சிறப்புப் பயிற்சி தந்தால் என்ன...?

"அது நடைமுறை சாத்தியமில்லை" என்கிறார் கார்த்திகேயன். "ஒரு மனிதனுடைய 'moral fibre' அவனது குடும்பச் சூழல், வளர்ப்பு, பள்ளி - கல்லூரிச் சூழல், பெற்றோர்களின் நடத்தை என்று பல விஷயங்களைப் பொருத்தே அமைகிறது. பணியின் துவக்க காலத்திலிருந்தே நெருப்பாக இருந்துவிட்டால் ஓர் அதிகாரியை வளைத்துப் போட எந்தக் கொம்பனாலும் முடியாது" என்கிறார்.

இப்படி நெருப்பாக இருந்த பல அதிகாரிகள் தமிழகத்துக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். தங்கள் வீட்டுத் திருமணம் போன்ற குடும்ப நிகழ்ச்சிகளுக்கு வரப் பெற்ற பரிசுகளைக் கூட பட்டியலிட்டு, மதிப்புப் போட்டுச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

"சோதனைகள் ஏற்படும் போது இத்தகைய நேர்மையான அதிகாரிகளை எண்ணி, தைரியம் பெறலாமே" என்கிறார் கார்த்திகேயன். "ஒரு கரும்புள்ளி கூட இன்றி சிறப்பாகவும் நேர்மையாகவும் பணியாற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிக்குச் சிறப்பு விருது வழங்கி ஊக்குவிக்கலாம்" என்றும் யோசனை கூறுகிறார்.

ஆனால், அரசியல்வாதிகளும் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களும் அதிகாரிகளை ஊழல் கூட்டணியில் சேர்த்துக் கொண்டு கொட்டம் அடிக்கிறார்கள் என்பதே இன்றைய நிலை. மூன்று அதிகாரிகள் சேர்ந்த ஒரு கூட்டணி, கோவையில் கள்ளச் சாராயத் தொழிற்சாலையே நடத்துவதாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் கூட்டணியைப் பார்த்து, மற்ற அதிகாரிகளும் 'தைரியம்' அடையாமல் இருக்க வேண்டுமே!

- ஸ்ரீநிவாசன்

உ

ஸ்ரீ ராமஜெயம்

செம்பொன்குடி ஸ்ரீஸ்ரீதேவி பூமிதேவி ஸமேத ஸ்ரீ வரதராஜஸ்வாமி

மஹா கும்பாபிஷேகப் பத்திரிகை

ஸ்ரீய : பதியும் அவாப்தஸமஸ்தகாமனும் ஸர்வலோக சரண்யனுமான ஸர்வேச்வரன் ஸ்ரீமன் நாராயணன் லோகானுக்ரஹார்த்மாகவும் பக்தர்களின் அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வதற்காகவும் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து அர்ச்சாமூர்த்தியாய் ஆவிர்பவித்திருக்கும் திவ்ய க்ஷேத்திரங்களில் முக்யமானதும், திருக்கண்ணமங்கையெனும் திவ்ய க்ஷேத்திரத்திற்கருகாமையில் பிரகாசிக்கறது மான கனகபுரம் என்ற செம்பொன்குடி க்ஷேத்திரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்ரீதேவி ஸ்ரீபூமிதேவி ஸமேத ஸ்ரீ வரதராஜப்பெருமாளுக்கும், நூதன மகாலெக்ஷ்மிக்கும் ஸ்ரீஆஞ்சநேயர், பரிவாரங்களுக்கும் நாளது யுவ-வருஷ தை-மீ 28உ (11.2.96) ஞாயிற்றுக்கிழமை சுவாதி நக்ஷத்திரம் ஸித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் வைகானஸ ஆகம சாஸ்திரப்படி நாழிகை 5க்கு மேல் 8¾க்குள் (காலை மணி 7.00 to 8.30) கும்ப லக்னத்தில் பகவதனுக்ரஹத்தையும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களின் அனுக்ரஹத்தை முன்னிட்டும், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சிதலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்களின் பேருதவியுடனும் திருப்பணி செய்யப்பட்டு, **மஹாசம்ப்ரோக்ஷணமும், மஹாகும்பாபிஷேகமும்** நடக்கிறபடியால் பகவத் பக்தர்கள் அனைவரும் வந்திருந்து பகவத் ப்ரதிஷ்டை, மஹா கும்பாபிஷேகம் இவைகளை தரிசித்து நேத்ரானந்தம் அடைந்து ஸ்ரீ பகவத் க்ருபைக்குப் பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்,

செம்பொன்குடி, கிராமவாஸிகள்.

ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ மீனாக்ஷி டிராவல்ஸ் (டில்லி)

4/24. W.E.A. KAROL BAGH, NEW DELHI - 110 005. PHONE : 5726891, 5723735, 5757268

சுற்றுலாத் துறையில் அனுபவமிக்கவர்களால் நடத்தப்படும் வட இந்திய உல்லாச புனித யாத்திரைகள்.

1. தேவி தரிசனம் : நைனா தேவி, ஜ்வாலாமுகி, சிந்தபூரணி, சாமுண்டி, காங்கரா, ஸ்ரீ வைஷ்ணவி தேவி, அமிர்தசரஸ், பொற்கோவில், வாஹா, இந்தியா பார்டர், ராமதீர்த் (லவன் குசா பிறந்த இடம்) ஜம்மு ரகுநாத் மந்திர், குருக்ஷேத்திரம் (கீதாபதேசம்) 6 நாட்கள். புறப்படும் தேதி 4.04.96, நபர் ஒன்றுக்கு ரூ 1400/-.

2. பத்ரிநாத் – ஹரித்வார் – ரிஷிகேஷ் – ஜோஷிமட். புறப்படும் தினங்கள் : 5.5.96, 15.5.96, 24.5.96, 7.06.96. 7 நாட்கள் - ரூ 1400/-

3. பத்ரி - கேதார்நாத் - திரியுக் நாராயண் யாத்ரா – ஹரித்வார் – ரிஷிகேஷ் - ஜோஷிமட். பத்ரிநாத் புறப்படும் தினங்கள் : 5.5.96, 15.5.96, 7.6.96, 10 நாட்கள் - ரூ. 1900/-

4. சிம்லா - குல்லு - மணாலி - ரோதாங் பாஸ் - மணிகரன் - குப்ரி - சண்டிகர் - பிஞ்சோர் கார்டன்ஸ் - பாக்ரா நங்கல் - ஆக்ரா - மதுரா - பிருந்தாவன் - ஜெய்ப்பூர் - டில்லி சுற்றிப் பார்க்க நபர் ஒன்றுக்கு ரூ 3000/ - புறப்படும் தேதி 13.4.96. 8 நாட்கள்

(மேற்கண்ட டூர்கள் எல்லாம் 2 வேளை காபி, சுவையான சிற்றுண்டி மற்றும் இரண்டு வேளை பிராமணாள் சாப்பாடு மற்றும் தங்குமிடம் உட்பட).

யாத்திரை பற்றி கீழ்க்கண்ட முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

1. M/s Padma Printing Works, Mahalakshmi Street, T. Nagar, Madras - 600 017.
Phone : 4345558, 4347521, 420016.
2. Shri. R. Kesavan Iyengar, 1/90 Single Street, Kalyanapuram, Thanjavur - 613 201. Phone : 60426
3. Shri. P. Dasarathan, Sri Venkateswara Agencies, 64/4F, Pullalakottai Road, Virudunagar - 626 001.
Phone 44901.
4. Shri. V. Panner Selvam, Vinayaga Trade Link (Commodities Agents)
2/12 K.R. Building, Royal Road, Near Gajapriya Hotel, Contonment, Trichy - 620 001.
Phone : 466007 (O) 461050 (R)

ஊழலை எதிர்க்கும் தகுதி எங்களுக்கு மட்டுமே இருக்கிறது!

"ம.தி.மு.க. தேர்தலுக்குத் தயாராகி விட்டதா?"

வை.கோ. : கட்சி துவக்கிய முதல் நாளிலிருந்தே தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருந்தவர்கள் நாங்கள். இப்போதுள்ள சூழ்நிலையில் மகத்தான சக்தியாக திரண்டிருக்கிறோம். கட்சி துவக்கிய ஒன்றரை வருட காலத்துக்குள் 32,000 கிளைக் கழகங்கள் அமைக்கப்பட்டு அதற்குத் தேர்தலும் நடத்தப்பட்டு வருகிறது. இப்போது 20 லட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மாநில மாநாடும் நடத்தியிருக்கிறோம். கடந்த 18 மாதங்களில் 6500 கிராமங்களில் நான் கொடி ஏற்றி வைத்திருக்கிறேன். நகரங்களில் வசூல் செய்து கொடி ஏற்றி விடலாம். ஆனால் கிராமங்களில் அப்படி அல்ல. கிராம மக்களின் ஒன்றுபட்ட ஆதரவு இருந்தால் தான் நிதி வசூலித்து பீடம் கட்டி, இரும்புத் தூண்களை வைத்துக் கொடியேற்ற முடியும்.

வெவ்வேறு கருத்துக்கள், கொள்கைகள் கொண்ட கட்சிகள் தேர்தலுக்காகக் கூட்டு வைத்துக் கொள்வது பற்றி...?

வை.கோ. : ஒத்த கருத்துடைய கட்சிகள் உடன்பாடு வைத்துக் கொண்டால்தான் மக்களிடையே மதிப்பும் நம்பிக்கையும் உண்டாகும். எங்களைப் பற்றிச் சொல்வதானால் நாங்கள் மார்க்சிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயல்பட்டு வருகிறோம். மத்திய, மாநில ஊழல் அரசுகளை எதிர்ப்பது, ஜாதி, மத அடிப்படையில் செயல்படாதது, மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பது என்று அவர்களுக்கும் எங்களுக்கும் ஒத்த கருத்துக்கள் பல இருக்கின்றன.

ஈழ விவகாரத்தில் முரண்பட்டிருக்கிறீர்களே?

வை.கோ.: இரண்டு இயக்கத்தவர்களும் சேர்ந்து இருக்கும் மேடையில் ஈழ விவகாரத்தைப் பேச வேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறோம். எனவே, தேர்தலைப் பொறுத்த மட்டில் ஈழ



விவகாரம் எங்களுக்குள் எந்தப் பிளவையும் உண்டாக்காது.

ஆக, மார்க்ஸிஸ்டுகளுடன் நெருக்கம் நீடிக்க வேண்டுமென்பதற்காக நீங்கள் சற்றே விட்டுக் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லலாமா?

வை.கோ.: ஈழ விவகாரத்தில் எங்களுடைய கருத்து என்னவென்பது அவர்களுக்குத் தெரியும். அதை மாற்றிக் கொள்ளச் சொல்லி அவர்கள் எங்களுக்குக் கட்டளை எதுவும் போடவில்லை. பொது எதிரிகளை வீழ்த்துவதற்கு தேர்தல் நேரத்தில் கட்சிகள் அணி திரளும்போது இது போன்ற நிலை தவிர்க்க முடியாதது.

தேர்தலின் போது நடிகர் ரஜினிகாந்த் என்ன நிலை எடுப்பார் என்று கருதுகிறீர்கள்?

வை.கோ.: ஒவ்வொரு கட்சியும் ரஜினியை பயன்படுத்தப் பார்க்கிறது. எங்கள் கட்சியில் ரஜினி மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருக்கிறார்கள். ஊழல் மிகுந்த ஜெ. அரசு அகற்றப்பட வேண்டும் என்று ரஜினி சொல்கிறார். இப்போதைய நிலையில் ஊழலை எதிர்க்கும் தகுதி ம.தி.மு.க. – மார்க்ஸிஸ்டு கூட்டணிக்கு மட்டும்தான் இருக்கிறது. ஆகவே ரஜினியிடம் ஆதரவு கேட்போம்.

உங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் ஊழலே நடக்காது என்பதற்கு உத்தரவாதம் உண்டா?

வை.கோ.: எங்கள் கட்சி சார்பில் போட்டியிடத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தேர்தலுக்கு முன்னால் தங்கள் சொத்துக் கணக்கை அறிவித்து விட வேண்டும் என்று விதித்திருக்கிறோம். இது ஒன்று போதாதா, நாங்கள் ஊழலற்ற ஆட்சி தர விரும்புவதை உறுதிப்படுத்த?

இந்தக் கேள்வி கொஞ்சம் கற்பனையான கேள்விதான். தேர்தலுக்குப் பின்னர் ம.தி.மு.க. ஆதரவு கொடுத்தால் தான் கலைஞரோ அல்லது ஜெயலலிதாவோ ஆட்சியில் அமர முடியும் என்ற நிலை! அப்போது உங்கள் ஆதரவு?

வை.கோ.: இருவருக்கும் இல்லை. நிச்சயமாக இந்த ஊழல் கட்சிகளுக்கு நாங்கள் ஆதரவு தர மாட்டோம். அதே போல மக்களின் கணிசமான ஆதரவு எங்களுக்கு கிடைத்து, தி.மு.க., அல்லது அ.தி.மு.க. தயவில்தான் ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலை இருந்தாலும் அவர்களிடம் வலியச் சென்று ஆதரவு கேட்க மாட்டோம்.

சந்திப்பு : **ப்ரியன்**

நெல்லை பெனிபிட் பண்ட் லிமிடெட்

26, ரங்கநாதன் தெரு, முதல் மாடி, தி.நகர், சென்னை-17.
4345178


பரிசு! பரிசு! பரிசு!
14 கிராம் தங்க செயின்

1. பிக்சட் டெபாசிட் — 21% + 3% போனஸ்
2. பென்ஷனர் டெபாசிட் — 22% + 3% போனஸ்
3. கல்வி உதவி டெபாசிட் — 24% + 3% போனஸ்

4. கரேகா டெபாசிட் :

செலுத்தும் தொகை ஒரு தரம் மட்டும்	காலம்	முதிர்வு தொகை
ரூ. 1000	23 வருடம்	ரூ. 1,00,000

5. பிறந்த நாள் டெபாசிட் :



செலுத்தும் தொகை ஒரு முறை மட்டும்	வருடம் தோறும் பிறந்த நாள் அன்று	திருமணத்தின் போது கிடைக்கும் தொகை
ரூ. 4250	ரூ. 1000	ரூ. 5000

6. வாரிசுதாரர் டெபாசிட் :

ஒருமுறை செலுத்தும் டெபாசிட்	காலம்	மாதாமாதம் பெறும் தொகை
ரூ. 10,000	180 மாதம்	ரூ. 7,500
	300 மாதம்	ரூ. 15,000

வீடு நிலம் தங்க நகைபேரில் கடன் வழங்கப்படும்

ESTD : 1955 — ஸ்ரீ — Ph : 24823

30 To 33 நாட்கள் கொண்ட இமாலய பத்ரிநாத், கேதார்நாத், நேபாள், பசுபதிநாத் 41-வது வருட காசியாத்திரை ஸ்பெஷல்

6.5.96, 7.5.96, 15.7.96 ஆகிய தேதிகளில், சென்னையிலிருந்து ஆரம்பமாகிறது. நித்திரை வசதி கொண்ட 3 Tier Sleeper கோச்சுகள் புறப்படுகின்றன.

யாத்திரை மார்க்கம் சென்னை, சோலாப்பூர் பண்டரீபுரம், பம்பாய், ஆக்ரா, மதுரா, அலகாபாத், அயோத்யா, ஸ்ரீகாசி, நேபாள், காத்மாண்ட், கயா, கல்கத்தா, பூரி, ஜெகந்நாதம், விஜயவாடா வழியாகச் சென்னை வந்து சேருகிறது.

2-ம் வகுப்பு ரயில் டிக்கெட் முழு பர்த் வசதி, காலை டிபன், மாலை 2 வேளை போஜனம், ரயில் கோச்சிலேயே தங்கும் வசதி கட்டணம் உள்பட நபருக்கு ரூ. 7775/- பத்ரிநாத், கேதார்நாத் நேபாள் யாத்திரைக்கு பஸ் சார்ஜ் ரூ. 2750, தனி நபருக்கு ரூ. 2000 வீதம் அட்வான்ஸ் தொகையை செலுத்தி ரிசர்வ் செய்து கொள்ள வேண்டும்.

இந்த யாத்திரையில் ராஜபாளையம் திரு. S.S. அழகர் ராஜா, A. ஜெயலட்சுமி தம்பதியரும் திரு. M.M. ராமசாமிராஜா. R. திலகம் தம்பதியர், திரு. M.M. குருசாமிராஜா, G.விஜயலட்சுமி தம்பதியரும் கும்பகோணம் திரு A. பழனியாண்டி, P. விசாலம், ஸ்ரீதேவி குடும்பத்தாரும், மதுராந்தகம் திரு. N.R. விஸ்வநாதம், குத்தாலம் திரு. T.V. முத்துவெங்கடகிருஷ்ணரெட்டியார், திருச்சி திரு. K. கோவிந்தன், G. சீதாலட்சுமி தம்பதியரும் கீழ்ப்பழுவூர் திரு. கோவிந்தசாமி, திரு. அருணாசலம் மற்றும் கோவை திருமதி. S.வசந்தா அம்மாள் பார்ட்டியாரும் சேர்ந்துள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

12 நாட்கள் கொண்ட பத்ரிநாத்-கேதார்நாத்

ஸ்பெஷல் யாத்திரை 11.5.96-ல் ஆரம்பமாகிறது. நபருக்கு கட்டணம் ரூ. 2875/- இதற்கு முன் காசி யாத்திரைக்குப் போய் வந்து பத்ரி-கேதார்நாத் போகாதவர்களுக்காக ஏற்பாடு செய்துள்ளோம்.

முழு விவரங்கள் வேண்டின் ரூ. 2 ஸ்டாம்புடன் எழுதுவது நலம், அல்லது நேரில் வருவது உத்தமம்.

ஸ்ரீநாமகிரி டிராவெல் சர்வீஸ்,
34-A/2 அக்ரஹாரம், மேலசிந்தாமணி, திருச்சி - 2.
N. SRIDHAR, N.K. SEKAR, K.E. நம்பிள்ளை



மெய்சிலிர்த்த அனுபவம்



• குருவாயூர் : கோவிலும் தெய்வமும்

நண்பர்களுடன் குருவாயூர் போயிருந்தேன். பயணக் களைப்பு மிகுதியாக இருந்ததால், அன்றிரவு மற்றவர்களுடன் சுவாமி தரிசனத்துக்குப் போகாமல் அறையிலேயே தூங்கிப்போனேன். தூக்கத்தில் கனவு: ஏதோ ஒரு ஊரில் கோயில் தரிசனத்துக்காகப் போகையில் அழகான கோபுரம் தெரிகிறது. தலைக்கு மேல் கரம் குவித்து வணங்குகிறேன்; ஆனால் அந்தக் கோயிலுக்குப் போக வழி தெரியவில்லை. அப்போது அசரீரி போல் ஒரு வாக்கியம் காதில் தொடர்ந்து ஒலித்தது: "உனக்கு ஒரு சிறுவன் வருவான்; வழிகாட்டுவான்; பயப்படாதே!"- அத்துடன் கனவு கலைந்தது.

மறுநாள் குருவாயூரப்பனை தரிசனம் செய்தபோது, கனவில் ஒலித்த அசரீரி போன்ற வாக்கியமே மனத்தில் சுழன்றடித்தது. ஊர் திரும்பியபோது மனைவியின் முகத்தில் ஒரே பூரிப்பு. "இன்று காலை லீலாக்காவுடன் டாக்டரைப் பார்க்கப் போனேன். நான் கர்ப்பம் அடைந்திருப்பதை டாக்டர் உறுதிப்படுத்தியிருக்கிறார்" என்றாள். முதன் முதலாகத் தந்தையாகப் போகும் இனிய செய்தி கேட்ட அந்த நேரத்திலும் சரி, அந்த முதல் குழந்தை ஆண் பிள்ளையாகப் பிறந்த சமயத்திலும் சரி- அந்த அசரீரி வாக்கு நினைவுக்கு வர, சிலிர்த்துப் போனேன்.

"வருவான்; வழி காட்டுவான்!"

– சுந்தர் சுந்தரி, கோவை.

மகாபலிபுரம் சுற்றுலாவின் போது ஒரு ஜெர்மானியரைக் கண்டேன். மகிஷாசுரமர்த்தனி சிற்பத்தின் முன் சப்பணம் இட்டு உட்கார்ந்து கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

மெள்ள அவரிடம் பேச்சுக் கொடுத்தேன். அவருக்கு நமது புராண இதிகாசங்கள் பற்றி பல விஷயங்கள் தெரிந்திருந்தது. எனது வியப்பைக் கண்டவர், "இதோடு நான்காவது முறையாக இந்தியா வந்துள்ளேன்" என்று விளக்கினார்.

"அப்படி என்ன இங்கே இருக்கிறது?" என்றேன்.

"அதுவா! ஒரு லவ் சமாசாரம்..."

ஆகா! மனிதர் ஏதோ காதல் வலையில் சிக்கியுள்ளார் என்று மேலும் காதைத் தீட்டிக் கொண்டேன்.

சற்று இடைவெளி கொடுத்து அவர் பேசியபோது எனக்கும் உடன் வந்த நண்பர்களுக்கும் சட்டென்று சிலிர்ப்பு ஏற்பட்டது.

"ஆமாம்! இது மதர் இந்தியாவின் பேரில் எனக்கு ஏற்பட்ட காதல்..." என்றார்.

– எம். ஆர். ஜெகந்நாதன், காஞ்சிபுரம்.

ஐயப்பன் ஊர்வலத்தில் வந்த யானை திடீரென்று தறிகெட்டு ஓட ஆரம்பித்தது. ஒரு விளக்குக் கம்பத்தை முட்டித் தள்ளி, ஒரு கைவண்டியை உடைத்து, முன்னேறியது. மனிதர்களெல்லாம் வழிவிட்டு ஓடி விலகிக் கொண்டனர். யானைப் பாகன் மட்டும் செய்வதறியாது தவிக்க, எங்கள் தெருவுக்குள் நுழைந்தது யானை. அது நடந்த திசையில் குறுக்கே படுத்திருந்தது, குட்டிகளைச் சமீபத்தில் போட்டிருந்த ஒரு நாய். யானையின் கோபத்தில் குட்டிகளுக்கு என்ன கதியாகுமோ என்று நாங்கள் நடுங்கினோம். ஆனால் அவற்றை நெருங்கியதும், மதம் பிடித்த அந்த யானை நின்றுவிட்டது. சில நொடிகள் அவற்றைப் பார்த்தபடி நின்றது. பிறகு மெள்ள, தன் பெரிய உடலைக் கஷ்டப்பட்டு வளைத்துத் திருப்பிக் கொண்டு, குட்டிகளுக்குத் துளியும் இடையூறு ஏற்படாத வண்ணம் முன்னேறிச் சென்றது.

சில வருடங்களுக்கு முன் நடந்த இச் சம்பவம், கூடியிருந்த ஐயப்ப பக்தர்கள் அனைவரையுமே வியக்கவும் சிலிர்க்கவும் வைத்தது.

– சந்திரா ராஜகோபால், கோவை – 25.

இளமை + இனிமை = சாரங்க்!

"அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. பீட், ரிபீட், சியாங் சாங் என்று பெயரிட்டனர்."

"பீட் சரி, ரிபீட் சரி, அதென்ன சியாங் சாங்?"

"முட்டாளே, உலகில் பிறக்கும் ஒவ்வொரு மூன்றாவது குழந்தையும் சீனக் குழந்தை என்று புள்ளிவிவரங்கள் கூறுவதை மறந்து விட்டாயா?"

- வீதி நாடகம் ஒன்றில் கேட்ட ஜோக். வெடிச் சிரிப்புக்கள் அந்தப் பகுதியை நிறைத்தன.

வீதி நாடகம் என்பது சீரியஸான விஷயமில்லையோ என்று முகம் ஆச்சரியப்பட வேண்டாம்.

கல்லூரி மாணவர்களே, மாணவர்களுக்காக நடத்திய கலை நிகழ்ச்சி என்பதால் இளமைக்கும் இனிமைக்கும் நகைச்சுவைக்கும் குறைவில்லை.

வழக்கமாக 'மார்டி க்ரா' (Mardi Gras) என்ற பெயரில் ஒவ்வொரு ஜனவரியிலும் சென்னை ஐ.ஐ.டி.யில் நடைபெறும் கலை விழாதான். இம்முறை "சாரங்க்" என்று புதிதாகப் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

ரோம் நாட்டு விருந்து தினம் ஒன்றின் பெயர் 'மார்டிக்ரா'. 'மார்டி க்ரா' என்று சொன்னால் நேற்றுதான் கல்லூரியில் சேர்ந்து ராகிங்கில் மாட்டிக் கொண்டு ஓவென்று அழும் ஜூனியர் பப்பாவுக்குக் கூடத் தெரியும் என்ற நிலையில் அந்தப் பெயரை மாற்றுவானேன்?

"நம் பண்பாட்டுக்குத் தகுந்த வகையில் சில மாற்றங்களை இம்முறை புகுத்தியிருக்கிறோம். அதற்கேற்றவாறு 'சாரங்க்' என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது" என்கிறார் ஐ.ஐ.டி. இயக்குனர். (சாரங்க் என்றால் மான் என்று அர்த்தம்)

கலைப் பிரிவுச் செயலாளரான ஸ்ரீனிவாஸ், "முன்பு இடம் பெற்றிருந்த ஃபேஷன் ஷோவை நிறுத்தி விட்டோம். கொஞ்ச காலமாக இந்த நிகழ்ச்சியின் போது சிலர் தரக்குறைவாக நடந்து கொள்கிறார்கள். சில வருடங்களாக இல்லாமலிருந்த ஸோலோ இசைக் கருவிகள் போட்டி மீண்டும் புகுத்தப் பட்டிருக்கின்றன. கொரி யோக்ராஃபி பிரிவில் இந்திய, மேற்கத்தியப் பிரிவுகளுக்குத் தனித் தனிப் பரிசுகள் இம்முறை உண்டு. வீதி நாடகங்கள் அறி முகமாகின்றன" என்றார்.

• கவின்...











"நெஞ்சைத் தூள் தூளாக்கி விட்டுப் போகிறாயே!" என்று திருவனந்தபுரக் கல்லூரி



• வீதி நாடகங்கள் •

மாணவர் ஒருவர் கதறிக் கொண்டிருந்தார்.


"காதல் கொண்டாலே பயமென்ன?" என்று தடாலடியாக ஒரு மாணவி குரலெழுப்பினார்.

"தீக்குச்சி எரியும்போது அதைத் தென்றல் அணைக்கலாம். தென்றலே தீயை வளர்த்தால், அதை எப்படி அணைக்க?" என்று தத்து வார்த்தையாக வருத்தப்பட்டார் சூரத் மாணவர்.

இப்படித் தொடங்கும் பாடல்கள் மட்டு(மல்)லை, வேறு பல அந்தக் கால இந்திப் பாடல்களையும் அனாயாசமாக எடுத்து விட்டு நெகி(ழ)(வை)த்தனார்கள். 'நாஸ்டால் ஜியா' (பழைய நினைவுகள்) என்ற இந்தப் பிரிவுக்கு ஏராள போட்டியாளர்கள்.

பாட்டுப் போட்டிகளில் உற்சாகம் கரை புரண்டது!

(சோளி கே பீச்சே புகழ்) இலா அருண் பாடிய பாடல் ஒன்றுக்கு 'காக்ரா' நடனம் ஆடி பெங்களூர் மாணவிகள் அப்ளாஸையும், முதல் பரிசையும் அள்ளிக் கொண்டனர். 'வெஸ்டர்ன் மியூஸிக்' பிரிவில் முதலிடம் பெற்ற ஜித்துவக் கல்லூரி மாணவர் குழு, ஐ.ஐ.டி.யின் அடிமடியிலேயே கை வைக்கத் துணிந்தனர்!



அறிவு ஜீவி மாணவர்கள் வெளிநாட்டுக்குச் செல்லும் போக்கைக் கிண்டலடித்தது அவர்கள் பாடல்!

விழாவில் கவர்ந்த ஒரு அறிவிப்பு: ப்ளாஸ்டிக் கோப்பை ஒன்றை வைத்து "இதில் உங்களுக்கு விருப்பமான குளிர் பானத்தைப் பெறலாம்" என்று குறிப்பிட்டிருந்தார்கள். பக்கத்திலேயே உருத்தெரியாமல் சிதைந்த அதே மாதிரி கோப்பை. அதன் அருகில் "ப்ளாஸ்டிக் கோப்பையை நீங்கள் வீதியில் எறிந்தால், மான்கள் உங்களை இப்படி ஆக்கி விடும்" என்கிற எச்சரிக்கை. வேறொன்றுமில்லை. தவறிப் போய் ப்ளாஸ்டிக்கை மான்கள் சாப்பிட்டு விட்டால் அவை இறந்து போகவும் வாய்ப்பு உண்டு. மான்கள்? ஆமாம் ஐயா! வளாகத்தில் எக்கச்சக்கமாக மான்கள் உண்டு!


இந்த விழாவின் பெயர் மாற்றம் மற்றும் ஃபேஷன் ஷோ நீக்கத்தைத் தொடர்ந்து விழாவின் முக்கிய ஸ்பான்ஸர்களான பெப்ஸி ஐ.ஐ.டி.. தங்கள் தாராளமான நிதி உதவியைக் குறைத்துக் கொண்டு விட்டதாக செய்திகள் வந்தனவே என்று கலைப் பிரிவு செயலாளர் ஸ்ரீனிவாஸைக் கேட்டோம்.


"பெப்ஸிக்காரர்கள் தங்கள் பட்ஜெட்டைத் தாங்களாகவே இந்த முறை சுருக்கிக் கொண்டிருக்கிறார்கள். பெயர் மாற்றத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. இரண்டு தனித் தனிச் செய்திகளை நாளிதழ்கள் இணைத்து விட்டிருக்கின்றன" என்று விளக்கினார் (சமாளித்தார்?) ஸ்ரீனிவாஸ்.

- ஜி.எஸ்.எஸ்

படங்கள் : **கிருஷ்ணமூர்த்தி**







அப்பச்சி இறப்பதற்கு நாலு வருசத்திற்கு முன்னால் இந்தத் தென்னை மரத்தை தென்னம் பிள்ளையாகக் கொண்டு வந்திருந்தார்.

அப்பச்சி இறந்து போய் பதினைந்து வருடங்கள் ஆகிவிட்டன. தென்னை மரம் இப்போது வீட்டு உயரத்தைத் தாண்டி வளர்ந்து விட்டது.

"ஏம்பா... சிவராமா... மரம் நல்லா காப்பு புடிச்சிருக்குது... உரம் கிரம் போடறியா?"

"இல்லீங்க மாமா... மண்ணு நல்ல மண்ணு... அப்பச்சி மண்ணைப் பார்த்துட்டு அப்பவே சொன்னாரு... இந்த மண்ணுக்கு தென்னை மரம் வெச்சா அம்சமா வளரும்னு..."

"என்னெய்க்கு ஆட்டனும்னா என்னெய் அருமையா வரும் கண்ணு...." என்றார் சித்தப்பா.

"நாக்கெல்லாம் கருகருன்னு இழுக்குது. நல்ல ருசி மாப்ளே..." என்றார் காயத்ரியின் அண்ணன்.



தென்னை மரத்து வீடு

காலனிக்குள் தென்னை மரத்து வீடு என்று பெயர் வாங்கியாகி விட்டது. சிலுசிலுவென பச்சை ஓலைகள் பரப்பி நிழலாக நின்றிருந்தது. வீட்டிற்கு அழகாக இருந்தது. காலனியில் வீடுகள் அதிகமாகி விட்டன. தென்னை மரத்து வீட்டைப் பார்த்து விட்டுப் பல வீடு களில் தென்னம் பிள்ளை வளர்க்க ஆரம்பித்து விட்டிருந்தார்கள். சில வீடுகளில் தென்னை மரமாகி குருத்து முளைக்க ஆரம்பித்துவிட்டன.

சிவராமன் கோயமுத்தூரில் புரோகிராம ராக வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு பொள்ளாச்சியில் வேலை கிடைத்து விட்ட பின்னால் - கல்யாண ஏற்பாடு நடந்தது.

காயத்ரியை முதலில் போட்டோவில்தான் பார்த்தான்.

இவனுடைய கலர் போட்டோக்கள் இரண்டை அவர்கள் வீட்டில் யாரோ வாங்கிக் கொண்டு போனார்கள். காயத்ரியை நேரில் பார்க்க ஆசைப்பட்டான். வெள்ளிக் கிழமை தவறாமல் மாசாணியம்மன் கோவி லுக்கு வருகிறவள் என்கிற தகவல் கிடைத்ததும், ஒரு வெள்ளிக்கிழமை தயாரானான்.

அவளைப் பார்த்தான்.

பெரியம்மா, அத்தை, அண்ணி, அக்கா மகள், அண்ணன் மகன் என்று கொஞ்சம் உறவுப் படையோடு வந்திருந்தாள்.

குழந்தை முகம். கண்கள் பட்டாம் பூச்சி யைப் போலத் துறுதுறுத்தன. அவனைப் பிடுங் கினாள். கூட்டத்தில் பய பக்தியுடன் நின்று கொண்டிருந்தவள் எதற்கோ எதிர்ப்பக்கம் நோக்க, அவனைக் கண்டாள். அடையாளம் கண்டு கொண்டு விட்ட அவள் கண்கள் மிரள, சாமி பக்கம் திரும்பிக் கொண்டாள்.

சாமி கும்பிட்டு முடித்து விட்டு வெளியே வந்த போது பழத்தட்டோடு அவள் இவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனாள்.

காயத்ரி வந்த பின்னால் இந்த வீடு நிறைய மாற்றம் பெற்றது. பின் பக்கம் விதவித மான பூச்செடிகள். காய்கறிச் செடிகள். புத்தக அலமாரி அழகானது. எப்போதும் கொலுசுச் சத்தம். கண்ணாடி வளையல் ஓசை. சிரிக்கிற முகம். சின்ன விஷயத்திற்கும் கூட ஆச்சரியத் தில் விரியும் கண்கள். பக்கத்து வீட்டுப் பூனை களுக்குப் பால் வைத்துக் கொஞ்சுவது. தொடர் கதை படித்தால் அடுத்த வாரம் என்ன நடக் கும் என்று கவலை கொள்வது. ஒருமுறை வெள்ளை கனகாம்பரச் செடியை கழுதை தின்று விட்டுப் போக - ஒரு நாள் முழுக்க விசனத்தில் கலங்கி புலம்பிக் கொண்டிருந்தாள்.

அந்த காயத்ரிதான் மரத்தை வெட்டச் சொன்னாள்.

"இங்க பாருங்க. சின்னத் தேங்காய் விழுந்து கண்ணாடி ஓடு உடைஞ்சு போயிடுச்சு."

தென்னை மரம், குறி பார்த்துக் குரும்பைத் தேங்காயை கண்ணாடி ஓட்டின் மேல் வீசி யிருப்பதைப் போல் இருந்தது. கண்ணாடிச் சில்லுகள் சிதறிக் கிடந்தன. சுத்தப்படுத்தினார் கள்.

இரண்டு நாட்களுக்குப் பின்னால் - பழுத்த தென்னம் மட்டை 'தொபீர்' என்று விழுந்தது.

கனகராஜன்



கோடியில் ஒருவர்!

முதல்வர் ஜெயலலிதா கடந்த மூன்று ஆண்டுகளாக வருமான வரி கணக்கு சமர்ப்பிக்கவில்லை. அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் அவர் வருமானம் பின் வருமாறு:

1990 - 91 : ரூ. 1.89 கோடி
1991 - 92 : ரூ. 2.60 கோடி
1992 - 93 : ரூ. 5.82 கோடி

ஒரு ரூபாய் சம்பளக்காரரான முதல்வர், தமக்கு ஹைதராபாத் திராட்சை தோட்டமும் அன்பர்களின் அன்பளிப்புகளும் இவ்வளவு வருவாயை அளித்துள்ளதாக விளக்கம் தந்துள்ளார்.

இந்த வருவாய்க் கணக்கையும் விளக்கத்தையும் வருமானவரி அதிகாரிகள் முழுமையாக ஏற்றுக் கொள்ளாமல், பெறப்பட்ட பரிசுகள் குறித்து விளக்கம் கேட்டிருக்கிறார்கள்.

அரசு விதிமுறைகளின்படி முதல்வர் பெறுகின்ற பரிசுகளை அவரது சொந்த சொத்தாகக் கருத முடியாது; அவை அரசாங்கத்துக்கே உரியவை.

நன்றி : இந்தியன் எக்ஸ்பிரஸ்

நடு இரவில் தூங்கிக் கொண்டிருந்த காயத்ரி 'அய்யோ....' என்கிற கத்தலோடு அவனை இறுக்கிக் கொண்டாள். பயத்தால் அவள் உடல் நடுங்குவதை உணர முடிந்தது.

"காயத்ரி... ஒண்ணுமில்லே... மட்டை விழுந் திருக்கு...."

அவன் சொன்னது அவள் காதில் விழாத தைப் போல பயத்தில் முனகினாள்.

சின்னக் கரப்பான் பூச்சியைக் கண்டால் கூட கூச்சல் போடுகிற ரகம். இரவில் திடீ ரென்று பவர்கட் ஆனால் 'என்னங்க.... என்னங்க..' என்று இவனைத் தேட ஆரம்பித்து விடுவாள். 'சீக்கிரம் டார்ச் லைட்டை எடுங்க..' என்று நச்சரிப்பாள். அவசரத்தில் கிடைக்கிற டார்ச்சினாலோ தீப்பெட்டியினாலோ வெளிச்சமாக்கினால் எங்காவது சுவரோடு படம் மாதிரி ஒட்டிக் கொண்டு இருப்பாள். வெளிச்சத்தைக் கண்ட பின்னால் அவளுக்கு உயிர் வரும்.

பயங்களுடன் பழகி வளர்க்கப்பட்ட பெண் ணாக இருந்தாள் காயத்ரி. பாம்பு என்று விளை யாட்டுக்குச் சொன்னால் கூட, புன்னகை முகம் மாறி, கண்களில் பயம் பரவ நிலை குலைந்து நிற்பாள். இரவில் காற்றில் ஆடுகிற துணியைக் கண்டால் பயம். கயிற்றைக் கண்டால் பயம். செகண்ட் ஷோவிற்குப் போய் விட்டு வருகிற போது இவன் கையை இறுக்கிக் கொண்டு நெருக்கி ஒட்டிக் கொண்டு வருவாள்.

மரம் உயர உயர காயத்ரியின் பயம் வளர்ந்தது. முன்பை விட இப்போதெல்லாம் மரம் காற்றில் சலசல என்று சத்தமிடுகிறது. மழைக் காலத்தில் 'உய்... உய்...' என்று பேய் காற்றிற்கு கத்துகிறது. அவள் அடிக்கடி தூக்கம் இழந்து பயத்தில் தவித்தாள்.

"ஏங்க... காத்து வேகமா வீசுதே. மரம் வுழுந் துடாதா?"

"மரம் விழாது காயத்ரி...."

அவன் அவளை இறுக்கிக் கொண்டு தூங்க விடாமல் ஏதாவது கேட்டுக் கொண்டே இருப் பாள்.

ஓடுகள் அடிக்கடி உடைவது - மாற்றுவது வழக்கமாயிற்று.

காயத்ரி மரத்தை வெட்டச் சொல்லி வற்புறுத்துவது அதிகமாயிற்று.

அவனுக்கு இந்த மரத்தை வெட்டி விட மனசில்லை. பாசமாய் இருந்த அப்பச்சியின் நினைவுச் சின்னமாய் அது நின்றது. 'தென்னை மரத்து வீடு' என்கிற சிறப்புப் பெயரை இழக் கவும் மனசில்லை. அண்ணன் குடியிருந்த போதும் சரி... வாடகைக்கு மளிகைக் கடைக் காரர் குடியிருந்த போதும் சரி... இப்போது இவன் குடியிருக்கிற போதும் சரி.... காலனியில் நிறைய வீட்டில் தென்னை மர நிழல் வந்து விட்ட போதிலும் - இந்த வீடுதான் தென்னை மரத்து வீடாக இருக்கிறது.

சிவராமனை சிலர் 'தென்னை மரத்து வீட்டுக்காரரே...' என்கிறார்கள். காயத்ரியைக் கூட 'தென்னை மரத்து வீட்டுப் பொண்ணு....' என்கிறார்கள்.

நேற்று இரவு காயத்ரி அழுது ஆர்ப் பாட்டம் செய்து விட்டாள்.

"பயம்மா இருக்குதுங்க. சலசலன்னு ஓலைச் சத்தம் காதுக்குள்ள ஊசி மாதிரி குத்துதுங்க. ராத்திரி தூங்க முடியாம, தவிப்பா இருக்குது. இந்த மரத்தை வெட்டிருங்க."


அன்றைக்கு நல்ல மழை வேறு.

"ரொம்ப இம்சையா இருக்குது... பக்கத்துல லைன் கம்பம் வேற இருக்குது. மரம் வளர்ந்து பெரிசானா பழுத்த மட்டை லைன் கம்பத் துக்கு நேரா வந்து விழும்... இதை வெட் டிருங்க...."

"காயத்ரி... எங்க அப்பச்சி வெச்ச மரம்...."

"ஓடு எத்தனை தடவை ஒடைஞ்சிருக்கு... செவத்து ஓரமா மரம் இருக்கறதால எத்தனை பிரச்னை..... மரம் வளைஞ்சு நிக்கறதால பெட் ரூமுக்கும் சமையல் ரூமுக்கும் பொதுவில

KALKI SHOPPING PAGE



"ஹவாலா மோசடியில் கோடி கோடியா பணம் கை மாறியிருக்கிறதைப் பத்தி என்ன நினைக்கிறீங்க?"

"வாழிய பாரத 'MONEY' திரு நாடு!"

- ஞா. ஞானமுத்து

சாஞ்சு இருக்குது. போதாததுக்கு லைன் கம்பம் வேற... தொப் தொப்புன்னு ஏதாச்சும் விழுகிற போது மனசு படபடங்குது...."

மரம் வளர்ந்தால் வெயில் காலத்திற்கு 'குளு குளு' என்று இருக்கும் என்கிற நினைப் பில் அப்பச்சி சுவர் ஓரமாக நட்டு வைத்து விட்டார்.

இப்போது காயத்ரி இப்படி பயந்து சாகிறாள்.

"**கா**யத்ரி.. கம்பெனியில இன்னிக்கு இன்ஸ்பெக்ஷன். லீவு போட முடியாது. மாரி முத்து அண்ணன் கிட்ட சொல்லி இருக்கிறேன். ஆளுகளோட வருவாரு... மரத்தை வெட்டு வாங்க. பார்த்துக்கோ."

காலையில் கம்பெனிக்குப் புறப்படும் போது சொன்னதும் காயத்ரியின் முகம் மலர்ந்தது.

"எத்தனை மணிக்கு வருவாங்க?"

"பத்து பத்தரைக்கு வந்திருவாங்க."

கண்களில் மகிழ்ச்சியின் அடையாளம்.

அன்றைக்கு அவனுக்கு வேலை ஓடவில்லை. கம்ப்யூட்டர் ஸ்கிரீனில் கர்சர் பாயிண்டைப் போல மனசு துடித்தது. புரோகிராமில் நிறையத் தவறுகள் வந்தன. இன்ஸ்பெக்ஷன் என்பதால் வேலைப் பளு அதிகமாகி விட்டது. அடிக்கடி பிரிண்ட்டர் ரிப்பேர் ஆகி மக்கர் செய்தது.

அவன் நினைப்பெல்லாம் தென்னை மரத் தையே சுற்றிச் சுற்றி வந்தது.

எட்டாம் வகுப்பில் ஓவிய மாஸ்டர் சொந்தப்படம் வரையச் சொன்ன போது முதன் முதலாக அவன் வரைந்த சிறந்த படம் தென்னை மரம். வரைவதற்கு சுலபமாக இருந் தது. அதுவே அவன் ஓவிய ஆர்வத்திற்கு வித்தானது. தென்னையைப் பற்றி ஒரு பெரிய கவிதை கூட எழுதியிருக்கிறான். காலேஜில் கிராபிக்ஸ் புரோகிராமில் ஒரு தென்னந் தோப் பையே உருவாக்கி இருக்கிறான்.

"தென்னை மரத்து வீடு..."

இந்தப் பெருமையை அந்த வீடு இழக்கப் போகிறது.

சாயங்காலம் அவன் திரும்பிய போது, வீடு வெறிச்சென்று இருந்தது. அந்நியமான ஒரு சூழ்நிலை. வேறு வீட்டிற்குள் நுழைவதைப் போல் இருந்தது. சுவர் ஓரமாக பச்சை ஓலை கள் அடுக்கப்பட்டிருந்தன. திண்ணையில் தேங் காய்க் குலையும் இளநீர் குலையும் இருந்தன.

காயத்ரி மகிழ்ச்சியில் இருந்தாள்.

"மரத்தை வெட்டியாச்சு..." என்றாள்.

மரம் இருந்த இடத்திற்குப் போனான். அடி மரம் இருந்தது. ஈரப் பசையோடு பச்சை சிராய் கள் சிதறிக் கிடந்தன. உயரம் போகிற உற்சாகத் தோடு வளர்ந்த மரம். விசனம் பொங்கியது.

அன்று இரவு காயத்ரி நிம்மதியாகத் தூங்கி னாள். இவனுக்குத் தூக்கமே இல்லை. அவதி யாக இருந்தது.

ஒரு வாரத்தில் நிறையப் பேர்கள் கேட் டார்கள்.

"என்னங்க... மரத்தை வெட்டிட்டாங் களா?"

"ஏன் சார் மரத்தை வெட்டினீங்க?"

"நல்லா காய் காய்ச்ச மரம். வெட்டிப் போட்டீங்களே தம்பி...."

அன்று காலையில் வீட்டுத் தோட்டத்தில் புதிய மாஞ்செடியைக் கண்டான். இளந்தளி ரோடு புதிய குழந்தை போல்...

இது எப்படி இங்கே வந்தது....?

"காயத்ரி... காயத்ரி..." என்றான்.

"என்னங்க?" என்று ஓடி வந்தாள்.

"ஏது இந்தச் செடி?"

அவள் செடியைப் பார்த்தாள். அவனைப் பார்த்தாள். சின்னப் புன்னகை முகத்தோடு மலரச் சொன்னாள்.

"நேத்து ஒரு ஆள் வித்துட்டுப் போனாரு..."

"ம்...."

"தள்ளு வண்டியில இது மட்டும் தனியா இருந்துச்சு. எல்லாரும் பூச் செடியா வாங்கி னாங்க. தென்னை மரத்தை வெட்டின பின்னால வீடு வெறிச்சுன்னு இருந்துச்சு. மரம் இல்லாம வீட்டைப் பார்க்க எப்படியோ இருக் குது. ஒரு மரமாவது இருந்தால்தான் வீடு நல்லா இருக்கும். தென்னை மரத்தை இந்த இடத்தில் நட்டு வெச்சிருந்தா லைன் கம்பிக்கு முட் டாமல் நல்லா வளர்ந்திருக்கும்... எனக்கு அந்த மரத்தை வெட்டினதிலிருந்து மனசே சரியில் லீங்க. அதுதான் ஏதாச்சும் மரம் இருக்கட் டும்னு இதை வாங்கினேன்...."

சட்டத்தை வளைத்தால் தப்பில்லை!

'You cannot break the law; But you can bend it to render justice.'
— லார்ட் டென்னிங் (Denning) என்ற பிரசித்தி பெற்ற அமெரிக்க நீதிபதி வலியுறுத்திச் சொல்லும் வாசகம் இது.

நீதி – நியாயத்தை நிலைநாட்டுவதற்கு, சட்டம் ஒரு கருவியாகப் பயன்பட வேண்டுமே தவிர, அதுவே ஒரு தடையாகி விடக்கூடாது. அப்படி நீதி வழங்க, சட்டம் தடையாக இருக்கும் போலிருந்தால் லேசாக அதை புத்திசாலித்தனத்தோடு நியாயத்துக்கேற்ப வளைக்கலாம். அது தவறில்லை என்பதுதான் அந்த நீதிபதியின் கருத்து.

நம் நாட்டு சட்ட அமைப்புக்கு, இந்த 'வளைத்தல்' கொள்கை ரொம்ப அவசியம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, கண்மூடித்தனமான, நடைமுறைக்கு ஒவ்வாத சில சட்டங்களை வைத்துக் கொண்டு அவதிப்பட வேண்டிய சூழ்நிலை இங்கே நிலவுகிறது என்பது வேதனையான உண்மை.

நினைத்துப் பார்க்கிறேன்...

1949.

எனது ஆரம்ப பயிற்சிக் காலத்தில், கிழக்கு கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த பிதாபுரம் ஸ்டேஷனில் சர்க்கிள் இன்ஸ்பெக்டராகப் பணிபுரிந்து கொண்டே பயிற்சியில் இருந்த போது ஒரு சம்பவம்.

என் கட்டுப்பாட்டு எல்லைக்குள் இருந்த 'துனி' என்ற சிற்றூர் காவல் நிலையத்தில் ஒரு கொலை வழக்கு பதிவாகி இருந்தது. ஒரு பெண் காரணமாக இரண்டு பேர்களுக்கிடையே எழுந்த பகையில் ஒருவர் கொல்லப்பட்டிருந்த வழக்கு.

விசாரிக்கப் போயிருந்தேன், சில கான்ஸ்டபிள்களுடன்.

கொலை நடந்ததற்குச் சில மணி நேரங்கள் முன்பு வரை ஊரில் இருந்த அந்த 'சந்தேகத்துக்குரிய இரண்டாமவர்', சம்பவத்துக்குப் பின் காணவில்லை என்று தகவல் வந்தது.

உடனே ஆட்களை அனுப்பி, தீவிரமாகத் தேடியதில், சிக்கிக் கொண்டான். ஆனால், தனக்கும் அந்தக் கொலைக்கும் எந்தச் சம்பந்தமும்

சி. வி. நரசிம்மன்

இல்லை என்றும் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் சமயத்தில் தன் மாமா வீட்டில் இருந்ததாகவும் சொன்னான்.

நான் ஒருகணம் யோசித்தேன்.

"அப்படியா? சரி, நான் விசாரிக்கிறேன்" என்று சொல்லி விட்டு, அவனது மாமா வீட்டுக்கு ஒரு கான்ஸ்டபிளை அனுப்பினேன்.

திரும்பி வந்து கான்ஸ்டபிள் சொன்ன தகவல் அவனுக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்திருக்கும்.

"அதெல்லாம் அவன் இங்கே வரவே இல்லையே?" என்று சொல்லி விட்டாராம் அந்த மாமா.

அவன் தலைகுனிந்து நின்றான். 'சரி, இனி விசாரணையைத் தொடர வேண்டியதுதான்' என்று, நான் அவனைக் கூட்டிக் கொண்டு ஸ்டேஷனுக்குப் புறப்பட்டேன்.

மாமா கைவிரித்து விட்ட பின்னும் அவன் சும்மா விடவில்லை.

தனக்குச் சரியாக ஞாபகமில்லை; வேறு சில இடங்களில் இருந்திருக்கக்கூடும் என்று ஏறிய பஸ் ஸ்டாண்டு, சாப்பிட்ட ஓட்டல், தங்கிய இடம், உடன் இருந்த நண்பர்கள் என்று புதிதாகப் பல விவரங்களைச் சொன்னான்.

அப்போதும் நான் பொறுமையைக் கை விடவில்லை.


"சரி. நீ சொன்ன இடங்களுக்கெல்லாம் நான் ஆள் அனுப்பி, சரிதானா என்று விசாரிக்கப் போகிறேன். அதுவரை நீ இங்கே ஸ்டேஷனிலேயே இருக்க வேண்டும். வேண்டுமானால் உன் வீட்டிலிருந்து சாப்பாடு வருவதில் எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை" என்று சொல்லி விட்டு, அவன் குறிப்பிட்ட இடங்களுக்கு, கான்ஸ்டபிள்களை அனுப்பினேன்.

போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லாத கிராமப்புறம் அது. ஆகவே எல்லா இடங்களுக்கும் சைக்கிளிலேயே போய் வர வேண்டிய கட்டா யம்.

கான்ஸ்டபிள்களை அனுப்பி விட்டு, அவனை நான் போலீஸ் ஸ்டேஷன் வராந்தாவிலேயே உட்கார வைத்து, காவலுக்கு ஒரு ஆள் போட்டு விட்டு, மற்ற சில வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தேன்.

போன கான்ஸ்டபிள்கள், இரண்டாம் நாள் மாலை திரும்பி வந்து, அவன் சொன்ன விவரங்கள் அத்தனையும் பொய் என்று தகவல் சொல்லும் வரை நான் அவனை தொந்தரவு செய்யவே இல்லை.

"இதோ பாரப்பா, நீ பொய் சொல்கிறாய். நீ உண்மை சொல்கிற வரை உன்னை நான் விடப் போவதில்லை. நீ என்னென்ன கதை சொன்னாலும் நான் நம்பப் போவதில்லை.



காலதாமதம் ஆவது உனக்குத்தான் கஷ்டம். எனக்கு ஒன்றுமில்லை" என்று அப்போதும் சாதாரணமாகவே நான் சொல்லவும் அவன் ஒரு மாதிரி ஆகிவிட்டான்.

காரணம் - ஒரு கடும் சொல்லோ வன்முறையோ அவன் மேல் பிரயோகிக்கப்படவில்லை. மிக கண்ணியமாக நடத்திக் கொண்டிருந்தேன்!

அதற்கு மேலும் பொறுக்காமல் அவன் அழுதபடி ஒப்புக் கொண்டு விட்டான்.

முன் பகையின் விளைவாக, தான்தான் அந்த ஆளைக் கொலை செய்ததாகவும் கொன்றபின் கத்தியை ஒரு வைக்கோல் போரின் அடியில் ஒளித்து வைத்து விட்டதாகவும் இப்போது கூட வந்தால் எடுத்துக்காட்டுகிறேன் என்றும் சொன்னான்.

"சரி, வா போகலாம்" என்று கிளம்பினேன்.

இரவு நேரம். கான்ஸ்டபிள்கள், கிராம அதிகாரி உடன் வர, குறிப்பிட்ட இடத்தில் வைக்கோல் போரிலிருந்து கத்தியை எடுத்துக் கொடுத்தான்!

ரத்தக் கறை படிந்த கத்தி!

உடனே அந்தக் கத்தியையும், சில சந்தர்ப்ப சாட்சியங்களையும் (circumstancial evidence) வைத்து அவனைக் கைது செய்தேன், முறைப்படி.

இது நடந்த சில நாட்களில் எனது டிரெய்னிங் முடிந்து பக்கத்து மாவட்டத்தில் நரசப்பட்டணம் என்ற இடத்தில் ரெகுலர் ஏ.எஸ்.பி.யாக போஸ்டிங் கிடைத்து அங்கே போய் விட்டேன். மூன்று நான்கு மாதங்கள் கழித்து, இந்த கேஸ் ராஜமுந்திரி செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது.

வழக்கை ஆரம்பத்தில் விசாரித்தவன் என்ற முறையில் எனக்கும் கோர்ட் சம்மன் அனுப்ப, சாட்சி சொல்லப் போனேன்.

நரசபட்டணத்திலேயே எனக்கு எக்கச்சக்கப் பணிகள் இருந்ததால் ஒருநாள் முன்னதாக ராஜமுந்திரிக்குச் சென்று கேஸ் டைரியைப் படித்து, பப்ளிக் பிராஸிக்யூட்டருடன் கலந்து பேச முடியாமல் போய் விட்டது. கேஸ் ஹியரிங் நாளன்றுதான் ராஜமுந்திரிக்குப் போக முடிந்தது. நேராக கோர்ட்டுக்கே சென்று விட்டேன்.

நான் கோர்ட்டுக்குள் நுழைந்த சமயம் அந்

"என் மாப்பிள்ளை கோவிச்சுக்கிட்டு வீட்டு வாசற்படி மிதிக்க மாட்டேன்னு சொல் லிட்டார்!"

"அப்புறம் என்ன செய்தீங்க...?"

"ஒரு ஜன்னலை எடுத்திட்டேன். அந்த வழியா குதிச்சு வர்றார்!"

– தேனி எஸ். மாரியப்பன்

தக் குற்றவாளி என்னை அடையாளம் கண்டு கொண்டு, சட்டென்று கைகூப்பி வணங்கினான்.

சுற்றி இருந்தவர்களுக்கு ஆச்சர்யம். ஒரு குற்றவாளி, தன்னைக் கைது செய்த போலீஸ் ஆபீசரை வணங்குகிற காட்சியை அதுவரை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள்.

நான் அவனை நடத்தியவிதம் அப்படி!

நேரடி விசாரணை முடிந்து, அவன் வக் கீல் குறுக்கு விசாரணைக்காக என்னிடம் வந் தார்.

"குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் இந்த நபரை நீங்கள்... தேதி கைது செய்தது உண்மைதானே?"

"ஆமாம்."

"ஆனால் கைதுக்கு முன்னால் 2 நாட்கள் அவரை ஸ்டேஷனில் வைத்திருந்தீர்களா?"

"ஆமாம்!"

அவர் முகம் ஏன் பிரகாசமாகிறது என்று எனக்குத் தெரியவில்லை.

"எதற்காக இரண்டு நாள் அப்படி ஸ்டே ஷனில் வைத்திருந்தீர்கள்?"

"அவன் சொன்ன இடங்களை விசாரிக்க எனக்கு அந்த நேரம் தேவைப்பட்டது. அவனி டமே சொல்லி விட்டுத்தான் செய்தேன். இரண்டு நாட்கள் ஸ்டேஷன் வராண்டாவில் தான் இருந்தான்."

"சட்டப்படி ஒரு நபரைக் கைது செய்தால் 24 மணி நேரங்களுக்குள் கோர்ட்டில் நிறுத்த வேண்டும். ஆனால் நீங்கள் கைதே செய்யாமல் இரண்டு நாள் அவரை ஸ்டேஷனில் வைத் திருந்திருக்கிறீர்கள். இது சட்ட விரோதம்!"

வழக்கு இடைவேளையில் பப்ளிக் பிராஸிகியூட்டர் கிட்டத்தட்ட என்னைக் கொன்றே விடுபவர் போல ரௌத்திரமாக இருந்தார்.

ஆனால் நான் உண்மையைச் சொன்னேன்; நடந்ததைச் சொன்னேன்.

ஒருவனை, குற்றவாளி என்று நிரூபிக்க அடிப்படை ஆதாரங்கள் கூட சேகரிக்காத நிலையில் கைது செய்ய நான் விரும்பவில்லை. சட்டப்படி 24 மணி நேரங்களுக்குள் அவன் சொன்ன விவரங்களைச் சரிபார்த்து அவனை மீண்டும் மீண்டும் விசாரித்து ஆதாரங்கள் திரட்டுவது என்பது சாத்தியமில்லாமல் இருந் தது.

என்னளவில் நான் செய்தது சரி என்றே பட்டது.

ஆனால் அரசு வழக்கறிஞரோ, "என்ன இப்படிப் பேசி விட்டீர்கள்? கைது செய்து தான் விசாரித்தேன்; 24 மணி நேரத்துக்குள் கோர்ட்டில் நிறுத்தி விட்டேன்" என்று சொல்லி விட வேண்டியதுதானே!" என்று அங்கலாய்த் தார்.

எனக்குப் புரியவில்லை. நியாயத்துக்கும் சட்டத்துக்கும் கொஞ்சம் இடைவெளி இருப் பது மட்டும் புரிந்தது.

அந்த வழக்கில், அவன் "போதுமான சாட் சியங்கள் இல்லாத" காரணம் காட்டி விடுவிக் கப்பட்டான்.

நீதிபதி அதோடு நிறுத்தியிருக்கலாம்.

"அனுபவமில்லாத புதிய போலீஸ் ஆபீசர் சட்டத்தைச் சரியாக அறிந்து கொள்ள வில்லை" என்கிற ரீதியில் ஆரம்பித்து நான் அவனை இரண்டு நாள் ஸ்டேஷனில் வைத் திருந்ததைக் கடுமையாக விமர்சித்திருந்தார். நான் வழக்கில் சரியாகச் செயல்படவில்லை என்றும் சட்டத்துக்குப் புறம்பாக நடத்தப் பட்ட இந்த விசாரணையை நம்புவது சிரமம் என்றும் சொல்லி நிராகரித்திருந்தார்!

இது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

கைது செய்யாமல் ஒருவனை ஸ்டேஷனில் இருக்கச் சொன்னது சட்டப்படி தவறுதான்.

ஆனால் அவனை விட்டு விட்டால் அவன் கூறிய விவரங்களை நான் சரிபார்க்க முயன்ற போது அவன் சாட்சிகளை முன்கூட்டியே 'தயார்' செய்திருக்கக்கூடும். உண்மை எனக்குத் தெரியாமல் குழம்பியிருப்பேன்.

இருபத்தி நான்கு மணி நேரத்தில் அவனை கோர்ட்டில் நிறுத்தாதது சட்டப்படி தவறு தான்.

ஆனால் இருபத்து நாலு மணி நேரத்தில் அரைகுறையாக விசாரிப்பது எப்படிப் போதும்?

உண்மையாக, நடந்ததைச் சொன்ன என்னை நம்பாத அந்த நீதிபதி, பப்ளிக் பிராஸி கியூட்டர் எதிர்பார்த்தபடி நான் சற்று மாறுத லாகச் சொல்லியிருந்தால் ஒருவேளை நம்பி யிருப்பாரோ என்று கூட எனக்குத் தோன்றி யது.

நல்லவேளை, நான் பயந்தது போல் என் மேலதிகாரி இதைப் பெரிய விஷயமாகக் கரு தாமல், "நரசிம்மன், தீர்ப்பை விடுங்கள்! நீங்கள் செய்தவிதம் சரிதான்!" என்று சொல்லி விடவே நான் நிம்மதி அடைந்தேன்.

எதற்குச் சொல்கிறேன் என்றால், விரைப் பாக ஒரு சட்டத்தை வைத்துக் கொண்டு நியாயத்தை விட்டுவிட்டு, சட்டத்தையே பிரதானமாகக் கருதி விடுவது ஆபத்து.

நியாயம் சொல்வதில் இடையூறு வருகிற பட்சத்தில் சட்டம் வளைக்கப்படுவதில் தவறு இல்லை.

லார்ட் டென்னிங் குறிப்பிட்டது இதைத் தான்!

(அடுத்த வாரம்)

நரசிம்மராவ் அரிய பிரதமர் தானே...?

● வடவள்ளி ராமசுப்ரமணியன், கோவை-41.

? நெடுஞ்செழியன் மட்டும் இதுவரை செய்யாத ஒரு காரியத்திற்காக அவரை நான் பாராட்டுகிறேன். அது என்னவென்று கண்டு பிடியுங்களேன் பார்ப்போம்.

! அவ்வப்போது காலில் விழாவிட்டால் என்ன? காலடியில்தானே ஒரேயடியாக விழுந்து கிடக்கிறார்!

● ஸ்வஸ்திக் மருதாசலம், விஜயமங்கலம்.

? மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பதில் சொல்லுங்கள்– பி.வி. நரசிம்மராவ் நம் நாட்



• மகிழ்ச்சி...



• ....துக்கம்

டுக்குக் கிடைத்த அரிய பிரதமர்தானே?

! குறை நிறைகள் இல்லாத மனிதரே கிடையாது. நிறைகள் குறைகளைவிட பலமடங்காக உயர்ந்தால் அரிய மனிதர் ஆகிறார். ராவ் ஒரு கெட்டிக்கார் பிரதமர்; அரிய பிரதமர் அல்ல என்பதே என் கணிப்பு. அவருக்கு ஓர் அரிய நிதியமைச்சர் அமைந்தது அவர் அதிர்ஷ்டம்.

● வி.பி. மகராசி, பாஸ்டியன் நகர்.

? வெள்ளிக்கிழமைதோறும் பெண்கள் அலுவலகத்துக்கு ஒரு மணி நேரம் தாமதமாக வரலாம் என்ற தமிழக அரசின் அறிவிப்பு பற்றி...?

! 1. அவர்கள் வீட்டு வேலைக்காரப் பெண்களும் அப்படியே ஒரு மணி நேரம் தாமதமாக வர அனுமதி உண்டா? 2. ஏன், ஆண்கள் பூஜை செய்ய மாட்டார்களா; கோயிலுக்குப் போக மாட்டார்களா? 3. அபத்தம்! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று முனைந்து நிற்க வேண்டிய நாடு சலுகை, ஊழல், இலவசம் என்று சீரழிந்து கொண்டிருக்கிறது.

● டி.ஆர். பாலசந்தர், திருநெல்வேலி-6.

? தூர்தர்ஷன் நிகழ்ச்சிகளை 61 சதவிகிதம் பார்வையாளர்கள் விரும்பிப் பார்க்கிறார்களாமே?

! கேபிள் கனெக்ஷனுக்குக் காசு இல்லாதவர்கள் அதைத்தானே பார்த்தாக வேண்டும்; வேறு வழி!

● எஸ். ராமசுப்பிரமணியன், தூத்துக்குடி.

? தேர்தலில் ஊழலை ஒரு பிரச்னையாகக் கருதக் கூடாது என்கிறாரே தேவகௌடா?

! அதானே! ஊழல் எப்படி ஒரு பிரச்னை ஆகும்? அதுதான் அரசியல்வாதிகளின் உரிமையாகிவிட்டதே!

● வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சாவூர்-7.

? ஏழுகட்சி கூட்டணியிலிருந்து பா.ம.க. கழன்று கொண்டதற்குக் காரணம் கலைஞரா? ராமதாஸா?

! வாழப்பாடி!

● ஜே. பண்டரிநாதன், கும்பகோணம்.

? இன்றைய இந்தியாவைக் காப்பாற்ற சிறிது காலம் ஆட்சியை ராணுவம் ஏற்றுக் கொண்டால் என்ன?



• அதிர்ஷ்டக் காரர்!

! சரியாப் போச்சு! முதுகில் அரிப்பு என்று கொள்ளிக்கட்டையால் சொறிந்து கொள்வதா?

● கானா கணேசன், பொறையாறு.

? 'ஹவாலா மோசடி பற்றியோ தியாகேஸ்வரன் வீட்டில் நடந்த 'ரெய்டு' பற்றியோ எனக்குத் தெரியாது. நான் இரண்டு நாட்களாகப் பேப்பர் படிக்கவில்லை' என்று எஸ்.டி.எஸ். சொல்லுகிறாரே சரிதானா...?

! விட்டுத் தள்ளுங்கள்! குடைந்து குடைந்து கேள்வி கேட்டால் கோபத்தில் ஏசிவிட்டு பிறகு மன்னிப்புக் கேட்கிறேன் என்று ஒரு குரல் அழு

வார்!

- புளியரை கணேசன், சென்னை-30.

? திருச்சி தி.மு.க. மாநாடு குறித்து?

! காவிரியில் வெள்ளம் காணாத திருச்சி வாசிகளுக்கு மக்கள் வெள்ளத்தைக் காட்டியிருக்கிறார்கள்!



• செய்யாத காரியம்!...



• 'தப்பு தப்பு...!'



• '.அப்பாவி' அமைச்சர்!



• ஊழல் உரிமைகள்!

- ஜி. மாஜினி, சென்னை-52.

? படித்து பட்டம் பெற்று, வேலை கிடைக்காத விரக்தியில் கொள்ளை அடிக்கிறவர்களுக்கும் படித்து பட்டம் பெற்று, வேலை கிடைத்து அதிகாரி ஆனவுடன் (ஐ.ஏ.எஸ்.) கொள்ளை அடிப்போருக்கும் என்ன பெரிய வித்தியாசம் இருக்கு?

! முன்னது அனுதாபம் பெறக்கூடியது. பின்னது ஆத்திரத்தைத் தூண்டுவது- 'கட்டுத் தன்னினால் என்ன!' என்னுமளவுக்கு...

- ஆர். சங்கரநாராயணன், குணசீலம்.☐

? காதில் பூ சுற்றும் போட்டி வைத்தால் ஜெயிக்கக் கூடியவர்கள் சினிமாக்காரர்களா? அரசியல்வாதிகளா?

! தியேட்டருக்குப் போய் டிக்கெட் வாங்கினால் தான் சினிமா; டீ.வியில் பார்க்க வேண்டாம் என்று தோன்றினாலோ அணைத்துவிடலாம். ஆனால் அரசியல்வாதியை யாராலும் தவிர்த்து விட முடியாது. நாம் அவரை நெருங்கா விட்டாலும் நமது வாழ்வை நிர்ணயிப்பவர் அவரே அல்லவா! ஆக, பூ சுற்றும் போட்டியில் ஜெயிப்பது அரசியல் வாதிதான்!

- கி. இரமேசு பாபு, சேலம்.

? எங்கள் வீட்டில் 14 வோட்டு உள்ளது. சொந்தமாக ஒரு டீ.வி. இல்லை. எந்த கட்சி டீ.வி. வாங்கித் தரும்....?

! இப்படியொரு கேள்வியைக் கேட்டுவிட்டு 'தேர்தல் அன்பளிப்புகளுக்கு வரையறை வகுக்கப்படுமா?' என்றும் கேட்டிருக்கிறீர்களே...! நாடு உருப்படுமா!

- எம். முத்து, உடுமலை.

? 'ஆஹா இதுவன்றோ பாரதம்' என்று சம்பந்திய மகிழ்ச்சி! 'இதுவா பாரதம்!' என்ற துக்கமான நிகழ்ச்சி?

! மகிழ்ச்சி: ஜனதா தள தலைவர் பொம்மை பேரில் ஊழல் குற்றச்சாட்டு இருப்பதால் அவர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி விலகச் செய்தது. துக்கம்: அவரிடத்துக்குப் புதிய தலைவரை ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்காமல் லல்லுபிரசாத் யாதவை நியமித்தது.

- ஆர். திலகவதி, சென்னை - 38.

? இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் அசாருதீன் புகைப்படக்காரரைத் தாக்கியதாகச் செய்தி வந்துள்ளதே?

! 'தப்புதான்' என்று தலைவர் ஒப்புக் கொண்டு மன்னிப்பு கேட்டு விட்டாரே... செத்த பாம்மை அடிக்காமல் விட்டுவிடுவோம்.

- க. கிருஷ்ணமூர்த்தி, பெரிய கிருஷ்ணாபுரம்.

? ரஜினி என்ற புயல் சற்று ஓய்ந்து விட்டதை கவனித்தீர்களா?

! காங்கிரஸ் தனது தேர்தல் கூட்டு திட்டத்தைத் தெளிவாக்கும் வரை தாம் எதுவும் செய்ய முடியாது என்று ரஜினி கூறியிருப்பது நியாயமானதே. புயல் அடங்கியிருப்பதில் ஆச்சரியமில்லை.

- கே.ஏ. காளிமுத்து, ராணிப்பேட்டை.

? 'ஹவாலா ஊழல் குற்றச்சாட்டு அரசியல் நோக்கம் கொண்டது. தேர்தலை முன்னிட்டு நடத்தப்படும் நாடகம்' என்று வழக்கறிஞர் நானி பால்கிவாலா கூறியிருக்கிறாரே?

! பால்கிவாலாவிடம் மதிப்பு உண்டு என்றாலும் இந்த விஷயத்தில் மாறுபட வேண்டியிருக்கிறது. 'ஹவாலா தொடர்பான விசாரணைகள் உச்ச நீதி மன்றத்தின் உத்தரவின் பேரில் நடக்கின்றன. 'எந்தத் தரப்பைச் சேர்ந்தவரும் எத்தகைய உயர் மட்டத்தவரும், விதிவிலக்கின்றி விசாரிக்கப்பட வேண்டும்' என்ற உச்சநீதி மன்றத்தின் சம்பத்திய ஆணை, இது அரசியலுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கை என்பதை மேலும் வலியுறுத்துகிறது.

☐ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஆர். சங்கரநாராயணன்
சன்னதி தெரு,
குணசீலம்
திருச்சி – 621 204.

ரமணிசந்திரன்

முகத்திற்கு நேரே மூடப்பட்டு விட்ட கதவின் முன் பிச்சைக்காரி போல நிற்க அருவருப்புற்று அகன்ற உதயரேகாவுக்குக் கையில் பத்திரிகையோடு இருந்த அந்தப் பெண்ணின் தோற்றம் மனத்தில் திரும்பத் திரும்பத் தோன்றி உறுத்தியது.

இந்த மாதிரி இரவைக் கழிக்க வருகிறவள் இப்படியா பத்திரிகை படித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள்?

கிருஷ்ணசந்திரன் வேறு அவள் கதவைத் தட்டுவதற்காகவே காத்திருந்தவன் போல, அதுவும் கதவின் அருகிலேயே காத்துக் கொண்டு நின்றிருந்தவன் போல அடுத்த தட்டு தட்டுமுன் கதவைத் திறந்தான்!

விட்டுப் பிரிய மாட்டாமல் வீடு வரை அழைத்து வந்து விட்டு, அந்த இருவரின் நடவடிக்கையுமே அவளுக்கு இயல்புக்கு முரணாகத்தான் தோன்றியது.

ஆனால் கிருஷ்ணசந்திரனிடம் முதலிலிருந்தே அவள் கேட்டது, கண்டதெல்லாம் முரண்பாடுகள்தாமே!

படித்து முடித்து, தொழிலில் ஈடுபட்ட சில காலம் வரை மாடல் மகனாக வாழ்ந்தவன் திடுமெனக் குடியும் கூத்தியுமாக ஆனது ஒரு முரண்பாடு.

முதல் சந்திப்பில் அவனது பேச்சு மாறிய விதமும் முரண்பாடுதான்.

நல்லபடியாக இயல்பான வாழ்வு வாழ மாட்டேன் என்றதும் இயற்கைக்கு மாறானதுதான்.

அவளுக்காக அக்கறையுடன் பார்த்துப்

மாலை மயங்குகின்ற நேரம்...18

பார்த்துச் செய்து உருகுகிறவன், அவளை மனைவியாக ஏற்க மறுப்பதோடு, மணவிலக்கு அளிக்க முன் வருவது கொஞ்சம் கூட ஒத்துக் கொள்ள முடியாத முரண்பாடுதான்.

அவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அந்தப் பெண் அறைக்குள் சஞ்சிகை படித்துக் கொண்டு இருப்பது ரொம்பவும் சாதாரணமானதுதான். ஆனாலும்...

சட்டென அவளது அறைக்குள் சென்று ஜன்னல் வழியே, அடுத்த அறையிலிருந்து வந்து தோட்டத்தில் விழுந்த வெளிச்சத்தையும், நிழல்களையும் ஊன்றிக் கவனித்தாள்.

மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டு அந்தப் பெண் அப்போதும் அந்தப் பத்திரிகையில்தான் கவனமாக இருந்தாள்.

அப்படித்தான் தோட்டத்தில் விழுந்த நிழல் உரைத்தது.

கிருஷ்ணசந்திரன் இருக்கும் இடமே தெரியவில்லை.

படுத்து விட்டான் போலும்! ஆனால் இவள்? 'விழுந்து விழுந்து அப்படி என்ன தேர்வுக்குப் படிக்கிறாள்?'

அவளைப் பற்றி வெகு தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்தாள்.

எங்கேயோ பார்த்த முகம் என்றதற்கு மேலாக அவளை அடையாளம் காண உதயரேகாவால் முடியவில்லை.

கையிலேயே பத்திரிகை கொணர்ந்தாளே! அவளது கைப்பையிலிருந்து கூட சில வார, மாத சஞ்சிகைகள்தான் தலைநீட்டின. பையில் அடங்காத பெரியதைக் கையில்...

அது பிலிமாலயா!

வெளியே ஓடிச்



சென்று, டீபாயின் கீழ்த்தட்டில் அடுக்கி வைத்திருந்த பத்திரிகைகளில் இருந்து பிலிமாலயாவை மட்டும் எடுத்துப் புரட்டினாள்.

அந்தப் பெண்ணைப் பற்றிய கட்டுரை ஒன்று, அவளது சில புகைப்படங்களுடன் பத்திரிகையில் பிரசுரமாகி இருந்தது.

ஆக, இதைத்தான் இப்படிக் கிடந்து படிக்கிறாளா?!

அவள் முகம் பழக்கப்பட்டதாகத் தோன்றிய காரணமும் புரிந்தது.

ஆனால் அவளது படத்தின் கீழ் 'வளரத் துடிக்கும் புதுமுகம்' என்ற வர்ணனையுடன் 'நடிகை நளினா' என்ற பெயரைப் பார்த்ததும் உதயாவின் மனம் மீண்டும் வெகுவாகச் சோர்ந்து போயிற்று.

இவன் வீட்டுப் 'பார்ட்டி'க்கு போக நேரமாகி விட்டது என்றுதானே கிருஷ்ணசந்திரன் முதலில் அன்னையைக் கடிந்து கொண்டு 'யோகா' வகுப்பில் விட்டுச் சென்றான்! இவளோடுதான் அவன் பெயர் சேர்த்துப் பேசப்பட்டதும்...

இனி எண்ணுவதற்கு என்ன இருக்கிறது





- 'பரணி' மனோ

என்று சலித்த மனதைப் பிடிவாதமாகத் தளர விடாமல் இழுத்துப் பிடித்து நிமிர்த்தினாள்.

மீண்டும் ஒருதரம் தோட்டத்து நிழலைப் பார்த்துத் தென்புற்றாள்.

படித்து முடித்து விட்டாள் போல, இப்போது பத்திரிகையைத் தூக்கிப் பல கோணத்தில் பிடித்துத் தன் படங்களைப் பார்த்து இன்புறுவது போலத் தோன்றியது.

இன்னும் சிலதும் யோசித்து, இனிச் செய்ய வேண்டியதையும் முடிவு செய்து விட்டு உதயரேகா உறங்கிப் போனாள்.

மறுநாள் காலையில், அவள் எதிர்பார்த்திருந்தது போலவே அந்தப் பெண் நளினா போய் விட்டிருந்தாள்.

வழக்கமான பத்திரிகை படிக்கும் பாவனையுடன், கணவன் தன்னைக் கவனிப்பதைக் கண்டும் காணாதவள் போலத் தன் மொட்டை மாடிச் செடிகளுக்கு நீர் ஊற்றத் தொடங்கினாள் அவள்.

கிருஷ்ணசந்திரன் அலுவலுக்குக் கிளம்பிய பிறகு, பொழுதைப் பிடித்துத் தள்ளியபடி அமர்ந்திருந்தவள், மணி பத்தரை ஆனதும் டெலிஃபோனை எடுத்தாள்.

அவளுடைய தந்தைக்கு அடுத்த அதிகாரியான திரு. தாமஸ் தன் மூத்த அதிகாரியுடைய மகளை ஆர்வத்துடனேயே வரவேற்றார். என்ன ஏது என்று குசலம் விசாரித்து விட்டு, அவளது படம் பரிசு பெற்றது குறித்துப் பாராட்டினார்.

ஆனால், உதயரேகாவின் கோரிக்கையைக் கேட்டதும் முகம் மாற, "அங்கெல்லாம் நீ போவது சரியில்லையம்மா. அப்பாவுக்குப் பிடிக்காது" என்று மறுத்தார்.

"அதனால்தானே அவர் இங்கே இல்லாத நேரம் பார்த்து உங்களிடம் வந்திருக்கிறேன். தற்காலப் பெண்களைப் பற்றி நான் எழுதப் போகும் புத்தகத்திற்கு இந்த மாதிரிப் பெண்களையும் கூடப் பேட்டி காண வேண்டியிருக்கிறது. ப்ளீஸ், அங்கிள். நீங்கள்தான் எனக்கு இதை எப்படியாவது ஏற்பாடு செய்து தர வேண்டும்!" என்றாள் உதயரேகா கெஞ்சுதலாக.

சன்னமாய்ப் புன்னகைத்து, "அப்படியானால் இந்தப் பெண்ணைத்தான் என்று இல்லையல்லவா? யாருடனாவது பேட்டி ஏற்பாடு செய்கி..." என்று டெலிஃபோனை எடுக்கவும் உதயரேகா பதறிப் போனாள்.

"அ... அதில்லை, அங்கிள். இந்த... இந்தப் பெண் நளினா என்றால் ஏற்கெனவே தெரிந்தவள். வந்து... தெரிந்தவள் என்பதால் கொ... கொஞ்சம் இலகுவாக... ஒளிவுமறைவின்றிப் பேசுவாள் இல்லையா? அதனால்தான்... ப்ளீஸ், அங்கிள்... இவளையே... பா... பாருங்கள். அங்கிள்" என்று தடுமாறினாள் அவள்.

'அவளை உனக்கு எப்படித் தெரியும்' என்று கேட்க, தாமசிற்கு ஆசைதான் ... நாதன் கிருஷ்ணசந்திரனைப் பற்றி ...சாரித்தது இவருக்கும் தெரியும். வருமானவரி இலாகா என்பதால், கிருஷ்ணசந்திரனின் பொருளாதார நிலை உள்ளங்கை நெல்லிக்கனியாகி விட, குடும்பப் பெருமை, படிப்பு, தொழில் நடத்தும் விதம் எல்லா விவரங்களையும் சேகரித்துச் சீர் தூக்கிப் பார்த்து, "எல்லாமே சிறப்பாக இருக்கும்போது இந்த ஒரு தவறுக்காக ஒதுக்க முடியாது. அத்தோடு இதை உதி இலகுவாகச் சமாளித்து விடுவாள்" என்று நம்பிக்கையோடு பெண்ணைக் கொடுத்தார்.

இப்போது, மூன்று மாதம் கழிந்து மகள் விசாரிக்க வந்திருக்கிறாள் என்றால்...?

ஆனாலும், உதயரேகாவின் கெட்டிக்காரத்தனத்தில் தாமசுக்கு நம்பிக்கை உண்டு. எனவே, அந்த நளினாவைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பை உதயரேகாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்தார்.

அவர் வருமானவரி இலாகாவில் பணிபுரிந்தது இதற்கு மிகவும் வசதியாக இருந்தது. வருமான வரி இலாகா என்றாலே அது எந்தப் பூட்டுக்கும் திறவுகோல் அல்லவா? அந்தத் துணை நடிகைக்குத் தவறாமல் தன் படங்களில்

வாய்ப்பளித்துக் கொண்டிருந்த பட முதலாளி யையே பிடித்து, அவர் மூலமாய் உதயரேகா வின் விருப்பத்தை நிறைவேற்ற தாமஸ் ஆவன செய்தார்.

நளினாவைச் சந்திக்கக் கிளம்புமுன், உதய ரேகாவுக்குக் கடைசியாக ஒன்று பாக்கி இருந் தது. சற்று யோசித்துத் தாமசிடம், "அங்கிள், என் புத்தகம் வெளிவரும் வரை இதுபற்றி வேறு யாரிடமும் நீங்கள் மூச்சு கூட விடக் கூடாது! சரிதானா? முக்கியமாக அப்பாவிடம். அங்கெல்லாம் ஏன் போனாய் என்று ஏதாவது சொல்வார்கள். என்ன அங்கிள், ப்ளீஸ்?" என்று நயத்துடன் வேண்ட, மீண்டும் ஒரு புன்னகையு டன் அவர் சம்மதித்தார்.

நளினாவுடனான சந்திப்பு பற்றி உதய ரேகா ஏற்கெனவே யோசித்து வைத்திருந்தாள்.

அதன்படி, சிகையலங்காரத்தை மாற்றிக் கொண்டாள். அகலமான கறுப்பு பிரேமிட்ட வெற்றுக் கண்ணாடியும், வெற்றுக் காதுகளும் முகத் தோற்றத்தை வேறுபடுத்திக் காட்ட, அன்று அணிந்திருந்த சேலைக்கு மாறாகப் பளிச்சென்று கண்ணைப் பறிக்கும்விதமாய் ஒரு கரிதாரை மாட்டிக் கொண்டு சென்றாள்.

பட முதலாளியின் சிபாரிசு காரண மாகவோ என்னவோ, உதயரேகாவுக்கு நளினா வீட்டில் வரவேற்பு பிரமாதமாக இருந்தது.

பெயரையோ, புகைப்படத்தையோ வெளியி டப் போவது இல்லை என்று முதலிலேயே உதயரேகா கூறி விட்டதால், அம்மா, அப்பா, மாமா என்று யாருடைய குறுக்கீடும் இல்லாமல் அவளால் அவனோடு பேச முடிந்தது.

பொதுவான வாழ்க்கை முறை, தொழில் முறை, வருமானம் பற்றிக் கேட்ட பிறகு, உதய ரேகா தன் பிரச்னைக்கு வந்தாள்.

பிற ஆண்களோடு பழகுவது பற்றி உதய ரேகா குறிப்பிட்ட போது, சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, "என்னம்மா செய்வது? என்ன சம்பா தித்துக் கொண்டு வந்து கொடுத்தாலும் வேண் டியவர்களுக்குக் கூட ஆசை வெறி அடங்கு வதில்லை. கடைசியாக, இப்படியும்தான் சம் பாதிக்கும்படி ஆகிறது" என்றாள் அவள் கசப் புடன்.

நம்பாத குரலில், "அவ்வளவு தூரம் 'விதியே' என்று தொழில் செய்கிறவர்கள், அதற்கென்றே அலைகிறவர்களோடு நிறுத்திக் கொள்ளலாம் இல்லையா? நல்ல குடும்பத்துப் பிள்ளைகளை யேனும் விட்டு ஒதுங்கி விடலாம் இல்லையா?" என்று கேட்டாள் உதயரேகா.

"நான் குடும்பங்களைக் குலைப்பவள் அல்ல" என்ற பதிலில் வெகுண்டு, "மிஸ்டர் கிருஷ்ணசந்திரன்? அவரோடு, அவரது வீடு வரை செல்லவில்லை? கணவன் இன்னொரு பெண்ணோடு அறைக்குள் சென்று கதவைப் பூட்டிக் கொண்டால், கட்டினவளுக்கு ரொம் பவும் சந்தோஷமாக இருக்கும் என்றா எண்ணி னீர்கள்?" என்று குத்தலாக வினவினாள்.

"அது... அவர்... அது வேறே விஷயம் அம்மா. வெளியே சொல்லப்படாது என்று சத் தியம் வாங்கியிருக்கிறாரம்மா. அதனாலே அந்த ஆள் பேச்சு வேண்டாம்" என்று உரைத்து அந்தப் பேச்சை முடித்து விட முயன் றாள் நளினா.

ஆக, உதயரேகாவின் ஊகம்தான் சரியாக இருந்திருக்கிறது!

கிருஷ்ணசந்திரனின் குடி, கூத்தி, எல்லாமே நாடகம்தான்!

ஒருநாள் வீடு திரும்பியவள், அவன் இருக்கு மிடம் தெரியாமல் ஆத்திரப்பட்டானே, அது மட்டுமே உண்மையான கோபம். முதல் நாள் யோகா வகுப்பில் காந்திமதியிடம் தொடங்கி, முன்தினம் இரவு வரையில் புருவம் நெரித்துக் காட்டிய சினமெல்லாம் வெறும் வேஷம்!

குடித்தது போல அவனது தள்ளாட்டங்கள் கூட நடிப்பாகவே இருக்கக்கூடும்... 'இருக்கக் கூடும்' என்ன? அது நடிப்பேதான். அன்று அவன் முத்தமிட்ட போது 'மதுவாடை' இல் லையே என்று குழம்பினாளே; குடித்திருந்தால் அல்லவா வாடை வரும்?

ஒரு புதிர், பெருமளவு உதயரேகா எதிர் பார்த்தது போலவே விடுபட்டது.

ஆனால், இன்னொன்றோ, முன்னிலும் பெரிதாக வளர்ந்து, அடி முனை தெரியாமல் அவளைக் குழப்பியது.

இது, ஏன் இந்த நாடகம்?

ஒருவேளை, அவன் போதை மருந்துதான் உட்கொள்கிறானோ என்ற சந்தேகம் மீண்டும் அவளை உலுக்கியது.

எப்படியும், இதற்கு மேலும் கணவனை விட்டுப் பிடிப்பது, சிக்கல் தானாக அவிழும் என்று பொறுமையோடு காத்திருப்பது என் றெல்லாம் காலம் கடத்துவது அவளுக்குச் சற் றும் சரியென்று படவில்லை.

'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்பதிலும் அவளுக்கு உடன்பாடு கிடையாது. அப்படிப் பொறுமை காப்போர் ஆளக்கூடிய பூமி இறந்த பின் அவர்களுக்குக் கிடைக்கிற ஆறடி நிலம் தான் என்பது அவளது கருத்து.

அந்த மாதிரி நிலைமை தனக்கு வந்து விடக் கூடாது என்ற உறுதியோடு, மேலே என்ன செய்வது என்று தீவிரமாக யோசித் தாள்.

அப்படி யோசித்து, ஆழச் சிந்தித்து, துணிந்து அவள் எடுத்த நடவடிக்கைக்கு அவள் சற்றும் எதிர்பாராத, விசித்திரமான பயன் ஒன்று கிட்டியது.

(தொடரும்)

சுருக்கும் சேவையும் வந்தே விட்டது!

வெட்ட மேஜை

♦ "எங்களுடன் என்.டி.ஆர்"- திருடர்களின் நினைவலைகள் மாறுபட்ட, அதேசமயம் உள்ளம் தொட்ட இனிய அஞ்சலி.
கீழ்நத்தம், தி.சு.பாலசுப்பிரமணியன்.

♦ 'ஊழல் கூட்டணி' தலையங்கம் படித்தேன். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்று பயப்படுவதுண்டு. அது போல 'எந்தத் திட்டத்தில் எவ்வளவு ஊழல் இருக்குமோ?' என்று இந்தியத் திருநாட்டைச் சேர்ந்தவர்கள் இன்று பயந்து கொண்டிருக்கின்றார்கள். அரசியல்வாதிகள் யாரையுமே நம்பக் கூடாது என்பதற்குச் சமீபத்திய ஹவாலா மோசடி நல்லதொரு எடுத்துக் காட்டு. இந்த ஊழலின் உச்சக்கட்டம் எதில் கொண்டு போய் விடும் என்று தெரியவில்லை. இந்திய மக்கள் சிந்திக்க வேண்டிய தருணம் வந்தே விட்டது!
திருச்சுழி-29, சுந்தர்-அழகேசன்.

♦ திருமணமாகிவிட்டது; குழந்தையும் பெற்றாகி விட்டது; வயதும் ஏறிக் கொண்டே போகிறது என்பதைப் பற்றியெல்லாம் இம்மியளவும் கவலைப் படாமல் தன்னம்பிக்கையுடன் பயிற்சி எடுத்துக் கொண்டு எஸ்.ஏ.எஃப் போட்டியில் தங்கம் வென்ற(அம்மா) ஷைனியின் பேட்டி சிறப்பாக இருந்தது.
செம்பட்டி - 7, வி.எஸ். ராமு

♦ உலகப் படவிழாவில் 'ஜொள்ளர்'களின் கூட்டம் பலமாக ஏமாந்த கதையை 'கிச்சா' கலகலப்பாகவே சொல்லி விட்டார். பொதுவாகவே ஃபிலிம் ஃபெஸ்டிவலில், சென்சார் செய்யப்படாத திரைப்படங்கள் தான் காட்டப்படும் என்ற அபிப்ராயம் இருப்பது தான் மேற்கண்ட (THE ADULTS' GAMEபோட்டி) படங்களுக்குக் கூட்டம் கட்டுக்கடங்காமலிருப்பதற்குக் காரணம்!
சென்னை - 1, ஏழுமலை எஸ். பாலாஜி

♦ சுஜாதா பக்கம் படித்தேன். 'மெல்லிசை என்று சொல்கிறார்களே அவர்களை ஒரு சேர, நீக்க வேண்டும்; ரேடியோதானே என்ற அலட்சியம் அவர்களுக்கு' என்று குறிப்பிட்டுள்ளார். பல ஆண்டுகளாக ரேடியோவில் வழங்கப்படும் மெல்லிசைப் பாடல்களைக் கேட்பவன் நான். மெல்லிசையில் தரமான- கருத்து நிறைந்த பாடல்கள் வந்தன- வந்து கொண்டிருக்கின்றன. அருமையான இசையமைப்பும் உண்டு. மெல்லிசை நீக்கப்பட வேண்டியது என்ற கருத்தை ஏற்க முடியாது.
சென்னை - 91, வி.எஸ். ஸ்ரீதரன்.

♦ தொழில் துறையில் சாதனைகள் பல படைத்தும், இருக்கும் இடம் தெரியாமல் இருக்கிற சுரேஷ் கிருஷ்ணா தம்பதியினரை மேடையேற்றி வெளிச்சம் போட்டுக் காட்டிப் பெருமைப் படுத்தியது பாராட்டத் தக்கது.
ஈரோடு -9, சி. நாச்சிமுத்து.

♦ 'ஆளுக்கொரு விருது' என்ற தலைப்பிலான கட்டுரையில் திருமதி சுரேஷ் கிருஷ்ணா, சுந்தரம் ஃபாஸனர்ஸ் நிறுவன எம்.டி. என்று தவறுதலாகப் பிரசுரமாகி இருக்கிறது. திருமதி உஷாகிருஷ்ணா, உபாசனா ஃபைனான்ஸ், மற்றும் உபாசனா இஞ்சினீயரிங் நிறுவனங்களின் எம்.டி. இந்த நிறுவனங்களின் சேர்மன் திரு சுரேஷ் கிருஷ்ணா.
சென்னை-18, சாருகேசி.

♦ ஆனந்தின் 'உட்-பீ' பற்றிய அறிமுகம் அமர்க்களம். அவர் செஸ் ஆடாவிட்டால் என்ன? சர்வ தேசப் புகழ் பெற்ற ஆனந்தையே இனி அவர் தானே ஆட்டி வைக்கப்போகிறார்?
திருச்சி - 4, ஆர். பிரகாஷ்.

♦ தி.மு.க. மாநாடு குறித்த செய்தியில் தன்னலம் கருதாது வெறும் டீ குடித்து வேலை செய்த தொண்டர்கள் இப்போது மிஸ்ஸிங், எல்லாமே 'காண்ட்ராக்ட்'தான் என்ற வரிகளை தயவு செய்து வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள். இன்றும் இரவு, பகல் பாராது, வெயில், மழை கருதாது கட்சிப்பணிக்காகத் தம் உடல் உழைப்பை நல்கும் உண்மைத் தொண்டர்கள் நிறைந்திருக்கும் ஒரே கட்சி தி.மு.க.தான்.
நாகை - 1, சந்திரா.

♦ சோம. வள்ளியப்பன் எழுதிய 'என் சின்னப் பேரழகியே, ராட்சசியே..' சிறுகதை அருமையாக இருந்தது. வாசகர் கடிதம் மூலம் தன் காதல் சம்மதத்தைச் சொன்ன கதாநாயகியின் ஸ்டைல் பிடித்திருந்தது. ஆனால் இது எத்தனை பேருக்கு வாய்க்கும்!
மொரட்டுப்பாளையம்,
சு.தா.இராஜேஸ்வரன்

ரூ. 20/- பரிசு பெறும் கடிதம்

♦ அதிக பால் உற்பத்திக்காக அபராதம் விதிக்கப்பட்ட துனுக்குச் செய்தி படித்து, திடுக்கிட்டேன். அதிகப்படி உற்பத்தியான பாலை, எதியோப்பியா, சோமாலியா போன்ற அருகிலுள்ள மிக ஏழை நாடுகளுக்கு வழங்கியிருக்கலாமே! வளர்ந்த நாடுகள் இதுபோன்ற பிரச்னைகளில் நல்ல தீர்வை எடுக்க வேண்டும்.
அரக்கோணம், எல். கோபாலகிருஷ்ணன்.

ஸ்ரீ கந்தசுவாமி
பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990
பதிவு அலுவலகம்: 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. ph: 848917
கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 459569



பிக்சட் டிபாசிட்

46நாள்	3மாதம்	6மாதம்	ஆண்டு	2ஆண்டு	3ஆண்டு	4ஆண்டு	5ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21%
5 வருடங்கள்
ரூ.50,000/-
அதற்கு மேலும்

PB பாண்டு		
முதலீடு	காலம்	திரும்பப் பெறும் தொகை
ரூ. 25,000	60 மாதம்	ரூ. 70,000

சொத்துக்கள் மீது கடன்

- ❑ வீடு / ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்.
- ❑ மாத வட்டி ரூ.1.85 மட்டுமே
- ❑ விரைந்த சேவை.
- ❑ சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இருக்க வேண்டும்.



நகைக்கடன்

- ❑ குறைந்த வட்டிக்கு கிடைக்கும்
- ❑ 10 கிராமுக்கு ரூ.3000 வழங்கப்படும்.
- ❑ R.D. கட்டத் தேவையில்லை
- ❑ எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை



பாதுகாப்புப் பெட்டக வசதியும் உண்டு.

பென்ஷனர் நலத்திட்டம்

20% P.a ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.



சேர்மன்:
P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
கந்தகோட்டம்,
சென்னை-600 003.
நிர்வாக இயக்குனர்:
பார்க் டவுன் பெனிபிட்
பண்டு லிட்.

இயக்குநர்கள் குழு
R.விவேகானந்தன் B.Com.,
(Chairman : Park Town Benefit Fund Ltd.)
A.சுப்பிரமணியன்
V.சண்முகவடிவு B.A.,
V.விஜயகோபால் B.Com., D.C.P.
M.ராஜேந்திரன்
P.ஏகாம்பரம்

பங்குதாரர்களுக்கு மட்டும்

H.O. Friday Holiday | (It is a P.B. Group Concern) | B.O. Tuesday Holiday

எப்பவும் மனசுக்கு நிம்மதி தேவைன்னா சரியான வழி "உபாஸனா" -திருமதி ராமன்.

"எங்க XYZ பைனான்ஸிலே அதிக வட்டி மட்டுமில்லே, குலுக் கலிலே கார், நகை பரிசும் உண்டுன்னு" சொல்லி உலுக்கினாங்க! ஆரம்பம் 'ஜோர்' தான். இரண்டு மாதத்திற்கு பிறகு வட்டியே வரலை. போன் செஞ்சு கேட்டா தினம் ஒரு புது செகரட்டரி, தினம் ஒரு புது சாக்கு! ரெஜிஸ்டர் லெட்டர் போட்டால் திரும்பி வந்திடுச்சு! கவலை யாயிடுச்சு! பலன்? ஒரே எரிச்சல்! வேதனை! செய்யறகாரியமெல்லாம் குளறுபடி! சாம்பார் வைக்கிறதிலே நான் எப்பவும் எக்ஸ்பர்ட்னு சொல்ற என் கணவரே, "ஒரே உப்பு" ன்னு தவிச்சுட்டார். டெபாஸிட்டை எடுக்க போனா, எல்லோரும் எடுக்காதீங்கன்னு 'பிரஷர்' கொடுத்தாங்க! நான் ஒத்துக்கலை! என் அதிர்ஷ்டம்! பணம் திரும்பி வந்திடுச்சு!

இந்த தடவை 'டெபாஸிட்' செய்ய ரொம்ப யோசிச்சு கடைசிலே "உபாஸனா ஃபைனான்ஸ்" நிறுவனத்தை தேர்ந்தெடுத்தேன்!

'உபாஸனா'வின் சேர்மன் திரு சுரேஷ் கிருஷ்ணா, சுந்தரம் ஃபாஸ்னர்ஸ் மற்றும் பல டிவிஎஸ் நிறுவனங்களின் சேர்மனும் கூட! அதிக பாதுகாப்புக்கு ICRA MAA- கிரெடிட் மதிப்பீடு! சரியான நேரத் திற்கு வட்டி!

நம் தேவையை கவனத்தில் கொண்டு வளைஞ்சு கொடுக்கிற டெபாஸிட்டுகள்! 'நம்பிக்கை, சேவை, மதிப்பு' என்ற டிவிஎஸ் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் உபாஸனா. இப்போ மனசுலே நிம் மதி! குழப்பமேயில்லை. கணவருக்கும் சந்தோஷம்! சாம்பார் சாப் பிட தைரியமா நீங்க இப்போ எங்க வீட்டுக்கு வரலாம்!"

உங்கள் டெபாஸிட்டுகளுக்கு வளமான வட்டி விகிதத்துடன், உண்மையான உற்சாகத்தை தரும் ஆச்சரியங்களும் காத்திருக்கிறது. அருகாமை யிலுள்ள உபாஸனா அலுவலகத்தை உடனே அணுகுங் கள்! 'விசேஷ டெபாஸிட் சேகரிப்பு' திட்டத்தில் கலந்துகொண்டு பயன் பெறுங்கள்.

உபாஸனா
ஃபைனான்ஸ் லிமிடெட்

தொடரும் நம்பிக்கை என்றும் 'டிவிஎஸ்' பாரம்பரியம்.

இந்த விளம்பரம் 19.6.95 அன்று 'நியூஸ் டுடே'யில் பிரசுரமான விளம்பரத்தின் தொடர்ச்சியாகும். விளம்பரத்தின் முழு வாசகமும் டெபாஸிட்தாரர்களின் கவனத்திற்கென்று விண்ணப்பபடிவங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பதிவு அலுவலகம்: "கணேஷ் டவர்ஸ்", மூன்றாவது தளம், 96/1, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை-600 004. போன்: 4993494/4993121, ஃபேக்ஸ்: 4994881 • கோயமுத்தூர்: நம்பர் 9, ஒப்பிலி டவர்ஸ், 504 D.B. ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர்-641 002 போன்: 447127 • ஈரோடு: கடை எண்: 389/390, முதல் தளம், 15, EVN ரோடு, ஈரோடு-638 001, போன்: 79574. • மதுரை: 186, வடக்கு வெளி வீதி, மதுரை-625 001. போன்: 36070. • சேலம்: ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், A-1, பாரதி வீதி, ஸ்வர்ணபுரி, சேலம்-636 004. போன் 446711. • திருநெல்வேலி: பார்வதி சங்கர் & சன்ஸ் காம்ப்ளெக்ஸ், 177/A/10 திருவனந்தபுரம் நெடுஞ்சாலை, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி-627 003, போன்: 575320. • திருச்சி: 14-A/3, Dr.சுவாமிநாத சாஸ்திரி சாலை, தென்னூர், திருச்சி-620 017. போன்: 467436. • பெங்களூர்: 18/1, வாணிவிலாஸ் ரோடு, பசவன்குடி, பெங்களூர்-560004. போன்: 622949/620391. • ஹூப்ளி: நெ. 18டி, தயானந்தா காலனி, கேஷ்வபூர், ஹூப்ளி - 23. போன் : 68221. • கொச்சின்: அல்ஃபியா பில்டிங்ஸ், இரண்டாவது தளம், வில்லிங்டன் ஐலண்ட், கொச்சின்-682 018. போன்: 333991. • திருச்சூர் ரோமக்சந்திரா பஸ் சர்வீஸ், கோனிக்கரா (வழி) ஒல்லூர், திருச்சூர். போன் ; 872275. • ஹைதராபாத்: 1-10-63/1/3, வீர் சேம்பர்ஸ், பேகம்பேட், ஹைதராபாத்-500 016, போன்: 847237. • ராஜமுந்திரி: எண் 36-3-2, முதல் தளம், சியாமளாம்பா டெம்பிள் ஸ்ட்ரீட், இன்னீஸ்பேட் லக்ஷ்மி சென்டர், ராஜமுந்திரி-533 101. போன்: 75315. • விஜயவாடா: கஸ்தூரி பாப்பையா பில்டிங்ஸ், 64-9-1, பந்தர் ரோடு, பட்டமடாலங்கா, விஜயவாடா-520 014. போன்: 481519. • விசாகப்பட்டினம் த.பெ.எண். 130, செக்டர் 8, எம்.வி.பி. காலனி, விசாகப்பட்டினம் - 530 017. போன் : 530473.

Stimulus/UFL/558/96 T



பிச்சை பொறுமை இழந்திருந்தான். சந்திலிருந்த முட்டுக் கல்லில் தளர்வாய் உட்கார்ந்தான். சுற்றிலும் பாதி புகைத்த பீடித்துண்டுகள். எதிர் சுவற்றில் அண்டக் கால் கொடுத்து நின்றபடி, வானத்தை அண்ணாந்து, தாடி சொறிந்து கொண்டிருந்த மாயாண்டி, பிச்சையின் அவஸ்தையைப் பார்த்துக் காவிப் பல் தெரிய கலீரென்று சிரித்தான்.

"என்னண்ணே! நீ புள்ளத்தாச்சியா இல்லே உன் பொண்டாட்டி புள்ளதாச்சியா? ம்... இந்த நெளி நெளியறே!"

பிச்சை எரிச்சலோடு ஏறிட்டான்.

"என்னடா... எகத்தாளமா?"

"பின்னே என்னண்ணே! நான்தான் படிச்சு படிச்சு சொன்னனே! பொசுக்குன்னா கத்தியைத் தூக்கற நமக்குப் பொண்டாட்டி எதுக்கண்ணே! ம்... கூலிக்கு ஆளை வெட்டற நமக்கெல்லம் குடும்பம் தோதுப்படுமா?"

பிச்சை பதில் பேசவில்லை. தலைகுனிந்து கொண்டான். மாயாண்டி ஏளனப் புன்னகை உதட்டில் வழிய, சந்திலிருந்து மெயின்ரோட்டுக்கு நகர்ந்தான்.

எதிர் டீக்கடையில் பேப்பர் படித்தபடி இருவர்... பக்கத்துப் பெட்டிக்கடையில் பான்பராக் மென்றபடி ஒருவன்... சிக்னலுக்காகக் காத்திருந்தார்கள்.

ஆர்.எஸ்.காளியம்மன் கோவிலுக்கு எதிர்த்தாற் போல், பத்தடி தள்ளி, சேலம் மெயின் ரோட்டில் ஒரு சின்ன கட்டடத்தில் அந்த 'சமூக சேவை மையத்தின்' ஆபீஸ் இயங்கிக் கொண்டிருந்தது.

சரியாக மாலை ஆறுமணிக்கு, இருள் பூசிக் கொள்ள ஆரம்பிக்கும் நேரத்தில், வெள்ளை மாருதியில் வந்திறங்கும் முப்பத்தைந்து வயது இளைஞன்தான் இன்றைய இலக்கு! கார் நம்பர் கொடுக்கப்பட்டிருந்தது. கையிலோ, காலிலோ எலும்பு முறிவு அல்லது பலத்த ரத்த காயம்! உயிருக்குச் சேதம் கூடாது- இதுதான் உத்தரவு! மற்றபடி அந்த இளைஞன் யார், எதற்கு இந்த தண்டனை, இது தகுமா? முறையா? என்பதெல்லாம் விடைதெரியாத கேள்விகள்! கேட்கக் கூடாத கேள்விகள்!

இதுநாள் வரை பிச்சையும் கேட்டதில்லை! நேற்றுதான் கேட்டான்! அருவருப்பும், ஆச்சர யமும் முகத்தில் மின்னத் திரும்பிய சிசரின் கண்களில் எச்சரிக்கை!

"என்னடா பிச்சை! தலகாணி மந்திரமா! ரொம்ப தடுமாறிப் போயிருக்கே!"

"இல்லீங்க... வந்து..."

"இதோ பார்! சொகத்துக்கு மட்டும்தான் பொண்டாட்டி! அவ சொல் பேச்சை கேட்க ஆரம்பிச்சிட்டே... அப்புறம் நீ வெறும் தலையாட்டி ஞாபகமிருக்கட்டும்..! கொஞ்சநாளா 'தொழில்' மேல உனக்கு அக்கறை குறைஞ்சு போச்சு! இதுலயாவது உம் பழைய திறமையைக் காட்டு! போ."

சிசரை மறுத்துப் பேசும் தைரியம் இல்லை! அவன், சோற்றுக்கு வழியில்லாமல் சொறிநாயைப் போலத் தெருவில் திரிந்தவனுக்கு சொர்க்கம் காட்டியவன்! ஓடும்வரை விரட்டிக் கொண்டிருந்த ஜனங்களை, ஒரே ஒரு விழிப்பார்வையில் மிரண்டு போய் பின்வாங்கச் செய்தவன்! பைசா வுக்குப் பிரயோஜனப் படாத அனாதைப்

ஜெரா



'பிச்சையை' அந்தஸ்துக்கு உயர்த்தியவன். அவனைப் பகைத்துக் கொண்டு எப்படி...?!

ஆனால் கல்யாணி... அவளுக்கு எப்படி சமாதானம் சொல்ல முடியும்? எட்டி உதைக்கும் அவன் கால்களைக் கட்டிக் கொண்டு மௌனமாக கண்ணீர் விடும் அந்த 'வளர்ந்த' குழந்தையின் வாயை எப்படி அடைக்க முடியும்!

ஒரு வருடத்துக்கு முன்பு 'மாமூல்' வசூலிக்க தொப்பூர் பக்கம் அம்சாக்கா வீட்டுக்குப் போயிருந்தான் பிச்சை. அப்போது தான் மூலையில் உட்கார்ந்து கால் மடித்து விசும்பியபடி தலைவிரி கோலமாய் மூக்கைச் சிந்திக் கொண்டிருந்த கல்யாணி கண்ணில் பட்டாள். அம்சாக்கா அலட்டிக் கொள்ளாமல் நொடிக்கொருதரம் அவள் மோவாயில் இடித்து கெட்டவார்த்தையில் கொஞ்சிக் கொண்டிருந்தாள். மற்றப் பெண்களைப் போல இல்லாமல் கல்யாணியின் தீவிரமான எதிர்ப்பு பிச்சைக்கு ஓர் இலயிப்பை ஏற்படுத்தியது. மெல்ல அவளை நெருங்கினான்.

"என்னா குட்டி! ரொம்ப ரவுசு பண்றே... ம்...?"

கல்யாணி ஆக்ரோஷமாகப் பார்த்தாள். விரிந்த கண்களில் கசிந்த நெருப்பைப் பார்த்து பிச்சையின் அடிவயிறு லேசாகக் கலங்கியது. அம்சாக்காவைப் பார்த்தான்.

"என்னா அம்சா! பார்ட்டி ரொம்ப சிலும்பறா!"

வெற்றிலை எச்சிலைப் 'புளிச்' என்று வெளியே துப்பி விட்டு திரும்பிய அம்சாக்கா "யஹ்ஹாங்" என்று ஆமோதிப்பது போல நீட்டி முழக்கினாள்.

"ஆயி அப்பன் இல்லியாம்... மெட்ராஸுக்கு அக்காவைத் தேடிப் போறாளாம்... டிக்கட்டுக்கு காசில்லாம திருதிருன்னு குந்திகிட்டு இருந்தவளை இட்டாந்தேன்... மடங்குவளாங்கறா!"

"எங்கிட்டே வுடு...தள்ளிகிட்டு போயி பத்து நாள்ள சரியாக்கி அனுப்பி வைக்கிறேன்."

பிச்சைக்கு ஏன் என்று தெரியவில்லை. களங்கமற்ற அவள் முகமா, அல்லது கல் சிற்பம் போன்ற அவள் உடலா... எது அவனுக்குள் க்ரியை புரிந்தது என்று தெரியவில்லை. கேட்டு விட்டான்! ஆச்சர்யம் பொங்க அம்சாக்காவும் தலையாட்டி விட்டாள்!

அதிசயம்! கல்யாணி முரண்டு பிடிக்கவில்லை– பழகிய நாய்க்குட்டி போல பிச்சையைத் தொடர்ந்தாள்... ஒருவேளை எதிர்துருவம் என்பதால் அம்சாக்காவைவிட பிச்சையை சமாளிப்பது சுலபம் என்று நினைத்தாளோ என்னவோ...

பெண்சுகம் பிச்சையை என்றைக்குமே பேதலிக்கச் செய்ததில்லை! காரணம்... அவன் நினைத்தபோது... நினைத்தபடி அது கிடைத்தது வெகு சுலபமாக. ஆனால்...

கூடவே இருந்ததால் கல்யாணி அவனுக்கு இன்னொரு உலகத்தைக் காட்டினாள். அனாதையான அவனுக்கு அவளுடைய அன்பும் பரிவும் இதுவரை புலப்படாத எத்தனையோ உறவுகளின் வாசல்கதவுகளை விரியத் திறந்து விட்டன! முரட்டுத்தனம் மெல்ல மெல்ல முட்டிபோட ஆரம்பித்தது. இரக்க குணம்

லேசாக எட்டிப்பார்க்கத் தொடங்கியது.... நள்ளிரவில் விழித்துக் கொள்ள ஆரம்பித்தான்... குழந்தையாய் குறுகிப்படுத்து அவன் மார்பில் ஒண்டிக் கொண்டிருந்த அவள் எழில் முகம் அவனுக்கு எதிர்கால பயத்தைத் தூண்டி வியர்க்க வைத்தது.

அவள் விடாமல் நச்சரித்தாள். இந்த வெட்டும் தொழிலை விட்டு விடச் சொல்லி... கோபத்தில் உதைத்தாலும் பொறுமையாய் தாங்கிக் கொண்டாள்... என்றாலும் போராட மட்டும் தயங்கியதில்லை.

"**ஊ**ய்ங்ங்..."

வித்தியாசமான மாயாண்டியின் அந்த விசில் சத்தம் பிச்சையைத் துணுக்குறச் செய்தது... மெயின் ரோட்டுக்குப் பாய்ந்தான். சாம்பல் பூசிக் கொண்டிருந்த மெல்லிய இருட்டில் வெள்ளை மாருதி... கதவைத்திறந்தபடி அந்த இளைஞன்... யோசிக்க நேரமில்லை.. தபதபவென்று யார்யாரோ ஓடினார்கள்... மெல்லிய பரபரப்பில் இருந்த நெடுஞ்சாலை நிமிஷ நேரத்தில் நிசப்தமானது... சர்சர்ரென்று கடை ஷட்டர்கள் தலை கவிழ்த்துக் கொண்டன...

உருட்டுக் கட்டைகள் மாருதியின் கண்ணாடிச் சுவர்களைப் பதம்பார்க்க, விக்கித்து நின்ற இளைஞனின் பின்புறச் சட்டைக் காலரைக் கொத்தாகப் பற்றித் திருப்பி, வீச்சரிவாளை ஓங்கினான் பிச்சை! அந்தக் கணத்தில்...

"வீல்ல்" அடிவயிற்றில் எக்கி வெளிக் கிளம்பிய அந்த அலறல் பிச்சையை இமைக்கும் நேரம் தயங்கித் திரும்ப வைத்தது... அந்த நேரம் விடுபட்டுக் கொள்ள போதுமானதாயிருந்தது அந்த இளைஞனுக்கு... மேற்கொண்டு இயங்க பிச்சையால் முடியவில்லை... வீச்சரிவாள் கையைப் புறக்கணித்து தார்ச் சாலையில் தண்டனிட்டது. அலறியப் பெண்ணைப் பார்த்ததும் பிச்சை பதறினான்.

"ஐயோ கல்யாணி!" என்று கத்தியபடி பிச்சை ஓடினான்... மெல்ல மயங்கிச் சாய்ந்த கல்யாணி, தாங்கிக் கொள்ளும் முன்பு தரையில் விழுந்தாள்... பிச்சை அவள் தலையைப் பற்றித் தூக்கிய போது அவன் கைகளை நனைத்து, வெதுவெதுப்பான ரத்தம் விரலிடுக்கில் வழிந்தது... மெல்ல மேடிட்டிருந்த அவள் வயிறு ஏறித்தாழ, செருகும் இமைகளைப் பிரித்து பிச்சையை ஏக்கத்தோடு பார்த்தாள் கல்யாணி....

"விட்... விட்டுடுய்யா... வெட்டாதீய்யா..." அதற்கு மேல் பேசமுடியாமல் உதடுகள் துடிக்க கல்யாணி மயக்கமானாள்... செக்கப்புக்காக டாக்டரைப் பார்க்கப் போவதாய் சொல்லி இருந்தாள். அதற்கு முன்பு கோவிலுக்கு வந்திருக்க வேண்டும். அசம்பாவிதம் பார்த்த அதிர்ச்சியில், நிலை புரியாது, கல் இடறி... கால்

'சுருக்-நறுக்' என்று ஒரு சொல்லோவியம் - 18

கிரிக்கெட் என்பது....

'பதினொரு முட்டாள்கள் ஆடுவதை, பதினோராயிரம் பேர் பார்க்கிற விஷயம்' என்று பெர்னார்ட்ஷா சொன்னால் சொல்லி விட்டுப் போகட்டும்.

உலகக் கோப்பை ஜுரம் பற்றத் தொடங்கியிருக்கும் இந்த சீஸனில் 'கிரிக்கெட்' பற்றி நீங்கள் ஒரு 'டச்சிங்'கான சொல்லோவியம் தீட்டுங்கள். பிரசுரமாகும் ஒவ்வொரு சொல்லோவியத்துக்கும் ஐம்பது ரூபாய் பரிசு. இன்னும் எட்டு வாரங்களுக்குத் தொடர்ந்து நடக்கும் இப்போட்டியில் அதிக முறை பரிசு பெறும் ஒருவருக்கு ஒரு ஜோடி டைடன் கைக்கடிகாரங்கள் பரிசு!

முடிவு தேதி : 19.2.96

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

- ஆர்.

கிரிக்கெட் என்பது..............................

....

....

....

....

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

பாரதத்தின் சின்னஞ்சிறு கிராமங்களில் வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கு நம்பிக்கை தரும் புத்தொளி



கிராமிய குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள்

எல்.ஐ.சி. பெருமிதத்துடன் அறிமுகப்படுத்தும் கிராமிய குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் அண்மையில் மாண்புமிகு பிரதமர் அறிவித்த வண்ணம். கிராமிய பொது மக்களின் நாளைய நல் வாழ்விற்காக ஒரு சிறப்பான நடவடிக்கையை எடுத்துள்ளது எல்.ஐ.சி.

எல்.ஐ.சி. அறிமுகப்படுத்தும் கிராமிய ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகள், ஆயுள் காப்பீட்டினை வழங்கிட வழி வகுக்கின்றது.

- 20 வயது முதல் 50 வயதுக்குட்பட்டவர்கள் இத்திட்டத்தில் சேரலாம்.
- 60 வயதிற்கு முன் இறப்பு நிகழுமாயின் ஆயுள் பாதுகாப்புத் தொகை ரு. 5000/- நியமனதாரருக்கு.

அ) **பொதுத் திட்டம்:** மெம்பர்கள் பிரிமியம் தொகை முழுதும் செலுத்த வேண்டும்.

ஆ) **சலுகைத் திட்டம்:** வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பத்தின் யாராவது ஒரு நபர், மொத்த பிரிமியம் தொகையில் பாதி மட்டுமே செலுத்தி இன்சூரன்சு பயன் பெறலாம்.

ஆண்டுப் பிரிமிய அட்டவணை

திட்டம்	உறுப்பினர் ஆகும்போது வயது	பிரிமியம் செலுத்துவோர்		
		உறுப்பினர்	மத்திய அரசு	மாநில அரசு
பொதுத் திட்டம்	1) 20 வயது முதல் 40 வயதிற்குள்ளாக	ரு. 60	—	—
	2) 40 வயது முதல் 50 வயதிற்குள்ளாக	ரு. 70	—	—
சலுகைத் திட்டம்	1) 20 வயது முதல் 40 வயதிற்குள்ளாக	ரு. 30	ரு. 15	ரு. 15
	2) 40 வயது முதல் 50 வயதிற்குள்ளாக	ரு. 35	ரு. 17.50	ரு. 17.50

குடும்பப் பாதுகாப்பின் முன்னோடி.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

மக்களின் மகத்தான சேவையில்

efficient-LIC/TAM/078/95



– இரா. முத்துவேல்

மடங்கி...

பிச்சை செய்வதறியாது தவித்தான். பெரிதாக ஓலமிட்டு அழ வேண்டும் போலிருந்தது. ஆனால் வார்த்தைகள் மொண்ணையாகித் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டன. தேகம் வெடவெடத்தது. அவன் கைகள், உடம்பு எல்லா இடத்திலும் ரத்தம்....

ரத்தம் அவனுக்குப் புதிதல்ல... அது அவன் முகம் நனையத் தெறித்த போதெல்லாம் கூட தேகம் நடுங்கியதில்லை- இந்த அளவுக்கு பாதிக்கப்பட்டதில்லை....ஆனால் இப்போது... பதற்றம் தொற்றிக் கொண்டது.... ரத்தம் பார்க்க கண்கள் கூசின... அந்தச் சிவப்பு, மனதை சின்னாபின்னப் படுத்தியது- நெருப்பைத் தீண்டியது போல எரிந்தது...

இந்த ரத்தம்... அவன் ரத்தம்! அன்பைப் புரியவைத்தவளின் ரத்தம்... அனாதைப் பிச்சைக்கு ஓர் அடையாளம் கொடுத்தவளின் ரத்தம்...

நிசப்தமாகி இருந்த நெடுஞ்சாலை நிமிஷ நேரத்தில் உயிர்ப் பெற்றது... பிச்சை நெடுங்கல்லாய் உட்கார்ந்திருக்க, அவனைச் சுற்றி பரபரப்பாய் கூட்டம்! போட்டது போட்டபடி கோவில் பூசாரி ஓடி வந்தார்!

"ஆளாளுக்கு வசவசன்னு பேசிக்கிட்டு இருக்காம ஒரு ஆட்டோவைப் புடிங்க... புள்ளதாச்சிப் பொண்ணு.... இந்தாய்யா... காயத்துக்கு இந்தத் துண்டைச் சுத்து..."

பிச்சை மௌனமாய் சொன்னதைச் செய்தான். யாரோ கல்யாணியின் முகத்தில் தண்ணீர் தெளித்தார்கள். யாரோ சோடா உடைத்து நீட்டினார்கள்.

"நகருங்கய்யா... கொஞ்சம் நகருங்க..."

கூட்டத்தை விலக்கிக் கொண்டு அந்த இளைஞன்... பிச்சையால் தாக்கப்பட வேண்டிய இளைஞன்... பின்புறம் சட்டை கிழிந்து தொங்கிக் கொண்டிருக்க... எட்டிப் பார்த்தான்... சாலை ஓரமாக மூளியாய் நின்று கொண்டு... வெள்ளை மாருதி புறப்படத் தயாராய் இருந்தது.

"சும்மா பாத்துக்கிட்டு இருந்தா காரியமாகாது... ஆளுக்கு ஒரு கை புடிங்க..."

நிமிஷ நேரத்தில் கல்யாணி மாருதியில் ஏற்றப்பட்டாள்... ஆதரவாய் ஓரிரு பெண்களும் ஏறிக் கொண்டனர். டிரைவர் சீட்டுக்குப் போகும் முன்பு இருகரம் கூப்பிய படி மௌனச் சாமியாய் நின்று கொண்டிருந்த பிச்சையைப் பார்த்து நேசமாய் சிரித்தான் அந்த இளைஞன்.

"அட.... முன்னால் வந்து உட்காருங் கண்ணே! எங்கம்மாவும் டாக்டர்தான்... ராசியானவங்க... கவலைப் படாதீங்க... ஒண்ணும் ஆவாது..."

பத்து நாட்கள் ஆகி விட்டன.

வெகு சீக்கிரமே எழுந்து ஒரு பீடியைப் பற்ற வைத்தபடி... ஆங்காங்கே பொத்தலாகி இருந்த வீட்டுக் கூரையை வெறித்தபடி உட்கார்ந்திருந்த பிச்சையிடம் காப்பியை நீட்டினாள் கல்யாணி...

"அட... என்ன ரோசனை...?"

தலையில் கட்டோடும், துருத்திய வயிறோடும் மெல்ல மூச்சு வாங்கியபடி நின்றிருந்த அவளை தீர்க்கமாகப் பார்த்தான் பிச்சை...

"ஒண்ணுமில்லே... நான்... நான் கூலிப்பட்டாளத்துல சேந்துடறதா முடிவு பண்ணிட்டேன் புள்ளே..."

கல்யாணி திடுக்கிட்டுப் பின்வாங்கினாள்... கண்களில் கலவரத்தோடு கண்ணீர்த் துளிகளும் எட்டிப் பார்த்தன. மூக்கு விடைத்தது... பிச்சை ஆதரவாய் சிரித்தான்....

"பயப்படாதே... உசிரை வாங்கற அந்த கூலிப்பட்டாளத்துல இல்ல... உழைச்சுப் பிழைக்கற கூலிப்பட்டாளத்துல... கூளையூர்லே ஒரு கட்டட வேலை நடக்குது... அதுக்குதான்..."


பிச்சை கட்டிலுக்கு அடியிலிருந்து மண் வெட்டியையும், பூச்சுக் கரண்டியையும் இழுத்துக் காட்டி வெள்ளையாகச் சிரித்தான்... கல்யாணி துள்ளலோடு அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, கன்னம் நோக்கிப் பாய்ந்தாள்.

பெயரில் மதுரத்தை இணைத்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ, பாண்டியரின் அந்தப் பழம் பெரும் தலை நகரான மதுரை, இளவரசி பூங்கோதையின் மனத்திற்கு ஓர் இனிமையையும், பெரும் ஆறுதலையும் அளித்திருந்தது. இளையராணியின் அன்பும் பரிவும் மட்டுமின்றி அந்த இனிமைக்கு வலிவு கூட்ட வேறு காரணமும் இருப்பதாகப் பட்டது அவளுக்கு. அந்தக் காரணம் அரண்மனைக்குள் அடிக்கடி வளைய வந்து அவளைப் பலமுறை சந்தித்தது. விளையாட்டுப் பிள்ளை போலிருந்தவன் அவளை விழுங்கி விடுபவன் போலப் பார்த்த பார்வைகளும், அடிக்கடி ஏற்பட்ட சந்திப்புகளும் அவள் சிந்தையில் ஏற்படுத்திய மாறுதல்களின் விளைவாகக் கன்றிச் சிவந்திருந்தது அவள் முகம். அந்த முகத்தையும் தரையை நோக்கித் தாழ்ந்துவிட்ட பார்வையையும் கண்டு இளையராணியும் தோழியரும் பேசிய பரிகாச வார்த்தைகளும் கூட இனிமையை அளிப்பதாக எண்ணிக் கொண்டாள் அவள்.

விஷ்வக்சேனன்

எல்லாவற்றுக்கும் மேலாக கொங்கு மண்ணில் போசளர் ஆதிக்கம் பரவுமுன் அவளை சூளாமணி விஹாரத்தில் கொண்டு சேர்த்தவரும், அவள் நல்வாழ்விலும், கல்வியிலும் பெரும் அக்கறை காட்டியவருமான சைவத் துறவியாரின் திட்டப்படி காரியங்கள் நடக்கின்றன என்பது பாதுகாப்பு உணர்வைத் தந்தது. அவள் சேர வேண்டிய இடம் பாண்டியர் அரண்மனை என்று துறவியார் குறிப்பிட்டதாக விஜயன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட பின்பு, ஆழ்ந்த நம்பிக்கை உண்டாயிற்று.

சித்தத்தின் வேகத்திற்கும் காலத்தின் வேகத்திற்கும் ஒரு கண்ணுக்குத் தெரியாத மாயப் பிணைப்பை ஏற்படுத்தியிருந்த இயற்கை, மதுரை அரண்மனைக்கு அவள் வந்து இரு தினங்கள் ஓடி விட்டதை உணர வழியில்லாமல் அடித்திருந்தது. இளையராணியிடமிருந்தும், ஆதித்யனின் விஷம விழிகளிலிருந்தும் தப்பி அரண்மனை நந்தவனத்தில் மயக்க முயற்சித்துக் கொண்டிருந்தன. அந்த மயக்கத்தை இன்னும் அதிகப்படுத்த நந்தவனத்து மலர்கள் தங்களது சுகந்தம் அனைத்தையும் திரட்டி அவளுக்கு அனுப்பி வைத்துக் கொண்டிருந்தன. அதுவும் போதாதென்று அவள் அமர்ந்திருந்த இடத்தினருகிலிருந்த மரத்தின் மீதிருந்து குயில் ஒன்று தன் இனிய குரலை எழுப்பிக் கொண்டிருந்தது. ஒரே சீராகச் சென்று கொண்டிருந்த தனது வாழ்வின் போக்கில் ஏற்பட்டு விட்ட மாறுதல்களைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தவளின் தோள்களில் சில்லென்ற இரு கரங்கள் பதிந்தன. திடுக்கிட்டுத் திரும்பியவளின் விழிகளை இரு விஷம விழிகள் ஊடுருவின. உள்ளத்தையே ஊடுருவி அலசிய அந்தப் பார்வையை இரு வினாடிகளுக்கு மேல் சந்திக்கத் திராணியற்ற அவள் முகம் தாழ்ந்தது. வெகு சகஜமாக அவளருகில் அமர்ந்த ஆதித்யனின் கரம் அவள் முகத்தை மெல்ல நிமிர்த்தியது. ''பூங்கோதை'' என்ற மிருதுவான அழைப்பொன்றும் அவனிடமிருந்து வந்தது.



சிறு வயதில் தந்தையும், சூளாமணி விஹாரத் தலைவரும் சைவத் துறவியாரும் தன் பெயரைப் பலமுறை உச்சரித்து அழைத்திருந்தாலும், அந்த அழைப்புக்கள் அனைத்திலும் ஏற்படாத ஓர் உணர்வு ஆதித்யனின் அழைப்பில் ஏற்படுவதை உணர்ந்தாள் இளவரசி.

''பூங்கோதை''- மீண்டும் அழைத்தான் அவன்.

"ம்" ஒற்றைச் சொல்லே பதிலாக வந்தது அவளிடமிருந்து.

"துறவியார் கூறியபடி இளையராணியார் செய்யும் ஏற்பாட்டுக்கு நீ ஒப்புக் கொள்கிறாயா பூங்கோதை?"

"ம்"- மீண்டும் அதே பதில் வந்தது அவளிடமிருந்து. அவன் அதைக் குறிப்பிடுகிறான் என்பதும் புரிந்தது அவளுக்கு.

"இப்படி ஒற்றெழுத்தாகவே பதில் கூறினால் எப்படி? வாய்திறந்து மறுமொழி கூறினால் முத்தா உதிர்ந்துவிடும்?" ஆதித்யனின் குரல் சற்று உயர்ந்து ஒலித்தது.

சட்டென்று நிமிர்ந்தாள் அவள். அடுத்து மெலிதாக ஒலித்த அவள் குரலில் தயக்கம் தெரிந்தது. "சம்மதம்தான், ஆனால்..."

"ஆனால் என்ன?"

"நான் அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒரு சிற்றரசின் வாரிசு. தாங்கள் பாண்டியப் பேரரசின் இளவல். மேலும்..."

இந்திர



''மேலும் என்ன?''

''மேலும் மன்னர் இதற்கு ஒப்புக் கொள்ள வேண்டுமே?''- மெல்ல நீண்ட சம்பாஷணை அவள் தயக்கத்தைத் துடைத்திருந்தது.

ஆதித்யனின் பதில் உடனே வந்தது: "மன்னர் ஒப்புக் கொண்டு விட்டார்!"

"எப்பொழுது?" என்றாள் வியப்பில் விரிந்த விழிகளுடன்.

அகன்று விரிந்த அவன் விழிகளைச் சற்று நேரம் ரசித்த ஆதித்யன், ''பூங்கோதை, நீ கொங்கு நாட்டின் இளவரசி மட்டுமல்ல,

தளசு

மூன்றாம் ராஜேந்திர சோழருக்குப் பின் அற்றுப் போய்விட்ட சோழ வம்சத்தின் எஞ்சியிருக்கும் ஒரே வாரிசு. அதனால்தான் உன்னை போசளர் கரங்களில் ஒப்படைப்பதை ராஜேந்திர சோழர் விரும்பவில்லை. சோழ, பாண்டிய அரசுகளை இணைப்பதன் மூலம் தமிழகம் அன்னியரிடமிருந்து விடுபடும் என்று எண்ணுகிறார். பாண்டிய மன்னரும் இதை ஏற்றுக் கொண்டார். ஓலை இப்போதுதான் வந்தது'' என்றான்.

பூங்கோதையின் அகன்ற விழிகள் படபட வென்று அடித்துக் கொண்



அருள்வாக்கு

பகவத் ஸங்கல்பம் நமக்குப் புரியாது. என்றாலும், அவன் சாஸ்த்ர வாயிலாகக் கலி அதர்ம யுகம் என்று நமக்குத் தெரிவிக்கும் போது, அப்படியே அதர்மத்தில் லோகம் நசித்துப் போவதற்காகத்தான் இந்த யுகம் அவனால் தீர்மானமாக ஸங்கல்பிக்கப்பட்டிருக்கிறதென்று அர்த்தம் செய்து கொண்டுவிடக் கூடாதென்றே தோன்றுகிறது. 'லோகம் அவனுக்கு நாடகம். அவன் கதை எழுதி, டைரக்ட் பண்ணுகிற நாடகம். ரஸ வைசித்ர்ய ருசிக்காக (காவிய ரஸங்களில் மாறுபாடு செய்து சுவை கூட்டுவதற்காக) நாடகாசிரியர் ரௌத்ரம், பீபத்ஸம், பயம் ஆகியவையுள்ள ஸீன்களையும் கல்பிப்பது போல அவனும் கலியில் செய்வதாயிருக்கலாம்' என்று சொன்னாலுங்கூட, இதிலே ஒரு அளவுக்கு மேலே போக அவனுடைய கருணையுள்ளம் இடம்கொடுக்காது. ஒரே ரௌத்ரம், பீபத்ஸம், பயானகம் என்று ஆகிவிட்டால் அதில் 'ரஸம்' என்று சொல்லும்படி என்ன இருக்கும்? விரஸம்தான் இருக்கும். ஆகையினால் அவன் பூர்வ யுகத்து மநுஷ்யர்களைப் போல இந்த யுகத்தில் அவ்வளவு தார்மிகர்களாகவும், தெய்வ சக்தியுள்ளவர்களாகவும் ஜனங்களை ஸ்ருஷ்டிக்காவிட்டாலும், அதர்மத்தில் அவர்களுக்கு உள்ளூர ஒரு ருசியைக் கொடுத்தே ஸ்ருஷ்டித்திருந்தாலும், அதிலேயே அவர்கள் மூழ்கி அழிந்து விடும் கொலைக் கூத்தாக முடித்து விட மாட்டான். சறுக்கா மாலை விளையாட்டுப் போலச் சறுக்கும் வரை சறுக்கட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்தாலும், விழுந்த எலும்பை முறித்துக் கொள்ள விடாமல் தாங்கிக் கொள்வதற்கு வருவான், மஹான்களையும் அனுப்பி வைப்பான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

டன. "துறவியார் கூறியது பலித்து விடும் போலிருக்கிறது" என்று அவள் இதழ்களும் முணுமுணுத்தன.

"என்ன கூறினார் துறவியார்?" ஆதித்யன் கேட்டான்.

இளவரசி தன் கரத்தை அவன் முகத்துக்கு எதிரில் நீட்டினாள் "துறவியார் இந்தக் கரத்தின் ரேகைகளைப் பார்க்கும் போதெல்லாம் தமிழகத்தை மீண்டும் ஒரு குடையின் கீழ் கொண்டுவரும் ஒரு தமிழ் மன்னனின் அரச குடும்பத்தில் நான் சென்று சேருவேன்; என் திருமணத்தை தமிழகத்தின் மன்னர்கள் குறைந்தது மூன்று பேராவது சேர்ந்து நடத்துவார்கள் என்று அடிக்கடி கூறுவார்"– அவள் வார்த்தைகள் கனவிலிருந்து ஒலிப்பதுபோல ஒலித்தன.

தன் முகத்துக்கெதிரே நீண்ட அந்த மலர்க் கரத்தைப் பற்றிய ஆதித்யன் தன் இதழ்களை அதில் பதித்தான். பூங்கோதையின் உடல் சிலிர்த்தது.

"அப்படியே நடக்கட்டும் பூங்கோதை. நான் இப்போது வந்தது உன் சம்மதத்தை உன் வாய்மொழியாக அறிந்து கொள்ள மட்டுமல்ல. உன்னிடம் விடைபெற்றுக் கொள்ளவும்தான்" என்றான். இளவரசியின் மலர்முகம் சட்டென்று கூம்பியது. "விடைபெற்றுக் கொள்ளவா? எதற்காக?"– அவள் குரல் ஈனஸ்வரத்தில் ஒலித்தது.

"துறவியார் என்னைத் தஞ்சைக்கு அழைத்து ஓலையனுப்பியிருந்தாரல்லவா? மன்னரிடமிருந்து உடனே செல்லும்படி உத்தரவு வந்திருக்கிறது. அது மட்டுமல்ல..."

"இன்னும் என்ன?"

"உன்னையும் இந்த மதுரையிலிருந்து வெளியேற்ற உத்தரவிட்டிருக்கிறார்."

"எதற்காக?"– அவள் குரலில் அச்சம் ஒலித்தது.

"அஞ்ச வேண்டாம் பூங்கோதை. உன்னைப் பாதுகாப்பான இடத்தில் ஒப்படைத்த பின்புதான் நான் தஞ்சைக்கு செல்வேன்."

"இந்த மதுரையின் பாதுகாவலுக்கு என்ன குறைவு?"

"பூங்கோதை! தமிழகத்தை அன்னியரிடமிருந்து மீட்க சோழ நாட்டிலும் கொங்கு மண்ணிலும் உள்ள போசளர்களையும், தொண்டை மண்டலத்திலுள்ள காகதீயர்களையும் விரட்ட வேண்டும். இடையில் காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கனின் இடையூறுமிருக்கிறது. இத்தனையும் சாதிக்குமளவிற்கு நமது படை பலம் அதிகரிக்க வேண்டும். இருக்கும் படைகளை இதற்காக மூன்றாகப் பிரித்திருக்கிறார் மன்னர். அதில் மதுரையின் காவற்படையும் அடங்கும். தமிழகத்தின்

நடராஜ் எஸ்டேட்ஸ்

வழங்கும், வாரம் தோறும்



காய்கறி - திட்டம்

"சாந்திகாம்ப்ளெக்ஸ்", 3 வது மாடி, 26, ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை 600 017.
கிளைகள் : 51, தெற்கு வீதி திருவாரூர் - 610 002. 2-B, செல்வம் நகர், தஞ்சாவூர் - 613 007.
1-B, காமராஜ் சாலை, காஞ்சிபுரம் - 613 501

சென்னை நகர வாசிகளுக்கு மட்டும்

★ ரூ. 5,000 செலுத்தி 3 ஆண்டு காலத்துக்கு உறுப்பினர் ஆக வேண்டும்.


★ 3 ஆண்டு காலத்துக்கு பிறகு உறுப்பினர் கட்டணத்தை திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.

★ அல்லது மீண்டும் 3 ஆண்டுகளுக்கு புதுப்பித்துக் கொள்ளலாம். (ரினிவல்).

★ உறுப்பினர் கட்டணத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் அளிக்கும் 12% P.A. வட்டியும் கிடைக்கும்.

உறுப்பினர் கட்டணத்தை நேரிலோ, டி.டி. மூலமாகவோ, காசோலை மூலமாகவோ அளிக்கலாம்.

இலவசம்
அழகிய கவர்ச்சிகரமான உறுப்பினர் கார்டையும் அத்துடன் காய்கறி நறுக்கும் S.S. கட்டரையும் முற்றிலும் இலவசமாக பெற்று செல்லுங்கள்



ஞாயிறு தோறும் சப்ளை
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை சூரியன் உதிக்கும் நேரத்தில் எங்கள் விவசாய வளர்ச்சி பிரதிநிதி பசுமையான சத்துமிகுந்த காய்கறிகள் நிறைந்த, அழகிய பாலிதின் மற்றும் சணல் பைகளுடன் உங்கள் வீட்டின் கதவை இன்முகத்துடன் தட்டுவார்.

பூச்சிக் கொல்லி மருந்து, மற்றும் ரசாயன உரங்களை 99% தவிர்க்க முயற்சி செய்கிறோம்.
இயற்கை உரம் இடுவதால் உங்கள் உடல் நலம் முற்றிலும் பாதுகாக்கப்படுகிறது.

சப்ளை விபரம்

உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் வாழைக்காய், வெண்டைக்காய், முருங்கைக்காய், பாகற்காய், பீர்க்கங்காய், அவரைக்காய், கோவைக்காய், கொத்தவரங்காய், வெள்ளரிக்காய், பூசணிக்காய், பரங்கிக்காய், சுரைக்காய், புடலங்காய், சுண்டைக்காய், மிளகாய், முள்ளங்கி, பிடிகரனை, முருங்கைக்கீரை, அகத்திக்கீரை, மணத்தக்காளிகீரை, முளைக்கீரை, அரைக்கீரை, வெந்தயக்கீரை, பசலைக்கீரை, புதினாக்கீரை, புளிச்சக்கீரை, பொன்னாங்கன்னிக்கீரை, மாவடு, நெல்லிக்காய், மாங்காய், தேங்காய், வாழைப்பழம், காராமணி, (சில காய்கறிகள் சீசனில் மட்டும் வழங்கப்படும்). வாழையிலை போன்றவை மாற்றி மாற்றி சப்ளை செய்யப்படும்.

Phone : 4342098, 4840150

திட்டமிட்ட குடும்பத்துக்கு முடிந்தவரை தேவையான காய்கறிகள் வழங்கப்படும். இயற்கை சீற்றங்களால் ஏதேனும் சேதாரம் ஏற்பட்டாலொழிய எங்கள் சப்ளை ஒருபோதும் நிற்காது. உறுப்பினராக சேர்வதற்கு குறிப்பிட்ட இடங்களே மீதி இருக்கின்றன.

NATARAJ GROUP OF COMPANIES :
NATARAJ FINANCE, NATARAJ CHITS (TAMIL NADU) PVT. LTD.,
NATARAJ EXPORTS OVERSEAS, NATARAJ OIL MILLS,
NATARAJ PUBLICATIONS.

24% P.A.



''உங்களுக்குத் தெரிஞ்ச மினிஸ்டர், எம்.பி., எம்.எல்.ஏ. யாராவது இருக்காங்களா?''

''இல்லை ஸார்...''

''சரி... ஆளுங்கட்சி மாநிலச் செயலாளர், மாவட்டச் செயலாளர் இப்படி யாராவது...''

''அப்படித் தெரிஞ்சவங்களும் யாரும் இல்லை ஸார்...''

''அப்படியா?... போலீஸ்துறையிலே இன்ஸ் பெக்டர், எஸ்.ஐ., கான்ஸ்டபிள்னு...''

''ஒருத்தரும் இல்லை ஸார்...''

''அப்பாடா!... ஆபீஸ் பணத்தைக் கையாடின குற்றத்துக்காக உங்களை நான் சஸ்பெண்ட் பண்ண றேன்!''

– எஸ். சீனிவாசன்

விடுதலைக்கான முதற்போர் கொங்கு மண்ணில் நிகழப் போகிறது. படைத்தலைவர் கிருஷ்ணமல்லர் உத்தமபாளையத்திலிருக்கிறார். அவரது பாதுகாப்பில் உன்னைக் கொண்டு சேர்த்த பிறகுதான் நான் தஞ்சை செல்லப் போகிறேன். பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அரண்மனைக்குத் திரும்ப லாம் வா'' என்றான் ஆதித்யன்.

உறவின் இனிமையும் பிரிவின் துயரமும் ஏற்படுத்திய உணர்ச்சிகள் ஒன்றாய் உள்ளத்தில் போட்டியிட, இளவலின் கரத்திலிருந்து தனது கரத்தை விடுவித்துக் கொள்ள மனமின்றி மௌனமாக நடந்த பூங்கோதைக்கு எப்படியும் அவன் உத்தமபாளையம் வரை வருகிறான் என்ற நினைவு சற்று ஆறுதலளித்தது.

அதே சமயத்தில் விஜயனுடன் உரையாடிக்கொண்டிருந்த யுவானுக்கு உத்தமபாளையம் செல்லும் ஆவல் அதிகரித்துக் கொண்டிருந்தது. பாண்டியரின் பிரதான படைத்தலைவரும், வடநாட்டு மல்லர்களையெல்லாம் வென்றதால் ஆரியச் சக்கரவர்த்தி என்று பட்டம் பெற்றவரும், தமிழகத்துப் போர் முறைகளை கரதலப் பாடமாகக் கற்ற பின்பும் திருப்தியடையாமல் சீனத்திற்கும் வந்து போர்ப் பயிற்சி பெற்று வந்தவருமான கிருஷ்ண மல்லரைப் பற்றி அவன் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தான். எல்லாவற்றையும் விட அவன் தந்தை யாங்சின் இறுதியாக உத்தம பாளையத்தின் கோட்டையில்தான் பணியாற்றிக் கொண்டிருந்தார் என்று விஜயன் தெரிவித்திருந்ததும் அவன் ஆவலை அதிகரிக்கச் செய்திருந்தது.

வீரபாண்டியனிடமும் இளையராணியாரிடமும் விடை பெற்று, மறுதினம் உதய நேரத்திலேயே தொடங்கிய பயணம் இளவரசியின் மனோநிலைக்கு சற்று மாறுதலை அளிக்கத் தொடங்கியது. வைகையைக் கடந்த பின்னர், பசேலென்று விரிந்த வயல்களும் அழகிய கிராமங்களும், சிறு குன்றுகளும் வனங்களும் அவள் ஏக்கத்தை மாற்ற முயன்றன. முல்லையாற்றைக் கடந்த பின்னர் சூழ்நிலை சற்று மாறியது. கண்களுக்கெட்டிய தூரம் வரையில் தோகை மரங்கள் நிறைந்த வனமும், தோகை விரித்து ஆடிய மயில்களின் கூட்டங்களும் தென்பட்டன. ஊடே வாழையும் தென்னையும் நிறைந்த சோலைகள் குறுக்கிட்டன.

விஜயனுடன் உரையாடியபடியே புரவியை நடத்திய யுவான், சற்று அருகில் நெருங்கி "விஜயா, இது என்ன இடம்?" என்று வினவினான்.

"இந்த இடத்திற்குத் தோகை வனம் என்று பெயர்'' என்ற விஜயனின் முகத்தில் ஆழ்ந்த சிந்தனை தெரிவதைக் கண்ட யுவான் "எதைப் பற்றி சிந்திக்கிறாய் விஜயா?" என்றான்.

"யுவான், உத்தமபாளையம் கோட்டை பலமானதுதான். படைத்தலைவர் கிருஷ்ண மல்லரும் சாமானிய மனிதரல்ல. ஆனால் அங்கிருந்துதான் உன் தந்தை சிறைப் பிடிக்கப் பட்டு போசளரால் கடத்தப்பட்டிருக்கிறார்'' என்றான் விஜயன்.

"நீ என்ன கூற வருகிறாய் விஜயா?" யுவானின் குரலில் இலேசாகக் குழப்பம் ஒலித்தது.

"யுவான். என் யூகம் சரியானால் உத்தம பாளையக் கோட்டைக்குள்ளேயே போசள ஒற்றர்கள் இருக்க வேண்டும். உன்னைப் பார்த்த பிறகு அந்த ஒற்றர்களுக்குச் சந்தேகம் எழலாம். எதற்கும் நீ எச்சரிக்கையுடன் இரு'' என்றான் விஜயன்.

விஜயனின் வார்த்தைகளிலிருந்த உண்மை யுவானுக்குப் புரிந்தது. தோகை வனத்தைக் கடந்ததும் புரவியை நிறுத்தினான் விஜயன். அவன் திடீரென நின்றதைக் கவனித்த யுவானும் ஆதித்யனும் கூட புரவிகளை நிறுத்தினார்கள். புரவியைத் திருப்பி விஜயனை நெருங்கிய ஆதித்யன் ''ஏன் நின்றுவிட்டாய் விஜயா?'' என்றான்.

''இளவரசே, துறவியார் எனக்கு இட்ட முக்கியப் பணியொன்று இன்னும் நிறைவேற்றப் படாமலிருக்கிறது. அதற்காக நான் கொங்கு நாட்டின் வடக்குப் பகுதிவரை செல்ல வேண்டும். நான் இப்படியே விடை பெற்றுக் கொள்ள அனுமதிக்க வேண்டும்" என்றான் விஜயன்.

சற்று நேரம் ஏதோ சிந்தித்த ஆதித்யன் "சரி

ரிஜிஸ்டர் எண் S.I.C. of C. 3225

ஸ்ரீ ராமஜெயம்


தாது வருஷத்திய

ஆற்காடு கா.வெ. சீதாராமய்யர்

சர்வமுகூர்த்த பஞ்சாங்கம்

1996 **1997**

TRADE



MARK

துவக்கம் 1900 நடப்பு 1996

டிரேட் மார்க் உரிமையாளரும், கணிதரும் :
ஆற்காடு ஸ்ரீராம நிலைய நாடி ஜோதிட வல்லவராகிய
ஆற்காடு ஜோதிட வல்லுனர்

கா.வெ. சீதாராமய்யர் குமாரர்
K.S.V. சுப்ராமய்யருடைய அபிமான புத்திரன்
K.N. நாராயணமூர்த்தி மகன்
K.N. சுந்தரராஜன்

லாவண்யா பதிப்பகம்
51, சீதாராமய்யர் தெரு, ஆற்காடு - 632 503.

வெளியிட்டு விற்பனை செய்பவர்கள்
ஆனந்த நிலையம்
18, அருளாம்பாள் தெரு (Upstairs) T. Nagar, Madras - 600 017.
Phone : 4346242, 4344158.

 விலை : 29.00

ஆற்காடு என்ற பெயரால் வெளிவரும இதர போலி பஞ்சாங்கங்களை

ஆற்காடு ஜோதிட வல்லுனர் கா.வெ. சீதாராமய்யர் அவரது குமாரர் K.S.V. சுப்பராமய்யர் அபிமான புத்திரன் K.N. நாராயணமூர்த்தி போட்டோ படங்கள் பின்பக்கத்தில் இருக்கின்றனவா என்று கவனித்து வாங்கவும்.

விஜயா, உன் விருப்பப்படியே செய். உன்னை மீண்டும் தஞ்சையில் சந்திக்கிறேன்" என்றான்.

இளவரசியிடமும், யுவானிடமும் விடை பெற்றுக் கொண்ட விஜயன் புறப்படுமுன் ஆதித்யனின் குரல் அவனை மீண்டும் நிறுத்தியது. "விஜயா, சற்றுப் பொறு"...

"என்ன இளவரசே?"

"நீ தேடிச் செல்பவரைக் காணும் வாய்ப்புக் கிடைத்தால் இன்னும் ஒரு திங்களில் போர் தொடங்கி விடும் என்று தெரிவித்து விடு" என்றான் ஆதித்யன்.

விஜயனின் விழிகள் வியப்பில் விரிந்தன. பிரமிப்பில் சற்றுத் திகைத்தவன் மேற்கொண்டு ஏதும் கூறாமல் புரவியைத் திருப்பிக் கொண்டு விரைந்தான்.

பயணம் மீண்டும் தொடர்ந்தது. கதிரவன் மேற்கில் சரியத் தொடங்கிய நேரத்தில் உத்தம பாளையத்தின் கோட்டை மதில்கள் பெரிதாக எழுந்து நின்றன.

ஆதித்யனைக் கண்டதும் கோட்டை வாயிலிலிருந்த பேரிகைகள் பலமாக முழங்கி வரவேற்றன. கோட்டையின் அகலத்தையும் ஆழமான அகழியையும், பலமான காவல் முறையையும் கவனித்த யுவான், இந்தக் கோட்டையிலிருந்து ஒருவரைக் கடத்த வேண்டுமானால் உள்ளுக்குள் ஒரு திறமையான ஒற்றன் இருக்க வேண்டும் என்று விஜயன் கூறியது உண்மையாகத்தானிருக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

அணி வகுத்து நின்று, வாட்களைத் தாழ்த்தி வரவேற்ற வீரர்களின் வணக்கத்தை ஏற்ற ஆதித்யன் கோட்டைத் தலைவனை அணுகி "படைத் தலைவர் எங்கே?" என்று வினவினான்.

கோட்டைத் தலைவனின் பதில் வணக்கத்துடன் வந்தது. "இளவரசே, சேரன் துறைமுகத்திலிருந்து அரபுப் புரவிகள் வந்திருக்கின்றன. அதில் தமக்கு அதிமுரடான புரவியொன்று தேவையென்று பார்வையிடச் சென்றிருக்கிறார். விரைவில் வந்து விடுவதாகவும் கூறிச் சென்றார். தாங்கள் உள்ளே வாருங்கள்."

ரதத்திலிருந்து இறங்கிய இளவரசியும், யுவானும் பின் தொடர அரண்மனையை நோக்கி நடந்த ஆதித்யன், பாதியில் நின்றான். கோட்டை வாயிலிலிருந்து புரவிகள் பல வரும் ஒலி எழுந்தது. கட்டுக்கடங்காமல் துள்ளிய படியே பெரும் அராபியப் புரவியொன்று முன்னால் வந்தது. செக்கச் செவேலென்ற திடகாத்திரமான, ஆஜானுபாகுவாக அந்தப் புரவியின் மீது அமர்ந்து வெகு அலட்சியமாக அதைச் செலுத்திக் கொண்டு வந்து கொண்டிருந்தார் கிருஷ்ண மல்லர்.

ஆதித்யனும் உடன் இளவரசியும் நிற்பதைக் கவனித்தவர் புரவியிலிருந்து வேகமாகக் குதித்து அவர்களை நெருங்கினார். அவர் இறங்கியதும் முரண்டிய அந்தப் புரவியை ஐந்தாறு வீரர்கள் சிரமத்துடன் இழுத்துச் சென்றனர். ஆதித்யனை நெருங்கி எலும்புகள் நொறுங்கும்படி ஓர் அணைப்பு அணைத்தவர், அருகில் நின்ற இளவரசியை "இளவரசி, வரவேண்டும், வரவேண்டும்" என்று கனத்த வெண்கலக் குரலில் வரவேற்றார்.

அவரது பெரும் உருவத்திற்கு சற்றும் பொருந்தாத சிறிய யானைக் கண்கள் யுவானைக் கண்டதும் சற்றே விரிந்தன.

"அந்தப் பதக்கமும், முகச்சாயலும், உருவமும் அச்சாக இவன் தந்தை யாங்சின்னை உரித்து வைத்திருக்கிறானே...!" அவர் குரலில் வியப்பு ஒலித்தது.

யுவானின் சாயலைக் கண்டு வியந்தது கிருஷ்ணமல்லர் மட்டுமல்ல. சற்றுத் தொலைவில் வரிசையாக அமைந்திருந்த காவலர் இல்லங்களின் முன் நின்று யுவானை உற்றுப் பார்த்த இன்னொருவனும் தான்! அருகிலிருந்த இளவரசியைக் கண்டதும் அவன் முகம் இன்னும் மாறுதலடைந்தது. தான் அந்தக் கோட்டையில் அத்தனை தினங்களாகக் காத்திருந்த வேளை எதிர்பாராமல் வந்துவிட்டதை உணர்ந்து, ஓர் இல்லத்தினுள் நுழைந்து, ஓலையொன்றில் அவசரமாக ஏதோ எழுதமுற்பட்டான்.


(தொடரும்)

"ஏம்மா! பாட சான்ஸ் கிடைச்சிருச்சுன்னு சொல்றியே... எங்கே- வானொலியிலா, டி.வி.யிலா?"

"என்னைப் பெண் பார்க்க வர்றவங்க முன்னாலே!"

– சிற்பிசோமு





பாலம்

●● பாரதியார் பல்கலைக் கழகம் அஞ்சல் வழி கல்வியில் பி.எஸ்ஸி. கம்ப்யூட்டர் விஞ்ஞானம் (ஓராண்டு படிப்பு) சேர்ந்திருக்கிறேன். இதற்கான புத்தகங்கள், வினா-விடைத் தாள்கள், நோட்ஸ் முதலியன வைத்திருப்பவர்கள் விலைக்கோ அல்லது இலவசமாகவோ கொடுத்து உதவவும்.

— எஸ். சுகுமாரன்,
கதவு எண் 9, பிளாட் 38,
சந்தானம்மாள் நகர்,
கௌரிவாக்கம், சென்னை - 601 302.

●● 22.12.95-ல் தி.நகரில் 12G பஸ்ஸில் என் எலக்டிரானிக் கருவி பெட்டியை அருகில் இருந்த ஒரு பெண்மணியிடம் கொடுத்தேன். இறங்கும் போது மறந்துவிட்டேன். அவர் தயவு செய்து தொடர்பு கொள்ளுமாறு கோருகிறேன்.

— கே. ராதா,
2, பக்தவத்சலம் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

●● ஞானரதம் இலக்கிய மாத இதழில் எனது "சவம்" என்ற சிறு கதை பிரசுரமான பிரதி தேவை. உதவவும். செலவு ஏற்கிறேன்.

— பானுமதி பாஸ்கோ,
2, ஜானகி நகர், கணபதி அஞ்சல்,
கோயமுத்தூர் - 641 006.

●● Electronics and Communication பிரிவில் '96 GATE எழுத உள்ளேன். சென்னையில் 'கோச்சிங்' கொடுப்பவர் இருந்தால் தெரிவிக்கவும்.

— ஆர். ஜெயந்தி,
7/4 ஜே.என். சாலை, திருவள்ளூர்,
செங்கை - எம்.ஜி.ஆர். (மா.வ.) - 602 001.

●● மு. அருணாசலம் எழுதிய "பழத் தோட்டம்", ஆக்கூர் அனந்தாச்சார் எழுதிய "டால்ஸ்டாய் சிறுகதைகள்" வைத்திருப்போர் விலை குறிப்பிட்டு எழுதவும்.

— வி.எம். பதி,
B-70, போஸ்டல் காலனி,
பேரூர், கோவை - 10.

●● சென்ட்ரல் எக்ஸைஸ், QBAL, FERA, மற்றும் ஏற்றுமதி சம்பந்தப்பட்ட கருத்துப் பரிமாற்றங்களில் ஆர்வமுள்ளவர்களின் நட்பை விரும்புகிறேன்.

— எஸ். சுந்தரராஜன்,
125, நடராஜபுரம் தெரு,
கோவில்பட்டி - 627 702.

●● BSRB - Probationary Officers' Exam Book மற்றும் 93-94; 94-95 C.S.R. Book உதவுக.

— செல்வி வெங்கடேஷ்,
33-C, வள்ளலார் தெரு,
பெண்ணாடம் - 606 105.

●● AITS - Award - 1992 வாங்கியவர்கள் யாரேனும் இருந்தால் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

— எஸ். ராஜகணேஷ்,
6/14, தி.கோயில் மேல வீதி,
செல்லூர், மதுரை - 625 002.

●● அறிஞர் அண்ணா, அமரர் கல்கி, டாக்டர் மு.வ. தொடங்கி இன்றைய நாவலாசிரியர்கள் வரை பலரது 1500க்கு மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன. பாதி விலைக்குத் தர உத்தேசம்.

— ப. மூர்த்தி,
5, I Cross, Bashyam Nagar,
Sriramapuram, Bangalore - 560 021.

●● "வேலை நிறுத்தங்கள் தவிர்ப்போம், உற்பத்தி பாதிக்காத காந்திய வழியில் உரிமைகளைப் பெறுவோம்" என்ற லட்சியத்தைக் கடைப்பிடிக்கும் ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்க.

— ஆர். காந்திஜி,
திருவனர், அகில இந்திய நோ-ஸ்டிரைக் யூனியன்,
16, பெரியசாமி கோனார் சந்து,
மதுரை - 625 016.

●● பழமொழி நூலும் சதுரகராதியும் பழைய பதிப்புகள் தேவை. விலை குறிப்பிட்டு எழுதவும்.

— கானா கணேசன்,
இலக்கிய இல்லம்,
23, ஆகபத்திரி தெரு,
பொறையாறு - 609 307.

(பாலம் பகுதி மூலம் தொடர்பு கொள்ளும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்கு கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது. - ஆர்)



பாருக்குள்ளே நல்ல சஞ்சய்!

பட்டுத் துணி உடுத்துவது ரொம்ப சுகமான விஷயம்தான். ஆனால் கதரின் முரட்டுக் கதகதப்பில் தனியொரு சௌகரியம் இருக்கிறதல்லவா...?

சஞ்சய் சுப்ரமண்யம்' குரல் இந்த முரட்டுக் கதர் ரகம். அதை என்னமாய் வசப்படுத்தி வைத்திருக்கிறார்!

'நில்!' என்றால் அப்படியே 'அடேன்ஷன்' சொன்னது போல் கார்வையில் நிற்கிறது. 'ஓடு!' என்றால் ஸ்வரங்களைத் தழுவித் தழுவி ஓடுகிறது. 'குதி!' என்றால் உற்சாகம் பற்றிக் கொள்ள தானத்துக்குள் கோலம் போடுகிறது!

டி.கே.ஜே. பவுண்டேஷன் ஆதரவில், மயிலை சீனிவாச சாஸ்திரி அரங்கில் பாடினார் சஞ்சய். மறைந்த டி.கே. ஜெயராமனின் நினைவுக்கு, அந்தக் கச்சேரியைக் காட்டிலும் சிறந்த அஞ்சலி அமைந்திருக்க முடியுமா என்பது சந்தேகம்தான்!

அன்று சஞ்சய் பாடிய தோடியில் அலை கடலின் ஆழம் உணர்ந்தோம் என்றால் ஷண்முகப்ரியாவில் ஆகாசத்தின் அகலம்!

'அடடா... இதற்கு மேல் என்ன இருக்க முடியும் இந்த ராகத்தில்...?' இப்படி சாறாக வடித்துக் கொடுத்து விட்டாரே...!' என்று நாம் வியக்கும் சமயம் பார்த்து, சின்னதாக ஒரு இடைவெளி விடுகிறார் சஞ்சய். தொடர்ந்து, 'இதோ இன்னும் கொஞ்சம் அழகு பாக்கியிருக்கிறது' என்று ஒளித்து வைத்த சில 'பிடிகளை' அவர் எடுத்து விட... திக்குமுக்காடிப் போகிறோம்.

இப்படிப்பட்ட பாடகருக்குப் பக்கவாத்தியம் வாசிப்பது சவால்தான். ஆனால் சவால்களை ஏதோ ஹல்வா சாப்பிடுவது போல் எதிர் கொண்டனர் வயலின் வாசித்த உஷா ராஜகோபாலனும் மிருதங்கம் வாசித்த மன்னார்குடி ஈஸ்வரனும்.

பாடகரின் குதூகலம் பக்க வாத்தியக்காரர்களைப் பற்றிக் கொள்ள, அங்கிருந்து ரசிகர்களுக்கும் பரவ, அவர்களிடமிருந்து மீண்டும் எதிரொலித்துப் பாடகரிடமே திரும்ப... அந்த சின்னஞ்சிறிய அரங்கில் அனைவருக்குமே அன்று மாபெரும் அனுபவங்கள்!


அனுபவங்களின் உச்சம் : சஞ்சய் ஷண்முகப்ரியா ராகம், தானம் பாடிவிட்டு, 'பாருக்குள்ளே நல்ல நாடு, நம் பாரத நாடு' என்ற அடியைப் பல்லவியாக எடுத்துக் கொண்டது. (குடியரசு தினத்துக்கு முதல்நாள் நிகழ்ச்சி!)

தகிநீர் சண்டையையும் ஹவாலா சோகத்தையும் அனுபவித்த போதிலும் பெருமிதமாய் நெஞ்சு நிமிர்ந்து கொண்டது பாட்டை எண்ணி; கண்ணோரத்தில் ஈரம் கசிந்தது.

- சீதா ரவி

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624;
சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

டிட்டி ®



பனியன்கள்


ஜட்டிகள்

பேண்டீஸ்

மற்றும்

T. ஷர்ட்ஸ்





குழந்தைகளுக்கென்றே
பிரத்யேகமான ஆடை வகைகள்!

H.O.	:	DITTY HOSIERIES, P.B. NO. 410, TIRUPUR. Ph : 21611
Madras	:	DITTY KNITTERS, STN Road, West Mambalam. Ph : 483 9816
Madurai	:	DITTY HOSIERIES , 157 South Masi St., Madurai - 625 001
Bangalore	:	DITTY KNITTERS, Cubbonpet, Bangalore - 2. Ph : 2216208

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

